பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 04 ஞாயிற்றுக்கிழமை (19.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 023

# போர்க் குற்ற ஆதாரங்களைப் பகிர

# ஐ.நா.நிபுணர்குழு இலங்கை வரும்

## எதிர்ப்பைக் கைவிட்டு இணங்கியது அரசு

கொழும்பு, டிசெம்பர் 19

**இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்கு என்று நியமிக்கப்பட்டுள்ள மூன்று பேரடங்கிய நிபுணர் குழு இலங்கைக்கு வருகை தரவுள்ளது. இந்தக் குழுவுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்த இலங்கை அரசு, தற்போது குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு இணங்கி உள்ளது.**

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன என்று பரவ லான குற் றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது தொடர்பில் அனைத்துலக சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் குழுக்கள் வலியுறுத்தி வருகின்றன.

அதிகரித்த அழுத்தங்களை அடுத்து கடந்த ஜூலை மாதத்தில் நிபுணர் குழு ஒன்றை பான் கீ மூன் நியமித்தார். நிகழ்ந்திருக்கக் கூடிய போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து ஆலோசனை வழங்கும் பணி அதற்கு வழங்கப்பட்டது.

கடந்த 15ஆம் திகதியுடன் முடிவடைந்த நிபுணர் குழுவின் பதவிக் காலம் இம்மாதம் 30ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் எழுத்து மூலச் சாட்சியங்களை அளிப்பதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**பான் கீ மூன் கருத்து**

இந்த நிலையில், நிபுணர் குழு தனது விசாரணைகள் தொடர்பாக இலங்கைக்குப் பயணிக்கும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். (31 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நிபுணர் குழு இலங்கை வர ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

### சூளுரைக்கிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, டிசெ. 19

ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்குள் வருவதற்கு ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்று சூளுரைத்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

"பான் கீ மூனின் மூவர் குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கான எந்த முகாந்தரமும் இல்லை. அவர்கள் உள்ளே வந்தார்களாக இருந்தால் அவர்களுக்கு எதிராக முழு நாட்டு மக்களும் திரண்டு எழுந்து ஆர்ப்பாட்டம் செய்வார்கள்'' என்றார் விமல்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற பெயரில் நாட்டில் இயங்கி வரும் 'மாபியா' கும்பல்கள் தேவையான அளவு பொய்ச் சாட்சிகளைத் தயார்ப்படுத்தி, நிபுணர் குழு முன்பாகச் சாட்சியமளிக்க வைத்து விடும் என்றும் அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

"நிபுணர் குழுவின் வருகையானது, அரசுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் சோடிக்கப்பட்ட பொய்ச் சாட்சியங்களை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கிவிடும். இது எதிரிகளின் நோக்கங்களை நிறைவேற்ற வழிவகுக்கும்'' - என்றும் விமல் மேலும் தெரிவித்தார். (உ)

## கூட்டமைப்பு வரவேற்பு

ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கைப் பயணம் பற்றிய தீர்மானத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள காரணத்தினாலேயே அரச ஐ.நாவின் முடிவுக்கு இணங்கி உள்ளது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

"நூற்றுக்கணக்கான மக்கள், தமக்கிழைக்கப்பட்டுள்ள அநீதிகள் பற்றி இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக் குழுவிடம் ஏற்கனவே முறையிட்டுள்ளனர். இத்தகைய நிலையில் ஐ.நா. நிபுணர் குழு இலங்கை வந்து ஆணைக் குழுவை சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது முக்கியமான விடயம்'' என்று அவர் சுட்டிக்காட்டினார். (உ)

### சங்கானைச் சூட்டுச் சம்பவம்;

## கைதான இரு சிப்பாய்கள் உட்பட நால்வரும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசெ. 19

சங்கானையில் கடந்த 11ஆம் திகதி ஆலயக் குருக்கள் அவரது இரு மகன்மார்கள் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு படையினர் உட்பட நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி ஆயுதங்களுடன் நுழைந்த குழு மேற்கொண்ட தாக்குதலில் சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி ஆலய பிரதம குருவான நித்தியானந்தக் குருக்கள் மற்றும் அவரது இருமகன்மாரும் காயமடைந்துள்ளனர். அவர்களில் நித்தியானந்தக் குருக் (31 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நிபுணர் குழுவுக்கு 1,100 சாட்சியங்கள் தபாலில்

கொழும்பு, டிசெ. 19

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் மின் அஞ்சல் மற்றும் விரைவுத் தபால் மூலம் 1,100 சாட்சியங்கள் ஐ.நா. நிபுணர் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதற்கு மேலதிகமாக, நோர்வே, பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்தும் சாட்சியங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, உரிய காலத்திற்குள் அனுப்பி வைக்கப்படாத ஆவணங்களை ஐ.நா. நிபுணர் குழு திருப்பி அனுப்ப வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

சிங்கர் வழங்கும் நத்தார் வெகுமதி.....!

❄ வரவு செலவு திட்டத்திற்கு பின்னரான பொருட்களின் விலைக்குறைப்பு

* SINGER LCD TV கள் 36,999/= ல் இருந்து
* SAMSUNG LCD TV கள் 36,999/=ல் இருந்து
* PHILIPS LCD TV கள் 66,999/=ல் இருந்து
✧ LED, 3D தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்திய SAMSUNG TVகளை ஓடர் செய்து பெற்று கொள்ளலாம்.

* SINGER, SAMSUNG, PHILIPS DVD Player கள் 7,999/= ல் இருந்து

* SINGER குளிர்சாதன பெட்டிகள் 28,999/= ல் இருந்து
* SISIL குளிர்சாதன பெட்டிகள் 29,999/= ல் இருந்து
* SAMSUNG குளிர்சாதன பெட்டிகள் 37,199/= ல் இருந்து
✧ மற்றும் பனிபடியாத WHIRLPOOL குளிர்சாதன பெட்டிகள்

* SINGER, SAMSUNG, குளிரூட்டிகள் 53, 999/= ல் இருந்து

❄ விசேட விலைக்கழிவுகள்

☆ WHIRLPOOL, SINGER, SISIL அதி குளிரூட்டிகளுக்கு (Deep Freezers) 8000/= வரை விலைக்கழிவு

☆ SINGER, TCL, SAMSUNG, UNIC தொலைக்காட்சி பெட்டிகளை பழைய தொலைக்காட்சி பெட்டி ஒன்றை கொடுத்து 2500/= வரை விலைக்கழிவை பெற்றுக் கொள்ளவும்

☆ சிங்கர் மடிக்கணணிகளுக்கு 5000/= வரையான விலைக்கழிவு

☆ கைனடிக் சபாரி (KINETIC SAFARI) மோட்டர் சைக்கிள்களுக்கு பெறுமதி மிக்க DVD PIAYER ஒன்று இலவசம்

❄ வட்டியின்றி இலகு தவணை கொடுப்பனவு

* வட்டி இன்றிய இலகு தவணை கொடுப்பனவு முறையில் கொள்வனவு செய்திட

☆ SINGER, TCL தொலைக்காட்சி பெட்டிகள் 26,999/= இல் இருந்து

☆ SINGER மடிக்கணணிகள் 47, 999/= இல் இருந்து

☆ பனிபடியாத SINGER,SISIL. குளிர்சாதனப் பெட்டிகள் குறைந்த தவணைக் கட்டணத்தில்

சனசும

3 வருட நீடித்த உத்தரவாதம்

இவ் அனைத்து பொருட்களுக்கும் 3 வருட நீடித்த உத்தரவாதம்

சிங்கர் "சனசும" 3 வருட உத்தரவாதப் பத்திரம், சிங்கர் இனால் வழங்கப்படும் ஒரு வருட உத்தரவாதத்திற்கு மேலதிகமாக இன்னும் இரு வருடம் நீடிக்கப்பட்ட உத்தரவாதத்தினை வழங்கும் சேவையாகும்.

இச் சேவையின் மூலம் 3 வருடகாலத்திற்குள் இலவச உதிரிப்பாகங்கள் மற்றும் துரித பழுதுபார்ப்பு சேவையையும் பெற்றுக் கொள்ள முடியும்.

சிங்கர் இல் பண்டங்களை கொள்வனவு செய்து மனதிற்கோர் நிம்மதியை பெற்றிடுங்கள்.

சனசும
மனதிற்கோர் நிம்மதி

சிங்கர்
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | கே.கே.எஸ் வீதி சுன்னாகம் | ஆலடிச் சந்தி மானிப்பாய் | பருத்தித்துறை வீதி நெல்லியடி | கண்டி வீதி சாவகச்சேரி |
| 021 222 5408 | 021 222 4389 | 021 224 0555 | 021 225 5343 | 021 226 4937 | 0779508957 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்.கோட்டையினுள் காணப்படும் வீடுகள் அனைத்தும் புனரமைக்கப்படும்

## நெதர்லாந்து தூதுவர் நேரில் பார்வையிட்டு உறுதி

யாழ்ப்பாணம், டிசெ.19

ஒல்லாந்தரால் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணத்துக் கோட்டையினுள் சுற்றியிருக்கின்ற வீடுகள் புனரமைப்புச் செய்யப்படும் என்று நெதர்லாந்து நாட்டின் தூதுவர் குலோனிநாரா தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கோட்டையின் சுற்றுப்புறங்களில் உள்ள ஒல்லாந்துக்கால வீடுகளைப் பார்வையிட்ட பின் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் துறையினரும் நெதர்லாந்து பொறியியலாளர்களும் இணைந்து கோட்டையில் உள்ள வீடுகளைப் புனரமைத்துப் பாவனைக்குரிய வீடுகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்-

யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஒல்லாந்துக்கால வெளிச்சவீடுகள் போன்ற தொல்லியல் எச்சங்களையும் தொல்லியல் சின்னங்களாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தூதுவர் குலோனி நாரா கூறினார்.



யாழ்.கோட்டைப் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிடுகிறார் நெதர்லாந்துத் தூதுவர்

இதே வேளை தொல்லியல் திணைக்களத்தில் இடம்பெற்ற கூட்டத்திலும் அவர் பங்கு கொண்டார். அக் கூட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் திணைக்கள பட்டதாரிகளை நெதர்லாந்தில் பயிற்சிபெறுவதற்கு வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற கோரிக்கையை யாழ்.பல்கலைக்கழக தொல்லியல்துறை பேராசிரியர் எஸ்.புஸ்பரட்ணம் முன்வைத்தார்.

இக் கோரிக்கையைத் தாம் சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் அதற்குரிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறும் தூதுவர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையில் யாழ். மாநகர சபை மேயர் யோகேஸ்வரி பற்குணராஜாவையும் தூதுவர் சந்தித்து கலந்துரையாடினார். (ஒ-319)

# நல்லூர் ஆலயச் சூழலில் தற்போது பிச்சை எடுப்பவர்களுக்குக் கொடுப்பனவு

## துப்புரவுப் பணி செய்து ரூபா 100 ஐ பெறலாம்

யாழ்ப்பாணம், டிசெ.19

நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில் பிச்சை எடுப்பவர்களைக் கொண்டு அப்பகுதியைத் துப்புரவு செய்வதன் மூலம் அவர்களுக்கு நாளொன்றுக்கு நூறு ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிச்சை எடுக்கும் செயற்பாடானது கவலைக்குரியது, அவ்வாறு பிச்சை எடுப்பவர்களுக்கு உழைக்கவேண்டும் என்கின்ற உந்துதலை ஏற்படுத்தும் நோக்கில் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைய இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நல்லூர்ச் சூழலில் பிச்சை எடுப்பவர்கள் மாதமொன்றுக்கு 3 ஆயிரம் ரூபாவினைப் பெற்றுக்கொள்ளமுடியுமென்றும்- அச் சூழலில் தற்போது அமைக்கப்பட்டுள்ள கடைகளில் இருந்து பெறப்படுகின்ற வரிப்பணத்தின் மூலம் இவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கமுடிவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-9-7)

# வவுனியாவில் குண்டு பொருத்தப்பட்டமோ.சைக்கிள் மீட்பு

வவுனியா, டிசெ. 19

புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து வெடிகுண்டு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று வவுனியா பாவற்குளம் பிரதேசத்தில் வைத்து மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன் எரிபொருள் தாங்கியிலேயே வெடிகுண்டு பொருத்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. (ஒ)

# வடக்கு, கிழக்கிலுள்ள சரணாலயங்கள் விரைவில் அபிவிருத்தி செய்யப்படும்

## அமைச்சர் சந்திரசேன தகவல்

கொழும்பு, டிசெ. 19

வடக்குக்கிழக்கிலுள்ள சரணாலயங்களை அபிவிருத்தி செய்வதற்கு வன விலங்குகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மடு, சுண்டிக்குளம், பரதீவு, பதவிய ஆகிய பகுதிகளிலுள்ள சரணாலயங்களே இவ்வாறு அபிவிருத்தி செய்யப் படவுள்ளன என கமநல சேவைகள் மற்றும் வன விலங்குகள் அமைச்சர் எஸ். எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாதுகாக்கப்பட்ட காடுகளின் எல்லைகளைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதவிர யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படும் பிரதேசங் களில் மின்சார வேலிகளை அமைப்ப தற்கான திட்டங்களைச் செயற்படுத்தவும் எண்ணியுள்ளது எனக் கமநல சேவைகள் மற்றும் வன விலங்குகள் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கென 40 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். (சி)

# கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நாளைமறுதினம் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவிருந்த அராலி - பொன்னாலை வரையான உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்பு தொடர்பில் பயனாளிகளுடனான உறு திப்படுத்தல் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. தொடர்புடையவர்களைக் கலந்துகொள்ளுமாறு வலி. மேற்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (201)

# தேசிய பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கற்பிக்க 1,500 ஆசிரியர்கள் நியமனம்

## அடுத்த மாதம் வழங்கப்படும் என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, டிசெ.19

தேசிய பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. (உயர்தர) தரத்தில் ஆங்கில மொழி மூலம் கற்பிக்க 1,500 ஆசிரியர்கள் அடுத்த மாதம் நியமிக்கப்படவுள்ளனர்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இத் திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக கடந்தவாரம் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு களில் கல்வி கற்பிப்பதற்கான 500 ஆங்கில மொழிமூல ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

ஆங்கிலம் மொழி மூலம் கணிதம், வணிகம், கணக்கியல், பௌதீகவியல் இரசாயனவியல் மற்றும் அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாக தமக்கு பாடசாலை நிர்வாகத்தினரும், பெற்றோரும் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

ஏனைய தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளில் ஆங்கில மொழி மூல வகுப்புகளை நடத்துவதற்கு தேவையான ஆசிரியர்கள் தேசிய பாடசாலை உட்பட சகல அரசாங்க பாடசாலைகளிலும் போதியளவு இருக்கின்றார்கள்.

ஆங்கிலம் மூலம் சகல பாடங்களையும் கற்பிப்பதற்கான ஆசிரியர்களின் பற்றாக்குறையை அமைச்சு விரைவில் பூர்த்தி செய்யும்.

நாடெங்கிலும் உள்ள அரசாங்க பாடசாலைகளில் தற்போது 42 லட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக 225,000 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் - என்றார். (ஒ-ஐ)

## தேசிய பாதுகாப்பு தின விழாவுக்கு வரும்

# ஜனாதிபதியை கவரும் விதத்தில் நகரில் அலங்கார ஊர்திப் பவனி

## வீரசிங்கம் மண்டபமும் மெருகூட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், டிசெ.19

ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டு யாழ்.நகரில் பிரமாண்டமான அலங்கார வாகன ஊர்திப் பவனி ஒன்றை நடத்துவற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 26 ஆம்திகதி கொண்டாடப்படவிருக்கும் தேசிய பாதுகாப்பு தின விழாவில் ஜனாதிபதி பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

சுனாமி இயற்கை அனர்த்தத்தை சித்தரிக்கும் வகையில் இந்த அலங்கார ஊர்திப் பவனி இடம்பெறும்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கின் முன்பாக ஆரம்பிக்க இருக்கும் இந்த ஊர்திப் பவனியை ஜனாதிபதி தொடக்கி வைப்பார்.

இந்த ஊர்தியை குடாநாட்டின் பல்வேறு நாடுகளுக்கும் ஊர்வலமாக கொண்டுசெல்லப்படுவதற்கும் ஏற்பாடுகள்மேற் கொள்ளப்பட்டுள்ளன.

அதே சமயம் குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களும் இந்த வாகன ஊர்தி பவனியை நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதே வேளை-

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு யாழ். வீரசிங்கம் மண்டபத்தை மெருகூட்டும் பணிகளும் துரித மாக இடம்பெற்று வருகின்றன.



யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு வந்தது யோகம்...

மண்டபத்திற்கு வர்ணம் தீட்டப்பட்டுவதோடு மண்டப நடைபாதைக்கு 'காப்பற்' போடும் பணிகளும் இடம் பெற்றுவருகின்றன.

அதேசமயம் மண்டபத்துக்கு குளிரூட்டி வசதிகளை ஏற்படுத்துவதற்கும் புனரமைப்புப் பணிகளும் யாழ். செயலகம் ஒதுக்கிய ஐந்து மில்லியன் ரூபா போதாது என்று கூட்டுறவுச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

முற்றவெளிப் பகுதியைத் தூய்மையாக்கும் பணிகளும் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன. (ஒ-26)

# வன்னிப்பகுதிக்குச் செல்ல முடியாத ஆசிரியர்கள் தகுந்த காரணங்களை எழுத்து மூலம் அனுப்புங்கள்

## ஆசிரியர் சங்கச் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.19

வன்னிப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியாத நிலையிலுள்ள ஆசிரியர்கள் எழுத்து மூலமான தகுந்த காரணத்தை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் உடனடியாக அனுப்பி வையுங்கள். அந்தக் கடிதத்தின் பிரதியை மாவட்ட செயலாளருக்கும் அனுப்புங்கள்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஏனைய பகுதிகளில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளன. இடமாற்றம் பெறவுள்ளவர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றத்துக்கென அறிவிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 170 ஆசிரியர்களுக்கும் மன்னாரில் 25 ஆசிரியர்களுக்கும் வவுனியாவில் 140 ஆசிரியர்களுக்கும் இவ்வாறு இடமாற்றத்துக்கான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு ஆகிய பகுதிகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் இவர்களைக் கொண்டு நிரப்பப்படவுள்ளன. இந்த இடமாற்றம் ஆசிரிய நியமன நிபந்தனைக்கு முரணானதாகும்.

இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியாதவர்கள் உடனடியாகத் தகுந்த காரணத்தை அனுப்பி வைக்கவும். மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரை விரைவில் சந்தித்து ஆசிரியர்களது பிரச்சினை தொடர்பகாக கலந்துரையாடவுள்ளேன்.

எனவே ஆசிரியர்கள் அனுப்பும் கடிதமானது கலந்துரையாடலுக்கு மிகவும் உதவுவதாக இருக்கும் என்றார். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளின் மறுப்பு அறிக்கை

கொழும்பு, டிசெ.19

இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லையென்று விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ''தலைமைச் செயலகம், விடுதலைப்புலிகள், தமிழீழம்'' என்ற முகவரியுடன் கூடிய 18.12.2010 திகதியிட்ட மறுப்பு அறிக்கை இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி ஆகியோரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் கொல்லத் திட்டமிட்டுள்ளார்கள் என இந்திய புலனாய்வுத் துறையினரால் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக வரும் செய்திகளை முற்றாக மறுப்பதுடன் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிங்களப் பேரினவாத அரசு தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட காட்டுமிராண்டித் தனமான படுகொலைகளைக் கண்டித்து மனிதநேயமுள்ள நாடுகளும் அமைப்புக்களும் போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ள இக்காலப் பகுதியில் எமது போராட்டத்தின் நியாயத்தை மழுங்கடிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் பொய்ப் பரப்புரையின் ஒருபகுதியாகவே இச்செய்தியை நாம் பார்க்கின்றோம்.

கடந்த ஆண்டு மே மாதம் 17 ஆம் நாளன்று ஆயுதங்களை மௌனிப்பதாக நாம் வெளிப்படையாக அறிவித்திருந்தோம்.

ஜனநாயக வழியிலான மக்கள் எழுச்சியின் பலனாக எமது போராட்டத்துக்கு அனைத்துலக ரீதியில் எழுந்துவரும் ஆதரவையும் தமிழ் மக்களது அரசியல் - இராஜதந்திர நகர்வுகளையும் தகர்த்து, தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதவழியில் மட்டுமே நாட்டங்கொண்டது என்பதைக் காட்டுவதற்கு சிறிலங்கா அரசு பல சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்பதை நாம் நன்கு அறிவோம்.

இத்தீய எண்ணங்கொண்ட சிங்கள அரசின் அணுகுமுறைக்குத் துணைபோகாமலும் அவர்களின் சதிவலைக்குள் வீழ்ந்துவிடாமலும் இருக்க வேண்டுமென்று இந்திய, தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களையும் மக்களையும் அன்போடு வேண்டிநிற்கின்றோம்- என்றுள்ளது. (ஒ)

# இலங்கையின் போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும்

## அமெரிக்க பிரதிநிதிகள் ஹிலாரி கிளின்ரனிடம் கோரிக்கை

வாஷிங்ரன், டிசெ. 19

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச தரத்தைக் கொண்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனிடம் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட் சபையின் 17 உறுப்பினர்களும் பிரதிநிதிச் சபையின் 30 உறுப்பினர்களும் இணைந்து அனுப்பியுள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

இந்தப் போர்க்குற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்துவரும் விசாரணைகளை அமெரிக்கா அவதானிக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் போர்க்குற்ற ஆணைக்குழுவின் விசாரணைகளுக்குச் சமாந்தரமாக சர்வதேச விசாரணைகளும் இடம்பெறுவதாக ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்த வேண்டும்.

எந்த ஒரு குற்றங்களும் உறுதிப்படுத்தப்படாவிட்டால், அங்கு நம்பிக்கை மற்றும் உண்மைத் தன்மை இல்லாது போய்விடும் உண்மைத்தன்மை இல்லாத நிலையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சமாதான முயற்சியும் தோல்வியடையும் என்பதே வரலாறு. இலங்கையிலும் மற்றும் ஒரு சமாதான தோல்வி ஏற்படுவதை ஏற்க முடியாது - என்றுள்ளது. (ஒ-ஐ)

# படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 5 ஈழத் தமிழர்கள் சென்னையில் கைது

சென்னை, டிசெ. 19

இந்தியாவில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குப் படகுமூலம் செல்ல முயற்சித்த இலங்கைத் தமிழர்கள் ஐந்துபேரைத் தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது :-

சென்னையில் ஈச்சம்பாக்கம் அருகே வாகனத்தை நிறுத்திவிட்டு இலங்கைத் தமிழர்கள் பேசிக்கொண்டிருந்தபோது அவர்களின் நடவடிக்கை குறித்து சந்தேகமடைந்த பொலிஸார் ஐந்து பேரையும் கைதுசெய்தனர்.

ராஜா, ராஜீவ்காந்தன், உதயகுமார், ரோஜ்மரியா, சுரேஸ்குமார் ஆகியோரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் என்று தெரியவந்துள்ளது.

சென்னையைச் சேர்ந்த பிரகாஷ் என்பவர் தலா 80 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டு தங்களைப் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி எங்களை இங்கு வரவழைத்தார் என்று அந்த ஐவரும் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

கைதுசெய்த ஐவரையும் பொலிஸார் கியூ பிரிவினரிடம் ஒப்படைத்தனர். ஆஸ்திரேலியா அனுப்புவதாகக் கூறி இவர்களிடம் தலா 80 ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டு தலைமறைவாகியுள்ள பிரகாஷ் என்பவரைப் பொலிஸார் வலைவிரித்துத் தேடிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9)

# மட்டு.,வவுணதீவில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு நேற்றுமுன்தினம் மின் விநியோகம்

யுத்தத்தால் இடம்பெயர்ந்து வவுண தீவு மற்றும் மட்டக்களப்பு துலாமடு ஆகிய பகுதிகளில் மீள்குடியேற்றப் பட்ட மக்களுக்கு நேற்றுமுன்தினம் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மஹிலவட்டுவான் பிரதேசத் தில் மீள்குடியமர்த்தப்பட்ட சுமார் 300 குடும்பங்களுக்கும், மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட துலாமடு பிரதேசத்தில் மீள்குடியமர்த் தப்பட்ட 90 குடும்பங்களுக்கும் இவ்வாறு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 கோடி 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இவ்விரு மின்சார திட்டங்களை மீள்குடியேற்ற பிரதியமைச்சர் [illegible] நேற்றுமு[illegible] (வி)



# சந்தியடிச் சோமு

## நீக்கலுக்குள்ளால் லீக் ஆகுது

திருவெம்பாவைக் காலமெல்லோ, சுற்றிவர இருக்கிற கோயில் 'ஸ்பீக்கர்' எல்லாம் விடியக் காத்தாலேயே இரையத் தொடங்கிடுதுகள். நானும் நித்திரை வராமல் எழும்பி வளவு வாய்க்கால் எல்லாம் கூட்டிப்போட்டு பாண் வாங்கப் போகேக்க அதில தொங்கிற பேப்பருகள ஒருக்கா மேய்ஞ்சு போட்டுவாறனான். அதுகளில பாத்ததில இருந்து ஒரு விசயம் தெரிஞ்சுது எனக்கு.

இப்ப கொஞ்ச நாளா உலகம் முழுக்க கதைக்கிற விசயம், யாரோ ஒருத்தன் அமெரிக்கா இராஜதந்திரியள் எழுதின கடிதாசியளை வைச்சுக் கொண்டு எல்லா நாட்டு இரகசியத் தகவல்களையும் பகிரங்கப்படுத்திறான் என்டதுதான்.

இதுகளப் பாத்திட்டு, கானமயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி கணக்கா அமைச்சர் விமலும் ஒரு விசயத்தை லீக் பண்ணப் போக அது பெரிய விவகாரமா மாறிப் போச்சு. ஐ.நா.வுக்கு முன்னாலையும் தூதரகங்களுக்கு முன்னாலையும் ஆர்ப்பாட்டங்கள் நடத்திறதோட நிக்காமல் அவர் கசிய விட்ட தகவல், இனிமேல் தமிழிலை தேசிய கீதம் பாடக் கூடாது எண்டு அமைச்சரவை முடிவு எடுத்திருக்கு எண்டதுதான்.

ஒரு பக்கத்தில தமிழைச் செம்மொழி எண்டு கொண்டாட, பக்கத்து நாட்டிலயோ தமிழில தேசிய கீதம் பாடவே தடை. இவர் விமல் 'லீக்' பண்ணின விசயத்தால இஞ்ச நொந்து கிடந்த மனங்கள் எல்லாம் மேலும் ரணகளமாகிப் போயிட்டுது பாருங்கோ. தொடர்ந்து பெய்த மழையால வீடுகளுக்குத்தான் ஒழுகுது, தண்ணி வருகுது எண்ட பிரச்சினையெண்டால் இவங்கள் 'லீக்' பண்ணுறதுகளாலயும் மனிசர் இஞ்ச இருக்க ஏலாமல் கிடக்குது.

பின்னேரத்தில 'கொட்டிலுக்க' நாங்கள் சந்திச்சுக் கொள்ளேக்க எல்லாம் இதப் பற்றித்தான் கடுமையான, காரசாரமான விவாதம் பாருங்கோ. ''தமிழில இருக்கிற தேசிய கீதத்தையே எங்கடை எண்டு நாங்கள் நினைக்கிறதில்ல. போதாக்குறைக்கு இவன் பாவி அதச் சிங்களத்தில மட்டும் பாடச் சொன்னால் அது இன்னும் அன்னியப்பட்டுப் போயிடும் எண்டு இவங்களுக்கு ஏன் புரியுதில்லை'' எண்டு அரை மயக்கத்தில கதிரண்ணை புலம்பினார். ''அப்பவே அவனொருத்தன் சொன்னதைக் கேட்டிருந்தால் நாடு இப்பிடிக் கெட்டு குட்டிச் சுவராகி இருக்காது'' எண்டு கனகண்ணரும் பொருமினார்.

அவர் என்னத்தைச் சொல்லுறார் எண்டு விளங்காமல் நாங்கள் முழிக்க, அந்தாள் சொல்லிச்சு – ''ஒரு மொழி எண்டால் இரு தேசம்; இரு மொழி எண்டால் ஒரு தேசம்' அந்த மனுசன் எப்பவோ சொல்லிப் போட்டுது. இவர் விமலும் பிக்குமாரும் இப்பவும் விடாக்கண்டனாநிக்கினம். இது இன்னும் இன்னும் பிரச்சினையைத் தீவிரமாக்குமே தவிர ஒண்டையும் சரிப்படுத்த உதவாது.''

பிறகுதான் அறிஞ்சன், உப்பிடி ஒரு முடிவு எடுத்தால் அதுக்கு 'றியாக்ஷன்' எப்பிடி இருக்கும் எண்டதை அறியத்தானாம் விசயத்தை முதலே 'லீக்' பண்ணினவையாம். எழும்பின சர்ச்சையளைப் பாத்து இப்போதைக்குச் சமாளிச்சுப் போட்டாலும் அவையின்ர ஒரே நோக்கம் ஒரு மொழிதானாம்.

உதுகளப் பற்றி சந்தியில நிண்டு நாங்கள் கனக்கப் பொருமிப் போட்டம். ஒண்டும் நடந்த மாதிரி இல்லை. இருந்தாலும் மனசு கேக்காமல் திரும்பத் திரும்பக் கதைச்சுக் கொண்டிருக்கேக்க கம்பஸ்கார மனுசன் வந்திட்டார். ''என்ன சோமண்ண, நான் சொன்னதுகளையும் போன கிழமை பேப்பரில போட்டிருக்கிறியள் போல'' எண்டு கேட்டுக் கொண்டே வந்த அவர், இப்ப 'பேமஸா' இருக்கிற 'லீக்' விசயங்கள் பற்றியும் கொஞ்சம் சொன்னார்.

''கதையளை 'லீக்' பண்ணி நோட்டம் பாக்கிற விளையாட்டுக்கள் பெரிய பள்ளிக்கூடத்திலயும் அதுதான் கம்பஸிலயும் நடந்திருக்கு'' எண்டு அந்த மனுசன் சொன்னார். 'வி.சி. எலக்ஸனில' ஒருத்தர் தெரிவாகிட்டார் எண்டு ஒரு கதை கடுமையாக் கசிய விடப்பட்டுதாம். அந்த அமளியில ரெண்டு நாள் அங்க எல்லாரும் கதிகலங்கிப் போச்சினமாம். பிறகு பாத்தால் ஒண்டும் அறுதியான முடிவு வரேல்ல எண்டு சொல்லிச்சினமாம்.

செய்தியளை 'லீக்' பண்ணி அவனொருத்தன் அமெரிக்காக்காரனை ஆட்டிப் படைக்கிறான் எண்டால் (லைட்டா தியேட்டரும் ஆடுதாம் எண்டு கேள்வி), இஞ்சையும் 'லீக்'குகளால ஒரே சில்லெடுப்பாத்தான் கிடக்கு. சரி என்னதான் விசயம் எண்டு பேப்பர்காரப் பெடியனைப் பிடிச்சுக் கேட்டன், ''என்னடா நடக்குது உள்ளுக்கை?'' எண்டு. ''இப்ப ஒண்டும் கேக்காதை அண்ணை. இந்த நாட்டில ஒரு கம்பசுக்கும் இல்லாத கூத்தா கனக்க நடந்திருக்கு எல்லாம் விலாவாரியா ஒண்டு விடாமல் உனக்குச் சொல்லுறன் 'வெயிட்' பண்ணு'' எண்டு சூட்டக் கிளப்பி விட்டுட்டுப் போட்டான் அவன். இனி என்ன செய்யிறது 'வெயிட்' பண்ணித்தான் பாக்க வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### மயில்வாகனம் சுந்தரலிங்கம்



(J/66, கிராம அலுவலர், ஈச்சமோட்டை)

அவர்கள் 14.12.2010 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**க.தேவராஜா,**
*8/1, விதானையார் வீதி, கண்டுக்குழி.*

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் பூரணம்

(ஓய்வு பெற்ற மருத்துவ மாது)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் செபமாலை மாதாகோயில் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் பூரணம் 17.12.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இ.மாணிக்கம் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து, சின்னத்தங்கச்சி, சின்னம்மா, மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிஸ்கந்தராசா, வேல்வரராணி(மகளிர் அபிவிருத்திப் போதனாசிரியர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்துறை), லுகிர்தராணி (ஆசிரியை, தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை), தயாராணி (ஆசிரியை, மயிலிட்டி கலைமகள் வித்தியாசாலை), திருஸ்கந்தராசா(ரூபன், மாருதி றெடிமிக்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனோறஞ்சினி, நல்லகுமார் (ஆசிரியர், ஏழாலை புனித றோ.க.த. பாடசாலை), ஜெனிஸ்வரன், ஆனந்தராசா, விமலாவதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜந்திகா, அற்கவின், மனோஜன், கஜனி, தனுசிகா, வினுசிகா, ஜஸ்மிகா, டிசாந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (20.12.2010) திங்கட்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செபமாலை மாதா கோயில் வீதி,*
*உடுவில்.* (107622)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## பொதுக்கூட்டம்

சங்கானை, டிசெ.19

சங்கானை வர்த்தகர், கைத்தொழில் உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்குப் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வலி.மேற்குப் பிரதேச செயலக அபிவிருத்திக் குழு உறுப்பினருமான மு.சந்திரகுமாரும், பிரதேச செயலர் திருமதி பாபு தேவநந்தினியும், சுழிபுரம் பிரதேச செயலர் சு.புத்திரசிகாமாணியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு, ரூபா இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பெறுமதியான சுயமுயற்சிக் கடன்திட்டம், வலி.மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பாலர் பாடசாலைகளின் அபிவிருத்தி, பிரதேச செயலரின் அனுமதியுடன் சங்கத்தின் விளம்பரப் பலகையை மீண்டும் ஏற்படுத்துதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது. (ற-29)

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு

வவுனியா, டிசெ.19

வவுனியா மாவட்டத் தொழிற் காரியாலயத்தில் நஷ்டஈடு பெறுவதற்குப் பெயர் பதிவு செய்த லங்கா உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான காசோலைகள் வழங்கப்படவிருக்கின்றன.

எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் வவுனியா உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து இந்தக் காசோலைகள் வழங்கப்படும். உரியவர்கள் காரியாலயத்திற்குச் சமுகம் தந்து தமக்குரிய காசோலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வவுனியா உதவித் தொழில் ஆணையாளர் சோ.நகுலேஸ்வரம்பிள்ளை கேட்டுள்ளார். (க)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 1938.06.28

மறைவு : 2008.12.10

### அமரர் மீனாட்சியம்மா சந்தரசேகரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)



அம்மனின் அருளாட்சி விளங்குகின்ற
அல்வாய் திருப்பதி தனிலே
அவதரித்த எங்கள் குலதெய்வமே
ஆண்டிரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம்துயரம்
அகிலத்தின் புனிதத் தொழிலாம்
ஆசிரியத் துவத்தினிலே
அனைவருக்கும் அறிவுரைகள் புகட்டி
அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
அனைவரது உளங்களிலும் வாழ்ந்தீர்கள்
எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும்
உங்கள் அன்பு வார்த்தைகள்
எம்மை வாழவைக்கும் அம்மா
அம்பாளின் அடியினில் இனிதிருக்க
இறைஞ்சுகின்றோம் அவள் பாதம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*சின்னாலடி,*
*அல்வாய்.*

*உங்கள் நினைவில்:*
கணவர், சகோதரர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னுத்துரை பாக்கியம்



கையிலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை பாக்கியம் நேற்று (18.12.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், சண்முகநாதன், விக்னேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் தம்பிப்பிள்ளை நாகம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கைலாசபிள்ளையார் கோயிலடி,*
*நல்லூர்.*
T.P- 0212226265.

தகவல்:
**விஜயலட்சுமி**
*(மகள் - குஞ்சு).*

### சின்னவி தம்பையா

''கர்த்தருக்குள் மரித்தவர்கள் பாக்கியவான்கள்''



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவி தம்பையா 17.12.2010 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - லில்லியின் அன்பு மருமகனும் குலநாயகியின் (சின்றில்லா, ஓய்வுபெற்ற மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோகத்தர்) அன்புக் கணவரும் சுஜீவன் (சுஜி), சாமந்தி (சாமா), வானுதன் (மெனா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்ரர் ஜோசேப், ஆதர் ஜோன்சன், ஆன் கியூரி ஆகியோரின் அன்பு மாமனும் ஜொஷானின் எசெயிலின் அன்புப் பேரனும் பாக்கியம், கந்தையா, நாகம்மா (மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை), சரஸ்வதி, காலஞ்சென்ற சுப்பையா மற்றும் நல்லம்மா (மங்கு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை அன்னாரின் ''ஈடின்'', உடுவில் வடக்கு இல்லத்தில் நாளை (20.12.2010) திங்கட்கிழமை பி.ப.1.30 மணிக்கு நடைபெற்று, உடுவில் அப்போஸ்தல சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''ஈடின்''*
*உடுவில் வடக்கு.*
*021 300 8474, 0016479800562, 0016478276919*

தகவல்:
**குடும்பத்தினர்.**

### ஏலாளசிங்கம் ஜெயகீர்த்தி



திருநெல்வேலி வளாக வீதியைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம், தாமரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏலாளசிங்கம் ஜெயகீர்த்தி 16.12.2010 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏலாளசிங்கம் மற்றும் றஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மகனும் ஜெயப்பிரகாஷ் (மலேசியா), ஜெயதீபன் (பிரான்ஸ்), ஜெயரூபன் (3ஆம் வருட மாணவன், முகாமைத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஜெயபிரியங்கன் (தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகம்மா, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமரை வீதி,*
*ஆறுகால்மடம்.*
*தொ.பே.: 021 320 5407* (107620)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**YMCA JAFFNA**

**Post of Programme Co-ordinator Trainee for School Leavers**

Jaffna YMCA is accepting applications for the above post. Applications are to be forwarded to the General Secretary, YMCA, 109, Kandy Road, Jaffna on or before 27.12.2010

**General Secretary.**

## மரண அறிவித்தல்

### பெருமையினார் கணேசலிங்கம்



நெடுந்தீவு மேற்கு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பெருமையினார் கணேசலிங்கம் 16.12.2010 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சந்திரவதனியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற வேலாயுதர் பெருமையினார் (சந்தைக் கடை நெடுந்தீவு) மற்றும் சுந்தரம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, இரத்தினராஜா (இளைப்பாறிய அதிபர்) சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி, மகாலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், அமிர்தலிங்கம் மற்றும் நவமலர், நிர்மலாதேவி காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் கதிர்காமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ஜெயகௌரிதேவி, காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் கமலாசனி, கோசலாதேவி, பாலராஜா காலஞ்சென்ற சுந்தரேசன் மற்றும் கயிலாயபிள்ளை, நெடுஞ்செழியன், சிவஞானம், சந்திராதேவி, வாணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: *லண்டன்- 00442089522953*

*இல.05, நல்லூர் செட்டித்தெரு*
*ஒழுங்கை, நல்லூர்.*
T.P: 021 2221352

*வை.சுவாமிநாதன் (சகலன்),*
*639/3, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**க.கயிலாயபிள்ளை**
*(மைத்துனர்).*

### நாவலர் விழாவும் பரிசளிப்பு விழாவும்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நாவலர் விழாவும், பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு உடுவில் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய முன்பள்ளி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசனும் கௌரவ விருந்தினர்களாக மன்றத்தின் ஆலோசகர்கள் ச.தியாகராசா, தில்லை மகாராசா, த.தேவராஜன், க.கணேசரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இறுதி நிகழ்வாகப் பரிசளிப்பும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் பாலர் பாடசாலைகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கடன் எடுத்து மாளும் நிலை மாற

சர்வதேச மட்டத்தில் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட் டுள்ளது. இந்நாடு உலக வங்கியின் தரக் கணிப்பில் இதுவரை, வருமானம் குன்றிய நாடுகள் பட்டியலில் தொடர்ந்து இடம்பெற்று வந்தது. நாட்டின் தனி நபர் வருடாந்த சராசரி வருமானம், உலக வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட இரண்டாயிரம் டொலர்களுக்குக் (இரண்டு இலட்சத்து இருபதினாயிரம் ரூபாவுக்குக்) குறைவாகவே அண்மைக்காலம் வரை இருந்தது. ஆனால், இப்போது தனி நபர் வருமானம் அந்த மட்டத்தை விட உயர்ந்திருக்கிறது. அதனால் எமது நாடு இப்போது மத்திய நிலை வருமானம் கிடைக்கும் நாடாக மாறிவிட்டது.

பொருளாதார நிலையில், நாடு வளர்ச்சி கண் டுள்ள தகவலை உலக வங்கியின் நிர்வாக இயக்கு நரான கலாநிதி நிகோஷி ஒக்கின்ஜோ இவியலா அம்மையார் கொழும்பில் வெளியிட்டிருக்கிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை உத்தியோகபூர்வமாகச் சந்தித்த வேளையிலேயே அவர் இந்த நல்ல சங்கதியைக் கூறியுள்ளார்.

இதேவேளை நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.5 வீதமாக உயர்ந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி கடந்த சில நாள்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. அந்தப் புள்ளி விவரமும் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டு வருவதை ஊர்ஜிதம் செய்கிறது.

உலக வங்கியின் நிர்வாக இயக்குநர் இவியலா அம்மையார் தெரிவித்திருக்கும் தகவலின் பிரகாரம் இலங்கையர்களின் சராசரி மாதாந்த வருமானம் 18,333 ரூபாவாக உயர்ந்திருக்கிறது. அந்தக் கணிப் பீடு, மதிப்பீடு ஓரளவு சரியானதாகவே இருக்கிறது.

கூலி வேலைக்கான நாளாந்தக் கொடுப்பனவு இப்போது அறுநூறு ரூபாவாக உயர்ந்திருக்கிறது.

ஆயினும், விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், வர்த்தகத்துறை, அலுவலகப் பணியாளர்களின் நாளாந்த வருமானம் முன்னர் குறிப்பிட்ட அறுநூறு ரூபா எல்லையை எட்டவில்லை. அத்தகைய நிலையை எட்டுவதற்கு மேற்கூறிய உற்பத்தித் துறைகள் துரித வளர்ச்சி காணவேண்டும். அதற் கான நிதிவள, தொழில்வள, தொழில்நுட்பவள உயர்ச்சிக்கு அரசாங்கத்தின் உதவியும் உந்துசக் தியும் அத்தியாவசியம்.

இதுவரை காலமும் உலக வங்கியின் தரக் கணிப்பீட்டின் பிரகாரம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின், வருமானம் குன்றிய நாடுகளின் பட்டியலிலேயே இலங்கை இருந்து வந்தது. இப்போது, மத் திய நிலை வருமானம் உள்ள நாடாக மாறி இருப்பது ஒரு வகையில் ''சாதனை'' என்று கொள்ளப்படக் கூடியதே.

எனினும் அதற்குப் பதிலாக உலக வங்கி, தனது மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் ஊடாக இலங்கை அரசுக்கு 265 மில்லியன் அமெரிக்க டொலர் (வர்த்தகக்) கடன் வழங்கும் என்றும் இவியலா ஜனாதிபதியிடம் தெரிவித்திருக் கிறார். அந்தக் கடனுக்கு அரசு வட்டி செலுத்த வேண்டும் எனவும் உலக வங்கியின் நிர்வாக இயக்கு நரும் நைஜீரியாவின் முன்னாள் பொருளாதார அமைச்சருமான கலாநிதி இவியலா அம்மையார் தெரிவித்திருக்கிறார்.

இங்கேதான் புதிய சிக்கல் நிலை ஒன்றை அரசு எதிர் நோக்கப்போகிறது. இதுவரை உலக வங்கி யிடம் இருந்து வட்டியில்லா கடனைப் பெற்று வந்த அரசுக்கு, இனிமேல் வட்டிக்குக் கடன் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படப்போகிறது. பொரு ளாதார வளர்ச்சிப் புள்ளியை எந்தளவுக்கு உயர்த்திக் காட்டினாலும் வட்டிக்குக் கடன் எடுத்து மாளாது என்ற நிலையே தோன்றும்.

இத்தகைய ஒரு பின்புலத்தில் இராணுவச் செலவுகளுக்கு வேறெந்தத் தேவைகளையும் விட அதிக நிதி ஒதுக்கி வருகிறது அரசு; அதனை நியாயப் படுத்தி அமைச்சர்கள் ஒருவரை அடுத்து மற்றவராக சண்டப் பிரசண்டம் செய்து வருகிறார்கள். போர் முடிவுற்ற பின்னரும் மீண்டும் பயங்கரவாதம், பிரி வினை வாதம் தலைதூக்குவதனை தடுக்கவே அதிக நிதி என்று அவர்கள் விளக்கங்களும் வியாக்கியா னங்களும் கூறி வருகிறனர்.

இந்த வியாக்கியானங்களையும் விளம்பல்களை யும் நிறுத்தி -

தமிழ் மக்களும் இந்த நாட்டின் மக்கள், அவர் களுக்கு உரித்தான உரிமைகளை வழங்கி, சுதந்திரக் காற்றை சுவாசிக்க வகை செய்ய வேண்டும் என்ற துவேசமற்ற மனப்போக்குடன் சிங்கள அரசியல் தலைவர்களும், எடுகூலிகளும் நியாய சிந்தையுடன் செயற்பட்டால், இராணுவக் கட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை இருக்காது.

உலக வங்கியிடமோ அதன் அபிவிருத்திக்கான வர்த்தக வங்கியிடமோ, வெளிநாடுகளிடம் இருந்தோ வட்டிக்குக் கடன் எடுத்து மாளும் நிலை ஏற்படாது. நாட்டின் சகல பிரதேச மக்களும், சகல இனத் தவர் களும் ஒன்றுபட்டு உழைத்தால் தனிமனித வரு மானம் தானாக உயர்ந்து உயர்ந்து செல்லும் நிலைக்கு நாட்டின் பொருளாதாரம் வளர்ந்து சுபீட்சம் காண லாம். அரசின் தலைமைப் பீடமும், அதன் அங்கங்களும் இவ்வழி சிந்திப்பது எப்போதோ....?......!!

# புலிகளின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் விக்கிலீக்ஸ் தகவல்

கொழும்பு, டிசெ. 19

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டன எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து, 'விக்கிலீக்ஸ்' இணையத் தளத்தால் வெளியிடப்பட்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தகவல் பரிமாற்ற ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் குழு தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை கண்டும், காணாமல் பாராமுகமாக இருந்தது என்றும் அந்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்பட்ட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் செலவுப் பணத்தில் ஒரு பகுதியை புலிகள் தமக்குத் தரும்படி கேட்டனர். பலவந்தமாகப் படைக்கு ஆட்சேர்க்கும் முறை அங்கு காணப்பட்டது. அத்துடன், அவ்வியக்கத்தில் சேர மறுத்தவர்கள் இரவில் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டனர்.

ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் 18 வயதுக்கு மேற்பட்ட ஒருவரையாவது போராட்டத்துக்குத் தரும்படி தமிழீழ புலிகள் கேட்டனர். கட்டாய ஆள்சேர்ப்புக்கு உள்ளாகுபவர்களை - 18 வயதைக் கடந்தவர்களை அவர்களது இராணுவ சேவையில் சேர்ப்பது குறித்து சர்வதேச சமூகம் கேள்வி கேட்க முடியாது என அவர்கள் நம்பினர்.

குறிப்பிட்ட முகாம்களில் சேவைக்காக இணையும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் எழுத்துமூலம் அறிவித்தல் விடுத்தனர். அங்கு செல்லத் தவறியவர்கள் பெரும்பாலும் இரவு நேரங்களில் பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்டனர்'' என அமெரிக்கத் தூதரகத்திற்கு மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று 'விக்கிலீக்ஸ்' வெளியிட்டுள்ள ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை இவ்வருட ஆரம்பத்தில் அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்குப் பரிமாறப்பட்ட கேபிள் தகவல் குறிப்பொன்றில் அண்மைக் காலத்தில் இலங்கை அரசின் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் காணப்படுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தோர் நடத்தப்படும் விதம், அவர்களின் வாழ்க்கைச் சூழல், காணாமற் போகும் சம்பவங்களின் எண்ணிக்கை ஆகியனவற்றில் திடீர் முன்னேற்றம் காணப்படுவதாகவும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மற்றொரு கேபிள் குறிப்பில் இலங்கையில் போரில் ஈடுபட்டுள்ள அரசோ தமிழ் பிரிவினைவாதிகளோ சர்வதேச சமூகம் குறித்து கரிசனை ஏதும் கொண்டிருக்கவில்லை என இந்திய அதிகாரிகள் அமெரிக்காவுக்கு எச்சரித்ததாகவும், இலங்கை அரசுக்கு சீனாவின் உதவிகள் குறித்து விவரங்கள் கோரியதாகவும் 'விக்கிலீக்ஸ்' அம்பலப்படுத்திய ஆவணத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## 2011 ஆம் ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தில் வீதி அபிவிருத்திக்கே அதிக ஒதுக்கீடு

### யாழ். அரச அதிபர் தகவல்

கொழும்பு,டிசெ.19

யாழ்.குடாநாட்டில் அடுத்த வருடம் 25 துறைகளில் 18,698.74 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இதில் வீதி அபிவிருத்திக்காக அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் திட்டத்துக்காக 151.33 மில்லியன் ரூபாவும், காடுகள் அபிவிருத்திக்காக 2.05 மில்லியன் ரூபாவும், காணி அபிவிருத்திக்காக 2.5 மில்லியன் ரூபாவும் விவசாய ஏற்றுமதி பொருள்கள் அபிவிருத்திக்காக 22 மில்லியன் ரூபாவும், கால்நடை அபிவிருத்திக்காக 14.15 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மீன்பிடி அபிவிருத்திக்காக 1,508.59 மில்லியன் ரூபாவும், மரநடுகைக்காக 5.11 மில்லியன் ரூபாவும், பாரிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழிலுக்காக 15 மில்லியன் ரூபாவும், கிராமிய மற்றும் சிறிய அளவிலான கைத்தொழிலுக்காக 61.86 மில்லியன் ரூபாவும், வர்த்தகத்துறை அபிவிருத்திக்காக 92.54 மில்லியன் ரூபாவும்-

சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக 12.50 மில்லியன் ரூபாவும், விஞ்ஞான தொழில் நுட்ப அபிவிருத்திக்காக 36.07 மில்லியன் ரூபாவும், வீடமைப்பு அபிவிருத்திக்காக 2,827.35 மில்லியன் ரூபாவும், நகர உட்கட்டமைப்புக்காக 25 மில்லியன் ரூபாவும், சுற்றாடல் முகாமைத்துவத்துக்காக 5.6 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசன திட்டத்துக்காக 1,881.30 மில்லியன் ரூபாவும், சமூக வள அபிவிருத்திக்கு 127.33 மில் லியன் ரூபாவும் மின்சார திட்டத்துக்காக 96.53 மில்லியன் ரூபாவும், மீள்கட்டுமானம் மற்றும் புனரமைப்புக்காக 4.30 மில்லியன் ரூபாவும், வீதி அபிவிருத்திக்காக 9,499.89 மில்லியன் ரூபாவும் கல்வி அபிவிருத்திக்காக 446.11 மில்லியன் ரூபாவும், சுகாதார அபிவிருத்திக்காக 1,713.38 மில்லியன் ரூபாவும், சமூக புனர்வாழ்வு மற்றும் கலாசார சேவைகளுக்காக 103.03 மில்லியன் ரூபாவும், மாவட்ட நிர்வாகத்துக்காக 15.64 மில்லியன் ரூபாவும், பிராந்திய நிர்வாக முன்னேற்றத்துக்காக 29.50 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-15)

## கடவுள் நம்மோடு

இரண்டாம் உலகப் போர் நாள்களில் ஜேர்மனியில் நாசிப்படையினர் யூதர்களை வகை தொகையின்றி கைது செய்து கடின வேலைகளுக்கு உட்படுத்தியும், சித்திரவதைகள் செய்தும், நச்சுவாயு அறைகளில் அடைத்து கொன்றொழித்தும் வந்தனர்.

இவ்வாறாக அவர்களைக் கைது செய்து தடுத்து வைக்கும் சிறைச்சாலைகளிலே ஒரு கொடுமையான நடைமுறையை அவர்கள் பின்பற்றினர். அச்சிறை யிலிருந்து ஒரு யூதன் தப்பினாலும் அங்கிருக்கும் கைதிகளின் எழுமாற்றாகப் பத்துப் பேர் தெரிவு செய்யப்படுவர். அப்பத்துப் பேரும் ஏனைய அனைத்துக் கைதிகளின் முன்னிலையிலும் கொடூரமாகக் கொலை செய்யப்படுவர். இதன் மூலம் பீதியை ஏற்படுத்தி ஆள்கள் தப்புவதைத் தடைசெய்வது அவர்கள் நோக்கமாக இருந்தது. இவ்வாறு ஒரு முகாமில் ஒரு கைதி தப்பிய சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் பகிரங்கமாக தூக் கிலிடப்பட்டனர். அவர்களுள் ஒருவன் ஒரு மெலிந்த சிறுவன். அவன் தூக்கில் தொங்கி உயிர்விட நீண்ட நேரம் சென்றது.

அவன் துடித்துத் துடித்து இறப்பதைப் பார்த்து சகிக்க முடியாத ஒருவன் வேதனை மிகுதியால் ''இப்படி அநி யாயம் எல்லாம் நடக்கிறதே கடவுள் எங்கே இருக்கிறார்?'' என்று முணு முணுத்தார். அதைக் கேட்ட ஒரு முதியவர் அமைதியாகச் சொன்னார் ''அதோ கடவுள் தான் அங்கே துடித்துக் கொண்டிருக்கிறார்''.




கிறிஸ்துவின் பிறப்பு அண்மித்து வருகின்றது. நாங்கள் பல இடங்களில் அவரைத் தேடத் தொடங்கியிருக்கலாம். சிலர் ஆடம்பரமான கொண்டாட் டங்களிலும், ஆரவாரமான விருந்துகளிலும் அவரைத் தேடி வருகின்றார்கள். இன்னும் சிலர் பல குழுக்களின் இன்னிசைக் கீதங்களிலே அவரைத் தேடி வருகின்றார்கள். வேறு சிலர் அழகிய ஆராதனைகளிலும் வழிபாடுகளிலும் அவரைத் தேடி வருகின்றார்கள். ஆயினும் இவர்கள் உண்மையில் அவரைக் கண்ட டைவார்களா? என்பது சந்தேகமே. ஏரோதன் அரண்மனைக் கொண்டாட்டங்களுக்குள்ளே வழிகாட்டிய விண்ணொளி மறைந்து போனதையும் மூன்று ஞானிகளும் அந்த அரண்மனையை விட்டுப் புறப்பட்ட பின்பே அந்த விண்ணொளி அவர்களுக்கு வழிகாட்டியதையும் நற்செய்தி நூலிலே நாம் படிக்கின்றோம்.

இயேசுவைக் காண மூன்று ஞானிகளும் மாட்டுத் தொழுவத்துக்குத் தான் செல்லவேண்டியிருந்தது. ஏழை இடையர்கள் மத்தியில்தான் இயேசு பிரசன் னமாயிருந்தார். இன்றும் நாம் மனிதனாய் வந்த இறைவனைக் காண வேண்டு மென்றால் அது துடித்துக் கொண்டிருக்கும், துன்பத்தில் துவண்டு கொண்டிருக்கும் மானிடர் மத்தியிலே சாத்தியமாகும். தந்தையை, தாயை, உறவுகளை இழந்து கொட்டும் மழையில் வெறும் பிளாஸ்ரிக் கூடாரத்தில் துடிதுடிக்கும் சிறுவர், சிறுமியரில் இன்று மனிதனாகும் இயேசுவைக் காண முன்வராதோர் அவரை ஒரு போதுமே காணப்போவதில்லை என்பது தான் யதார்த்த உண்மை. கடவுள் நம்முடன்தான் இருக்கிறார்; நாங்கள் அவரைக் காணுவோமா? கடந்து போவோமா? என்பதுதான் உண்மை வினா.

அருள்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன்

## நாளை

மார்கழி 05 20.12.2010

| | | |
|---|---|---|
| திதி: | : | சதுர்த்தசி பி.ப. 03.06 வரை |
| நட்சத்திரம் | : | ரோகிணி பி.ப. 05.10 வரை |
| சுபநேரம் | : | 12.24-01.54 வரை |
| இராகுகாலம் | : | 07.54-09.24 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை
## பழைய மாணவர் சங்கம்
## அவசர கலந்துரையாடல்

இடம்: ஆரம்பப் பாடசாலை மண்டபம்
காலம்: 22.12.2010 புதன்கிழமை பி.ப.3 மணி

விடயம்: *1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் மேற்படி எமது பாடசாலையை இணைத்தலும் ஆரம்ப பாடசாலையின் நிலைப்பாடும்.*

*நிர்வாகசபை உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*(சி-573215)* தலைவர்.

## முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி அபான்ஸ் நிறுவனத்தில் ST49cc மோட்டார்சைக்கிளை கொள்வனவு செய்தவர்கள் அதற்கான பதிவினை 25.12.2010 இற்கு முன்பாகப் பதிவுசெய்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.
*தேவையான ஆவணங்கள் :* 2போட்டோ (பாஸ்போட் size), NIC (Photocopy) இரண்டும் கிராமசேவகர் உறுதிப்படுத்தவேண்டும். ரூ.3300/- பதிவு மற்றும் இலக்கத்தகடு பெறுவதற்குக் கொண்டுவரவும். 31ஆம் திகதிக்குமுன் பதிவு செய்யத் தவறின் அதனால் வரும் அசௌகரியங்களுக்கு நிறுவனம்பொறுப்பு ஏற்காது என்பதையும் அறியத் தருகிறோம்.

தொடர்பு: **P.டிலோஸ்குமார்** (முகாமையாளர்)
No: 105, கண்டி வீதி, சாவகச்சேரி.
T.P. 077 2208242, 021 2270005
(107409)

## துயர் பகிர்கின்றோம்



யாழ். பல்கலைக்கழக இயன் மருத்துவ விஞ்ஞானத்துறையின் 4ஆம் அணி மாணவன் சு.சிந்துஜனின் அன்புத் தந்தை
**மயில்வாகனம் சுந்தரலிங்கம்**
14.12.2010 அன்று காலமான செய்திகேட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவரின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

இயன் மருத்துவ விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம். (107545) 2ஆம், 3ஆம் அணிமாணவர்கள்.

## முதலாம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 1952.03.03
மறைவு: 2009.12.29

## வல்லிபுரம் இராசலிங்கம்

அன்பான பேச்சு
இனிமையான புன்சிரிப்பு
இதனைக் கண்டு ஆண்டு
ஒன்று ஆனதையா
எங்களை மறந்து எங்கே சென்றீர்கள்?
காலமெல்லாம் எங்களை தவிக்கவிட்டு
தனிவழி சென்றதன் நோக்கம் தான் என்னவோ?

கிருஷ்ணபதி இல்லம்,
மானிப்பாய் வீதி, உடுவில். மனைவி,பிள்ளைகள்.
(107505)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



*என் நெஞ்சம் கடவுள் மீது உயிருள்ள இறைவன் மீது தாகம் கொண்டுள்ளது (சங் 42 1-2)*

**செல்வி தபேந்திரராஜா ஈவிலின் சரோமினி**

சின்னஞ்சிறு பட்டாம் பூச்சியாய்
சிறகடித்த உன் காலங்கள்
சிந்தனையின் ஆழத்தில்
சீர்தூக்கி சிந்திக்கும் வேளை
ஆறாண்டுகள் கழிந்தும்
எள்ளளவும் எமைவிட்டு விலகவில்லை

பிறப்பு: 21.10.1991
இறப்பு: 19.12.2004

பழைய பொலிஸ் ஸ்ரேசன் லேன்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

என்றும் நினைவில்:
(107534)

## உள்ளூராட்சி சபைகளில் செயலாளர் பதவி வெற்றிடம் நிரப்ப விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி.டிசெ,19
உள்ளூராட்சி சபைகளில் வெற்றிடமாகவுள்ள செயலாளர் பதவிக்குப் பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு உள்ளூராட்சி சார்பான நிறுவனங்களில் குறைந்தது ஐந்து வருட சேவை, உள்ளூராட்சி மன்றங்களின் உப அலுவலகங்களில் பொறுப்பான பதவிகளில் கடமையாற்றியமை, உள்ளூராட்சி சபைகளில் ஐந்து வருட சேவைக்காலத்தை உடைய பட்டதாரி பதவிகளுக்காக நியமனம் பெற்ற அலுவலர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களில் ஐந்து வருட சேவை அனுபவங்களைக் கொண்ட தற்போது வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ அதி சிறப்பு அலுவலர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம், கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ர.விஜயலட்மி அறிவித்துள்ளார். (204-207)

## மந்திகையில் வீதி சேதம்

வடமராட்சி,டிசெ.19
மந்திகை நகரப் பகுதியைச் சூழவுள்ள வீதிகள் அனைத்தும் சேதமடைந்து காணப்படுகின்றது.

மந்திகைச் சந்தைக்கு முன்பாக உள்ள சாவகச்சேரி வீதி மோசமாகப் பழுதடைந்து பெரும் குழிகள் ஏற்பட்டுள்ளன.

மந்திகை சிலையடியிலும் பெரும் குழிகள் காணப்படுகின்றன.

மந்திகை ஆஸ்பத்திரி வீதி மிக அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் அவ்வீதியும் ஆங்காங்கே சேதமடைந்துள்ளது.

சேதமடைந்த இவ்வீதிகளில் வாகனங்கள், சைக்கிள்கள் என்பன செல்ல முடியாதுள்ளதுடன் பாதசாரிகளும் நடந்து செல்ல முடியாத நிலைமை உருவாகியுள்ளது. (204-236)

## கண்ணீர் அஞ்சலி



### மயில்வாகனம் சுந்தரலிங்கம்
(கிராம உத்தியோகத்தர், வடக்கு - கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர்)

*கடந்த 14.12.2010 அன்று இறைபதமடைந்த மயில்வானம் சுந்தரலிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

வடக்கு, கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம், மன்னார் வீதி, வவுனியா.
(107533)

## மரண அறிவித்தல்

### வேலு சின்னத்தம்பி
(உரிமையாளர், கிளி கடை)



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலு சின்னத்தம்பி (கிளி) 16.12.2010 வியாழக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலு - செல்வி தம்பதியரின் செல்வப் புதல்வனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தர்- சின்னக்குட்டி தம்பதியரின் மருமகனும் சிறீஸ்கந்தராசா (அபுதாபி), சிறீஸ்குமார் (டோகா), சிறீஸ்மதி, ஸ்ரீவித்தியா, ஜனகன், சசிரேகா, மஞ்சுதன், சுரேகா ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாவலிராஜா, சுபாஸ்கரன் ஆகியோரின் மாமனும் தேவனிகா, திவாமதன், வாசுகோபன், சயந்திரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இலுவன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

மந்துவில் மேற்கு,
மந்துவில். (107532) தகவல்: குடும்பத்தினர்.


gtz Partner for the Future. Worldwide.

## SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

### Vacancies in the Wanni region

As an international cooperation enterprise for sustainable development with worldwide operations, the federally owned Deutsche Gesellschaft für Technische Zusammenarbeit (GTZ) GmbH – German Technical Cooperation – supports the German Government in achieving its development-policy objectives. GTZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors. GTZ ensures that its solutions are innovative, humanitarian and economically viable and sustainable in the long term.

Development oriented Emergency and Transitional Aid (DETA) Project will promote the reintegration of IDPs returning to their regions of origin in the Wanni region. The project is jointly supported by the Governments of Germany and Sri Lanka. The objective of the project is to improve the livelihood of about 5000 returning IDP households located in the Kilinochi and Mullaitivu districts. To achieve its objectives, the project intends to work in the following Intervention areas: (i) food production (ii) community infrastructure rehabilitation and increasing self-help capacity of the community, (III) support for Fishermen and (iv) Education sector support.

GTZ-DETA invites applications from dynamic and committed professionals for the following positions:

- Agriculture Officer
- Technical Officer (Construction)
- Social Mobilizer
- Administrative Officer
- Accountant
- Secretary
- Administrative Assistant
- Driver (2 post)
- Office Assistant

Detailed job descriptions can be obtained from **gtz-hrsrilanka@gtz.de**

***Preference will be for candidates from the Wanni region. Only short listed candidates meeting the listed criteria will be contacted.***

Forward a letter of motivation and an updated CV with names and contact details of two unrelated referees in a sealed envelope indicating position applied, addressed to the **Human Resource Unit, GTZ-Colombo, No. 6, Jawatte Avenue, Colombo 5**, or e-mail to **gtz-hrsrilanka@gtz.de** before cob 30 December 2010.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையிலிருந்து வெளியேறும் வைத்தியர்கள் வடக்கு, கிழக்கில் 2 வருடங்கள் சேவையாற்றவேண்டும்

## ஜனவரி தொடக்கம் அமுலுக்கு வருகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து வைத்தியர்களாக வெளியேறுவோர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இரண்டு வருடங்கள் சேவையாற்றியதன் பின்னரே இடமாற்றம் பெறமுடியும் என்ற புதிய நடைமுறை ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரவுள்ளது.

இதன் மூலம் எமது பகுதிகளில் நிலவும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை தொடர்பாக அவரிடம் கேட்டபோது அவர் அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து வைத்தியர்களாக வெளியேறுவோர் ஒருவருட காலம் தமது பகுதிகளில் சேவை புரிந்ததன் பின்னர் தமக்கு விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் செய்து கொள்ள முடியும் என்ற நடைமுறையே இதுவரையும் உள்ளது.

இதன் காரணமாக வைத்தியர்களுக்கான பற்றாக்குறை அதிகமாக இருந்தது.

ஒரு வருட சேவையை இரண்டு வருடங்களாக அதிகரிக்க வேண்டும் அதன் மூலம் வைத்தியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியும் என மத்திய சுகாதார அமைச்சிடம் கேட்டு வந்தோம்.

எனினும் இதற்கு அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

தற்போது அந்தச் சங்கம் தமது அனுமதியை வழங்கியுள்ளது.

அதனை அடுத்தே மத்திய சுகாதார அமைச்சு புதிய நடைமுறையை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது.

அதன் பிரகாரம் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வருகிறது.

இதன்மூலம் எமது மக்கள் அதிக நன்மைகளைப் பெறக் கூடியதாக இருக்கும்.

தீவகத்தில் 8 அரச வைத்தியசாலைகள் உள்ளன. தற்போது 6 வைத்தியர்களே சேவையாற்றி வருகின்றனர்.

ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் 5 வைத்தியர்கள் சேவையாற்ற வேண்டிய நிலையில் 3 வைத்தியர்களே அங்கு பணியாற்றுகின்றனர்.

வேலணை, நயினாதீவு, காரைநகர் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளில் தலா ஒரு வைத்தியர் பணியாற்றி வருகின்றனர்.

அதில் நயினாதீவு, காரைநகர் வைத்தியசாலைகளிலுள்ள வைத்தியர்கள் இருவருக்கும் இடமாற்ற கட்டளை கிடைத்துள்ளது.

நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகிய இரு பிரதேச வைத்தியசாலைகளிலும் ஆர்.எம்.ஏ. இருவரும் பணியாற்றி வருகின்றனர்.

மண்டைதீவு வைத்தியசாலை இயங்கவில்லை அனலைதீவு வைத்தியசாலைக்கு யாழ்நகரப் பகுதியிலிருந்து சென்று மாதாந்த சுழற்சி அடிப்படையிலேயே வைத்தியர்கள் சேவை புரிகின்றனர் என்று தெரிவித்தார்.

(ம-14)

## யாழ். மாநகரசபையில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வு

யாழ். மாநகர சபை இம்முறை கிறிஸ்து பிறந்த நாள் விழாவை பெரிய அளவில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி யாழ். மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர், யாழ் ஆயர் உட்பட சகல மதத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர்கள், வர்த்தக பிரமுகர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

கலை நிகழ்வுகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிறிஸ்மஸ் விழாவுக்குப் பொறுப்பான குழுவின் தலைவர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார். (ம-15)

## இரத்ததானத்தில் தேசிய மட்டத்தில் முன்னணி

யாழ்ப்பாணம்,டிசெ.19

தேசிய மட்டத்தில் பாடசாலைகளில் இடம் பெற்ற இரத்ததான முகாம்களில் இவ்வருடம் அதிக எண்ணிக்கையானோர் இரத்ததானம் வழங்கி யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி சாதனை படைத்துள்ளது.

அந்த வகைளில் மேற்படி கல்லூரியில் இருந்து 230 பேர் இரத்ததானம் செய்துள்ளனர் என யாழ். போதனாசாலையின் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்:

மேலும் கடந்த வருடம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 210 பேர் இரத்ததானம் செய்து தேசிய மட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த வருடம் புனித பத்திரிசியார் கல்லூரி அதனை முறியடித்து முன்னணி வகித்துள்ளது என்றார்.

அத்துடன் மேற்படி கல்லூரிக்கு இரத்த வங்கி சார்பிலும், தேசிய குருதி மாற்று பிரயோக சேவையின் சார்பிலும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (201)

## தொடரும் கல்வி...



ஊக்குவிப்பு: யாழ் மத்திய கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்து பருத்தித்துறை சிவசுப்பிரமணியக்குருக்கள் அறக்கொடை நிதியம் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அகில இலங்கை சைவகுருமார் அர்ச்சகர் சபைச் செயலாளர் சிவஸ்ரீ சதா.மகாலிங்கக் குருக்கள் மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணங்களை வழங்குகிறார் (201)

## மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.குடாநாட்டில் இதுவரை மீளக்குடியமர்ந்த 622 முஸ்லிம் குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 604 குடும்பங்களும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 18 குடும்பங்களுமாக இதுவரை 622 முஸ்லிம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இவர்களுக்கான உடனடிக் கொடுப்பனவாக 5000 ரூபா வழங்குவதற்கான அனுமதி நேற்று முன்தினம் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரிடமிருந்து கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் அதே வேளை வெளி மாவட்டங்களில் உள்ள அவர்களது பதிவுகள் நீக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(15)

## சாவகச்சேரி நகர் உணவகங்களில் காலாவதியான பொருள்கள் அழிப்பு

### வழக்குத் தாக்கலாகும் என அறிவுறுத்தல்

தென்மராட்சி,டிசெ.19

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் சாவகச்சேரி நகர்ப் பகுதி உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் கடந்த வியாழக்கிழமை திடீர் பரிசோதனை நடத்தினர். இதன்போது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பொருள்களையும் சுகாதாரத்திற்கு கேடுகளை விளைவிக்கும் வகையில் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டி உற்பத்திப் பொருள்களையும் கைப்பற்றி அழித்துள்ளனர்.

சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கும் வகையில் வைக்கப்பட்டிருந்த உணவு உற்பத்திப் பொருள்களை அழித்ததுடன், திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (204-207)

## மணிவாசகர் விழாவின் 3ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.19

காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் ஈழத்துச் சிதம்பர ஆலய வசந்த மண்டபத்தில் 56 ஆவது ஆண்டு மணிவாசகர் விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

லண்டன் மெய்கண்டார் ஆதினம் சிவத்திரு யோகனாந்த அடிகள் தலைமையில் இடம்




பெறும் இந்த நிகழ்வில் ''திருவாசகத்திற்குள் மணிவாசகர்'' என்னும் தலைப்பில் சிவத்திரு இரா.செல்வராஜ், ''தாயேயாகி வளர்த்தனை போற்றி'' எனும் தலைப்பில் சிவத்திரு பால சண்முகன், ''வேண்டத்தக்கது'' என்னும் தலைப்பில் சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (204-303)

## யாழ்.பட்டணப் பகுதி உட்பட சில பகுதிகளில் இன்று மின்தடை

உயர் அழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெறவுள்ளதால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை பின்வரும் இடங்களில் மின் தடை அமுலில் இருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இணுவில், உடுவில், சுன்னாகம் தெற்கு, மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப் பகுதி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

## கிறிஸ்து பிறப்பு விழா குருநகரில் இன்று

குருநகர் சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தால் நடத்தப்படும் கிறிஸ்து பிறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு குருநகர் கலையரங்கில் நடைபெறும்.

நிகழ்வில் சிறுவர்களினன் கலை மற்றும் பேச்சு, வில்லுப் பாட்டு, நாடகம் என்பனவும் கிறிஸ்து பிறப்பு கரோல் பாடல்களும் இடம்பெறும். (ஒ-160)

## கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் பெரும் தளபாடப் பற்றாக்குறை

நாவற்குழி,டிசெ.19

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் மேலதிகமாக அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் தளபாட வசதிப் பற்றாக்குறையால் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த பல மாதகாலமாகவே மேற்படி தளபாட வசதிப் பற்றாக்குறை நிலவிவருகிறது. இதுகுறித்து கல்லூரியின் பீடாதிபதி அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றார்.

இதேவேளை இக்கல்லூரியில் சனி, ஞாயிறு தினங்களில் ஆசிரியர் பயிற்சியை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் இந்தப் பகுதி ஊடான பஸ் சேவையின்றிச் சிரமப்படுகின்றனர்.

சனி, ஞாயிறு தினங்களில் இராச வீதியூடாக காலை 8.30 மணிக்கும், பிற்பகல் 3.30 மணிக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களும் தனியார் பஸ் போன்றவை சேவைகளை வழங்கி உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆங்கிலச் சான்றிதழ் கற்கைக்கு திறந்த பல்கலையில் பதிவுகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பொது ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி மாணவர்களுக்கான மீள்பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ். பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் இளைஞர் அபிவிருத்தி சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இணைப்பாளர் மேலும் அறிவித்துள்ளார். (ம-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கான

# விநியோகித்தலுக்கான முகவர்கள் தேவை

### வெற்றிடங்கள் காணப்படும் பிரதேசங்கள்

**கொழும்பு, நுவரெலியா, வவுனியா, அநுராதபுரம், யாழ்ப்பாணம், புத்தளம், திருகோணமலை, ஹம்பாந்தொட்டை, பொலன்னறுவை**
ஆகிய மாவட்டங்கள்

**தேவையான தகுதிகள்**

- வங்கிப் பிணையொன்றை வைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- களஞ்சியப்படுத்தலுக்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.
- போக்குவரத்திற்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.
- உதிரிப்பாகங்கள் சம்பந்தமான அறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

உங்கள் விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதிரிப்பாக விநியோகித்தல் முகவருக்கான விண்ணப்பம்" என குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பவும்.

**முகாமையாளர்**
**த.பெ. இல. 08, பண்டாரகமை.**

---

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு
இல. 160, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி.
0774394337

---

## தேங்காய் விற்பனை

தேங்காய் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.
தேங்காய் - 36/=
பொச்சுமட்டை - 1.50, கொப்பரா
தொடர்பு: மல்லி பாம் சென்டர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி. தொ.பே. 0773001763

---

# UK VISAS

எமது சேவையில் எல்லா விதமானவிசாக்களும் ஒழுங்கு செய்துதரப்படும்.

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
4, IBC Road, Colombo 6,
Contact: 0774-550747
FLEX Graphic

---

# பண்டிகைக்கால அதிர்ஷ்டம்

15.12.2010 இல் இருந்து 14.04.2011 வரை ரூபா ஆறாயிரத்துக்கு (6000/-) மேல் தங்க நகைகளைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளரில் 15.04.2011 ஆம் திகதியன்று குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும்

அதிர்ஷ்டசாலிகளுக்கு..

முதலாவது பரிசு T.V.
இரண்டாவது பரிசு துவிச்சக்கரவண்டி
மூன்றாவது பரிசு C.D. பிளேயர்

என்பன பரிசாக வழங்கப்படும் என்பதை எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்



# சிறி சிவாஞ்சனா நகையகம்

இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 9227

---

## பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்காக

# விற்பனை முகவர்கள் தேவை

**இலங்கையில் தலைசிறந்த மோட்டார் நிறுவனமான வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் இலங்கை முழுவதும் அமைந்துள்ள பஜாஜ் அசல் உதிரிப்பாகங்கள் விற்பனை முகவர் வலையமைப்புடன் நீங்களும் இணையுங்கள்.**

### வெற்றிடங்கள் உள்ள மாவட்டங்கள்

களுத்துறை மாவட்டம் - கல்பாத, களுத்துறை, நாகொட, பயாகலை. கொழும்பு மாவட்டம் - பத்தரமுல்லை, பொரளை, களுஹுக்கலை, பொரலஸ்கமுவை, கிருலபனை, கொஸ்கமை, கொட்டாஞ்சேனை, மஹரகமை, மாளிகாவத்தை, பெப்பிலியான. கம்பஹா மாவட்டம் - தன்கொட்டுவை, திவுலபிட்டிய, ஹேனெகம, கொச்சிகடை, கொடதெனியாவ, மாபோல, மிரிஸ்வத்தை, பூகொடை, ராகம, வென்னப்புவை, யக்கலை. மாத்தளை மாவட்டம் - தம்புளை. **கண்டி மாவட்டம்** - கலஹா, கெலிஓய, கண்டி நகரம், முருதலாவ, நாவலபிடிய, பேராதெனியை, பிலிமதலாவை, ஹசலக. **நுவரெலியா மாவட்டம்** - தலவாக்கலை, உடபுசல்லலாவை. **கேகாலை மாவட்டம்** - நெலும்தெனிய. **இரத்தினபுரி மாவட்டம்** - ஹாலியகொடை, கஹவத்தை, இரக்குவானை. காலி மாவட்டம் - அஹுங்கமை, பத்தேகமை, பலபிடிய, ஹிக்கடுவை, மீட்டியகொடை, நெலுவ. **ஹம்பாந்தொட்டை மாவட்டம்** - மித்தெனிய. **பதுளை மாவட்டம்** - பொரலந்தை, ஹல்ல, அப்புத்தளை, கந்தகடிய, லுணுகல, மீகஹகிவுல, கிராந்துருகோட்டே. **மொணராகலை மாவட்டம்** - கதிர்காமம். **புத்தளம் மாவட்டம்** - கிரிமெடியான, மாதம்பே, மாரவில, முந்தல், பன்னல, புத்தளம், உடப்பு. **குருநாகல் மாவட்டம்** - அபன்பொல, தும்மலசூரிய, ஹஹேட்டுவவை, கிரிஉல்ல, ஹெட்டிபொல, கொபெயிகனே, மஹவை, மெல்சிறிபுர, நாரம்மல, பொல்காவளை, பொல்பிதிகமை, பொதுஹர. **அநுராதபுரம் மாவட்டம்** - கலநவ, மஹாஇலுப்பல்லமை, திரப்பனே, மீகலெவ. **பொலன்னறுவை மாவட்டம்** - தியபதுமை. **யாழ்ப்பாண மாவட்டம்** - சாவகச்சேரி, சுன்னாகம், கொடிகாமம், பருத்தித்துறை. **மட்டக்களப்பு மாவட்டம்** - மட்டக்களப்பு, செங்கலடி. **அம்பாறை மாவட்டம்** - அம்பாறை, ஹிங்குரானை, மஹஓய, சாய்ந்தமருது, சியபலாண்டுவ, திருக்கோவில். **கிளிநொச்சி மாவட்டம்** - கிளிநொச்சி. **முல்லைத்தீவு மாவட்டம்** - முல்லைத்தீவு.

**தேவையான தகைமைகள்**

- விண்ணப்பிக்கின்ற பிரதேசத்தில் நடைமுறையிலுள்ள உதிரிப் பாகங்களின் தேவைக்கேற்ப கொள்வனவு செய்தலும், களஞ்சியப்படுத்தலுக்கான தன்மை.
- பிரதான வீதிக்கு அண்மித்து சதுர அடி 150 - 200 அலகுகளுடன் கூடிய இடவசதி உள்ள வியாபார இடமொன்று இருத்தல்.
- வங்கி கணக்கின் மூலம் பிணையொன்று வழங்கக் கூடிய தகைமை
- உதிரிப்பாகங்கள் பற்றிய அறிவு மற்றும் பிரதேசத்தில் இருக்கும் பஜாஜ் இயந்திரவியலாளர்களுடன் உள்ள தொடர்புகள் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**உங்கள் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும் கடித உரையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் "உதிரிப்பாகங்கள் விற்பனை முகவர்" என குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் கிடைக்கும் விதத்தில் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பவும்.**

விற்பனை முகாமையாளர்.
உதிரிப்பாகங்கள் மற்றும் பாகங்கள் பிரிவு

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
நிறுவன பதிவு இலக்கம் PB270

இலக்கம்: 120,120A, பன்னிபிடிய வீதி, பத்தரமுல்லை.
தொலைபேசி: 011 4700600.

tradlanka

---

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்.
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)

---

# Walk in Interview

We seek smart competent and experienced individuals from Jaffna to fill following positions.

**Sales Manager / Sales Executives**
Experience in Real Estate would be an advantage

**Technical Officers**

Walk in with your CV and certificates on Monday, 20th December 2010 between 9.00 am to 12.00 pm to our Jaffna office.
Ranasinghe Homes (Pvt) Ltd

**Head Office:**
No.9/2A, Perera Road, Ja-ela.
Tel. 011 224 7471
E-mail : info @ranhomes.com
Wed: www.ranhomes.com

**Branch Office:**
No.841, Hospital Road, Chundukuli, Jaffna.
Tel: 021 222 0400
077 264 6637

---

# THE MOST ECONOMICAL MBA STUDY IN UK

## OUR SERVICE ABSOLUTELY FREE

**Before the visa or after getting visa**

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)

4, IBC Road, Colombo 6.
Hotline: 0777-761346
Fax: 2501766
E-mail: flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk

FLEX Graphic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கு ஏற்பாடுகள்

முல்லைத்தீவு, டிசெ.19

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பின் தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளின் மாணவர்களுக்கு உணவு வழங்கும் ஏற்பாடொன்று செய்யப்பட்டுள்ளதாக ஐயன்கன் குளம் அ.த.க.பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள ஐயன்கன் குளம் அ.த.க.பாடசாலை, கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலை, நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை என்பன மல்லாவி நகரப் பகுதியிலிருந்து 16 கிலோ மீற்றருக்கும் அப்பால் அமைந்துள்ளன. இவ்வருடம் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மேற்படி பாடசாலைகளின் மாணவர்கள் மல்லாவிப் பகுதிப் பாடசாலைகளில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களிலேயே பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். ஆனால் சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாமை, பெருமழை காரணமாகக் குளங்கள் நிரம்பி வழிந்து வீதிகளை மூடி வெள்ள நீர் பாய்வது போன்றவற்றால் இந்த மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனையறிந்த மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இந்த மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாடொன்றைச் செய்துள்ளனர். இதனால் இந்த மாணவர்கள் ஓரளவு மகிழ்ச்சியுடனும், மனத்திருப்தியுடனும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இந்த மனிதாபிமான நடவடிக்கையைக் குறித்த பாடசாலைகளின் அதிபர்களும், பெற்றோரும் நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றனர். இந்த மனிதாபிமானச் செயற்பாட்டுக்கான அனுமதியை வழங்கி, நிதியையும் விடுவித்த மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் இந்த உணவு விநியோகத்தைச் சிறந்த முறையில் நெறிப்படுத்தி வரும் வலயக் கல்விப் பணிப்பாளர், அதிகாரிகள் அனைவருக்கும் மேற்படி பாடசாலைச் சமூகத்தினர் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளால் பாடசாலைக்கு இடையூறு

முல்லைத்தீவு, டிசெ.19

கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளால் கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்குப் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வருவதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

கால்நடைகளின் உரிமையாளர்கள் தமது கால்நடைகளைப் பட்டிகளில் அடைக்காது விடுவதால் அவைகள் இரவு வேளைகளில் மேற்படி பாடசாலையையே தமது தங்குமிடமாகப் பாவித்து வருகின்றன. இதனால் காலையில் பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்களும், மாணவர்களும் கால்நடைகளின் சாணம், சிறுநீர் என்பனவற்றை அகற்றிச் சுத்தப்படுத்திய பின்னரே பாடசாலையை ஆரம்பிக்க முடிகின்றது. இந்த வேலைகளுக்கே அதிக நேரம் செலவிடுவதனால் கற்றல் செயற்பாடுகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் சுகாதாரத்திற்கும் கேடாக உள்ளது. தற்போது க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்தச் செயற்பாடானது மிகுந்த சிரமங்களைத் தோற்றுவிக்கின்றது.

அத்துடன் மாணவர்களின் சீருடைகள் அழுக்காகி விடுவதனால் அவர்கள் மன அமைதியுடன் தமது கற்றல் நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர்.

ஆகவே கால்நடைச் சொந்தக்காரர்கள் பொறுப்புணர்வுடன் இரவு வேளைகளில் தமது கால்நடைகளைப் பட்டிகளில் அடைத்து உதவுமாறும் பாடசாலை அதிபர் நாகேந்திரராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-500)

# மீள்குடியமர்வு தொடர்பாக மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், டிசெ.19

மன்னார் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அவசரக் கூட்டமொன்று நடைபெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அடம்பன் மகாவித்தியாலயத்தில் இராணுவத்தின் 542 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது இராணுவத்தின் 542 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி விக்கும் லியனகே, சிவில் பாதுகாப்புப் பிரிவு அதிகாரி நலிந்த விதாரண, அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது மீள்குடியமர்ந்துள்ள மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகள் இதுவரை பூர்த்தி செய்து தரப்படவில்லையென்றும் விவசாயம், குடிதண்ணீர், மலசலகூட வசதிகள், வாழ்வாதார உதவிகள் என்பன கிட்டவில்லையெனவும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதேவேளை இந்த மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்த நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் இணைப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கட்டம் கட்டமாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்ட அரச அதிபர் ஏ.நிக்கொலஸ்பிள்ளை கிராமங்களுக்கு நேரில் சென்று நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றார் என்று மேலும் அவர் தெரிவித்தார். (க)




## கலைக்கு ஏது வேலி.....



சிறப்பான தோற்றம்:-கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் மாணவிகள் கலை நிகழ்ச்சியை வழங்குகின்றனர். (405)

# டி.ஆர்.சியின் வாழ்வாதாரத் திட்டம்

கிளிநொச்சி, ஊரியான் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் டி.ஆர்.சி. நிறுவனத்தினால் பல்வேறு வாழ்வாதாரச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஊரியான் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்து தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வரும் 38 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் தெளிகருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதே போன்று நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் 33 பயனாளிகளுக்கு தெளிகருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைவிட கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, வியாபாரம் போன்ற வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க)

# பாம்புக்கடிக்கு இலக்கான இளைஞர்

பளை, டிசெ.19

எழுதுமட்டுவாழ் சந்திப் பகுதியில் மீளக் குடியமர்வதற்காக காணி துப்பரவாக்கிய இளைஞர் பாம்பினால் கடியுண்டார். இச் சம்பவம் கடந்த 16 ஆம் திகதி இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த குணரத்தினம் சுசிர்தகுணாளன் (வயது 21) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-207)

# கிளிநொச்சியில் புலமைப் பரிசில் மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் சிறப்பான நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ.19

கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரியின் பிரதி அதிபர் ஆ.ஆலாலசுந்தரம் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வுக்கு முன்னதாக தேசியக் கொடியினைப் பிரதம விருந்தினரான கிளிநொச்சி கல்வி வலயப் பணிப்பாளர் த.குருகுலராசா ஏற்றி வைக்க, கல்லூரிக் கொடியைப் பிரதி அதிபர் ஆ.ஆலாலசுந்தரம் ஏற்றி வைத்தார். மங்கள விளக்கினைப் பிரதம விருந்தினரும், சிறப்பு விருந்தினர்களான பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.இரத்தினகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். வரவேற்புரையை கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவரான திருமதி வ.பத்மானந்தன் நிகழ்த்தினார். அதிபர் உரையை பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் நிகழ்த்தினார்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பதக்கங்களை அணிவித்தும் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசில்களை வழங்கியும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்களை பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.இரத்தினகுமார் வழங்கினார்.

தொடர்ந்து 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இதனைக் கிளிநொச்சி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆரம்பித்து வைத்தார். அவரைத் தொடர்ந்து விருந்தினர்களாகக் கலந்து கொண்ட ஆசிரிய ஆலோசகர்களான பொ.விஜயநாதன், திருமதி வ.சுப்பிரமணியம், கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் அ.பங்கயற்செல்வன், புனித திரேசா பெண்கள் கல்லூரி மேலதிக அதிபர் எஸ்.ரவீந்திரன், கல்லூரியின் பழைய மாணவர்களான வைத்திய கலாநிதி மா.குலராசா, மா.ஜெயராசா ஆகியோர் வழங்கினர்.

இறுதியாக மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பாடுபட்ட அனைவருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளரால் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அதனையடுத்து புலமைப் பரிசில் வகுப்புக்குக் கற்பித்த ஆசிரியர் ப.சசிதரன் உரையாற்றினார். நன்றியுரையை ஆரம்ப பிரிவு ஆசிரியை திருமதி ஜெ.கலிஸ்ரஸ் நிகழ்த்த இந்த நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது. (க-405)

# இசுறு பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டுள்ள முல்லை.மாவட்ட மல்லாவி மத்திய கல்லூரி

முல்லைத்தீவு, டிசெ.19

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி மத்திய கல்லூரி இசுறு பாடசாலையாகக் கல்வியமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 150 இசுறு பாடசாலைகளில் வடமாகாணத்திலுள்ள 20 பாடசாலைகளும் அடங்கும். இதன் மூலம் மல்லாவி மத்திய கல்லூரிக்கு 35 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் பௌதீக வளங்களை மேம்படுத்துவதுடன் கல்வி அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் நோக்குடனேயே இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறும் மாணவர்களுக்கு தொழிற் கல்வி வழங்கி அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதும் இசுறு பாடசாலைத் திட்டத்தில் உள்ளது. இனிமேல் இந்தப் பாடசாலை உயர்தர வகுப்பில் கலை, வணிகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கொண்டதாகவும், அவற்றிற்குரிய வளங்களுடனும் தொடர்ந்து இயங்கும்.

அத்துடன் நாட்டிலுள்ள ஏனைய இசுறு பாடசாலைகளின் கட்டட அமைப்பை ஒத்ததாக இப்பாடசாலையின் கட்டட அமைப்புக்களும் அமையவுள்ளன. இசுறு திட்டம் முழுமையடையும் போது இந்தப் பாடசாலையின் தரம் 1 முதல் 5 வரையான ஆரம்பப் பிரிவுகள் தனியாகவும், இடைநிலை வகுப்புக்கள் தனியாகவும், தனித்தனி நிர்வாகப் பிரிவுகளின் கீழ் அமையவுள்ளன. அத்துடன் கிராமப்புற மாணவர்கள் நகரப் புறங்களை நாடிச் செல்லும் நிலையைத் தவிர்ப்பதுவும் இசுறு திட்டத்தின் பிறிதொரு நோக்கமாகும்

ஜனாதிபதியின் மகிந்த சிந்தனைத் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்த இசுறு பாடசாலைத் திட்டம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்
# 2011 ஆண்டுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல்

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமையக் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 18.12.2010 - 27.12.2010
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 29.12.2010 பி.ப. 3 மணி
கேள்வி திறக்கப்படும் திகதி : 29.12.2010 பி.ப. 3 மணி
கேள்வி திறக்கும் இடம் : மாந்தை கிழக்கு பிரதேச சபை

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறை யின் இடத்து பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப் படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

நிபந்தனைகள்:

| இல | குத்தகை வகை | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணம் (வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரிநீங்கலாக) | மாதாந்தவாடகை (வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | பாண்டியன்குளம் மரக்கறி, மீன் சந்தை | 30000.00 | 1000.00 | 500.00 | - |
| 02 | பாலிநகர் மரக்கறி மீன் சந்தை | 50000.00 | 1000.00 | 500.00 | - |
| 03 | பாலிநகர் இறைச்சிக்கடை | 20000.00 | 1000.00 | 500.00 | 50.00 |

★ வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
★ சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
★ இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லப்படும் முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.

திருமதி கு.சண்முகலிங்கம்,
செயலாளர், பிரதேச சபை, மாந்தை கிழக்கு.

(சி/5/3204)







## யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கங்களுடன் ஒருவாரகால முழுநேர கற்கைநெறி

## Diploma in Hardware Engineering & Networking

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெறவும், சுயதொழில் ஆரம்பிப்பதற்கும் ஏற்றவகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

COURSE CONTENTS **COURSE FEE - 2000/=** **ஆரம்பம்-20/12/2010-09AM**

✓கணனிப்பாகங்களை இனம்காணல். ✓PI முதல் PIV வரையான Mother Board பற்றிய விளக்கங்கள். ✓PI முதல் PIV, i3, i5, i7 Processor பற்றிய விளக்கங்கள். ✓SD, RD, DDR I, DDR II, DDR III Ram பற்றிய விளக்கங்கள். ✓Power Supply பற்றிய விபரங்களும் பரிசோதனை முறைகளும். ✓VGA Card, Sound Card, Network Card, Modem பற்றிய விபரங்கள். ✓Assembling, ✓BIOS Setting, ✓Win XP & 7 installation, ✓Network Foundamentals, ✓Hub/Swich, ✓Peer to Peer Network, ✓IP Address, ✓Network Configuration, ✓Network Printer

free i7 CPU Installation Video CD, Labtop Assembling Video CD, Windows Installation Video CD

**COMPUTER EXPRESS**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
Sirampigadi Lane, off stanly Road, Jaffna. 021 222 8250



## இதோ விற்பனையாகின்றது

**12 மாத காலத்தில் சரளமாக ஆங்கிலம் பேச விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

தமிழர்கள் மிக எளிதாக எவ்வாறு ஆங்கிலம் கற்றுக்கொள்ள முடியும் என்பதை மிகமிக நுணுக்கமாக ஆராய்ந்து அதற்கேற்றவாறு அவர், அவர்கள் தமது தொலைக்காட்சிப் பெட்டியில் (T.V) DVD மூலம் இந்த ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளக் கூடியவாறு AUSTRALIAவில் SCIENCE AND CHEMISTRY ஆசிரியராகக் கடமையாற்றுபவரால் தயாரிக்கப்பட்டது. இந்த DVD கள் விற்பனையாகும் இடங்கள் :-

1) அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
2) பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
3) கலாசேத்திரா நுண்கலை வளாகம்.

ஊரெழு மேற்கு, தொலைபேசி எண் : 0217901991

ஒரு DVD யின் விலை 1,100/= மட்டும்.

எமது இந்த DVD இக்களை நகர்ப்பகுதிகள் மற்றும் கிராமங்களுக்குச் சென்று விற்பனை செய்யக்கூடியவர்கள் தேவைப்படுகின்றார்கள், விரும்புபவர்கள் எமது தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி எண் : 0217901991 (107498)








## இறைச்சிக்கோழி விற்பனை

கூடிய நிறையிலுள்ள புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு. **விஜயகுமார்**
(107475) குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை

## Spoken English Class

பல வருடங்கள் ஆங்கிலம் கற்றும் அதனை பேச முடியாது இருப்பவர்களுக்கு உரிய Spoken English வகுப்புக்கள், பல்கலைக்கழகம், உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஆங்கிலம் கற்பித்த ஓய்வுபெற்ற ஆசிரியரினால் தனியாகவும் குழுவாகவும், வகுப்புக்கள் நடத்தப்படும்.
தொடர்பு: T.P. 021 2227801 (107524)

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் தொழிற்படும் சந்தைப் படுத்தல் நிறுவனம் ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.
தொடர்பு: T.P. 077 7397734
(107521)

## காணி விற்பனைக்குண்டு

காரைநகர் வடக்கு, கசூரினா பீச்சுக்கு மிகவும் அண்மையில் 15பரப்புத் தென்னம்தோட்டக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. விடுதிகள், பண்ணை, வயோதிபர் இல்லம் என்பன அமைப் பதற்கு உகந்ததாகும்.
தொடர்பு: T.P. 077 9761373 (107526)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதானந்த எல்லாவெல தேரரின் கூற்று உண்மையாயின் சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தை திருத்தவேண்டும்

## ஜ.தொ.கா. தலைவர் மனோகணேசன் பதிலடி

கொழும்பு,டிசெ.19

''மேதானந்த எல்லாவெல தேரர் முதலில் சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தை திருத்தி எழுதட்டும்''

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளர்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக் குழு அமர்வில் சாட்சி யமளித்த எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ள கருத்துகள் தொடர்பிலேயே மனோ கணேசன் இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மகாவம்சத்தைத் தழுவித்தான் கம்பராமாயணம் எழுதப்பட்டது என்றும், திருவள்ளுவர் ஒரு சிங்கள பௌத்தர் என்றும், கௌதம புத்தர் அம்பாந்தோட்டையில் பிறந்தார் என்றும், தமிழர்களுக்கு வேட்டியும், சேலையும் கட்டுவதற்கு கற்றுக்கொடுத்ததே தனது மூதாதையர்தான் என்றும், ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான மேதானந்த எல்லாவல தேரர் நாளை கருத்து தெரிவித்தாலும் கூட ஆச்சாரியமில்லை.

ஏனென்றால் இவரை எனக்கு மிக நன்றாகத் தெரியும். தன்னைத் தானே வரலாற்று சக்கரவர்த்தி என அழைத்துக்கொள்ளும் இந்தத் தேரருக்கு இன்றைய இனவாத யதார்த்தத்திற்கு ஏற்ற வகையில் வரலாற்றைத் திரிப்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாது.

மேதானந்த தேரரின் கட்டுக் கதைகளுக்கும், மோசடிக் கருத்துகளுக்கும் பதில் கூறி நாம் எமது நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை.

நாடாளுமன்றத்தில் நான் இருந்தபோது கடந்த வருடம் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழர்களின் தாய்நாடு இந்தியா என்றும், முஸ்லிம்களின் தாயகம் பாகிஸ்தான் என்றும் மேதானந்த தேரர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

மேலும் தமிழ்பேசும் மக்களுக்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுமானால் தமிழர்கள் இந்தியாவிற்கும், முஸ்லிம்கள் பாகிஸ்தானினுக்கும் போய்விட வேண்டும் என்றும் இவர் கூறியிருந்தார். அவ்வேளையிலே, தமிழர்கள் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றால், சிங்கள ஆண்கள் வட இந்தியாவிற்கும், சிங்களப் பெண்கள் - எங்களுடன் தென்னிந்தியாவிற்கும் வரவேண்டியிருக்கும் என்றும்-

முஸ்லிம் மக்களை பாகிஸ்தானுக்கு அனுப்பிவிட்டு, முழு நாட்டையும் இத்தீவின் பூர்வீகக் குடிகளான வேடுவர்களிடம் ஒப்படைப்போம் என்று மேதானந்த தேரருக்கு நான் பதில் கூறியிருந்தேன்.

ஏனென்றால் சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்திலே சிங்கள இனத்தை உருவாக்கிய விஜயன் வட இந்தியாவிலிருந்து வந்தான் என்றும், பின்னர் அவனுக்கும், அவனது எழுநூறு நண்பர்களுக்கும் தென்னிந்தியாவின் பாண்டிய நாட்டில் இருந்து அரச குமாரியையும், பெண்களையும் கொண்டு வந்து மணம் செய்துவைக்கப்பட்டது என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

எனவே ஜாதிக ஹெல உறுமயவின் வர லாற்றுச் சக்கரவத்தி மேதானந்த எல்லாவல தேரர் தமிழர்களின் வரலாற்றைத் திருத்தி எழுதுவதற்கு முன்னர், சிங்கள இனத்தின் முதல் வரலாற்று நூலான மகாவம்சத்தை திருத்தி எழுதவேண்டும் எனக் கூறவிரும் புகின்றேன் .

- இவ்வாறு மனோகணேசன் தெரிவித்துள்ளார். (சி)

## மின்சார அலகு ஒன்று ரூ.1.42ஆல் அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.19

தற்போது 13 ரூபா 53 சதமாக விற்பனை செய்யப்பட்டு வரும் மின் அலகொன்றின் விலை அடுத்த வருடம் முதல் ரூ.14 ரூபா 95 சதமாக அதிகரிக்கப்படும் என மின் வளத் துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய புதிய மின் கட்டண விதிப்பு முறை அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருமெனவும் இவ்வருட இறுதிக்குள் புதிய முறை இலங்கை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் மூலம் பிரகடனப்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

புதிய மின்கட்டண விதிப்பு முறை பற்றி விளக்குவதற்காக மின்வளத்துறை அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இம்மாநாட்டில் வர்த்தக நடவடிக்கைகளுக்கான கட்டணங்களும் மீளாய்வு செய்யப்பட்டது.

## மாரடைப்பால் வருடாந்தம் 4500 பேர் உயிரிழப்பு

கொழும்பு,டிசெ.19

இலங்கை வைத்தியசாலைகளில் ஏற்படும் பெரும்பாலான மரணங்களுக்கு மாரடைப்பே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வைத்தியசாலைகளில் வருடம் ஒன்றுக்கு மாரடைப்பால் சராசரி 4,500 மரணங்கள் நிகழ்கின்றன என சுகாதார அமைச்சின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வருடாந்தம் சுமார் 3,600 பேர் இரத்த அழுத்தத்தினாலும், 3,500 பேர் புற்று நோயாலும், மூளை சம்பந்தமான வியாதிகளால் 3,100 பேரும் சுவாச நோய்களால் 400 பேரும் மரணிக்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

## திறமையின் வெளிப்பாடு...



கௌரவிப்பு: யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆங்கில தின தேசிய மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற உதயகுமாரன் விதுஷனைப் பாராட்டி யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் பதக்கம் சூட்டுகின்றார். (204)

## தனியார் பஸ் ஊழியர்களின் சீருடை என்ற பெயரில் நிதி மோசடி

### சங்க நிர்வாகிகள் மீது விசாரணை

கொழும்பு,டிசெ.19

தனியார் பஸ் ஊழியர்களுக்கான சீருடை வழங்கல் மற்றும் அவர்களது இதர நலன்கள் தொடர்பில் தனியார் பஸ் சங்க நிர்வாகிகள் பல்வேறு நிறுவனங்களில் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று மோசடி செய் துள்ளனர் என கிடைத்துள்ள முறைப்பாடுகள் பற்றி விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தனியார் பஸ் ஊழியர்களுக்கான சீருடைகளுக்கென குறிப்பிட்ட நிறுவனமொன்றில் 93 லட்சம் ரூபா பணம் சேகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அப்பணத்தில் ஒருசில சீருடைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன என்றும், அவையும் இப்போது பாவனையில் இல்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் சங்க வாகன உதிரிப்பாகங்களையும், டிக்கட் இயந்திரங்களையும் இறக்குமதி செய்யும் வர்த்தகர்களிடமிருந்தும் இவர்கள் பெருந்தொகைப் பணம் அறவிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த முறைகேடுகளில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் அதிகாரிகள் சிலரும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும், சங்கத்தின் உபகாரத்தில் அவர்களும் வெளிநாட்டுப் பயணத்தை இலவசமாக மேற்கொண்டுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, விசாரணைகளின் முடிவில் சம்பந்தப்பட்ட சங்க உறுப்பினர்களுக்கும், ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - எனப் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். (சி)

## 110 வயது மூதாட்டியைத் தாக்காது சென்ற யானை

தனிமையில் வாழ்ந்துவந்த 110 வயது மூதாட்டியின் வீட்டுக் கதவைக் கழற்றி வைத்து விட்டு, நள்ளிரவு வேளையில் உட்புகுந்த யானை ஒன்று அங்கிருந்த அவித்த நெல்லை மட்டும் தின்றுவிட்டு மூதாட்டியைத் தாக் காது விட்டுச்சென்ற சம்பவம் நிக்கவரெட்டியாவில் இடம்பெற்றுள்ளது.

பிரதேசத்தின் மூத்த பிரஜையென நிக்கவரெட்டிய பிரதேச செயலாளரால் இம் மூதாட்டி கௌரவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்கமாக வீடுகளுக்கு வரும் காட்டு யானைகள் வீட்டைச் சின்னாப்பின்னம் செய்து அங்கிருப்பவர்களையும் துவம்சம் செய்து விட்டுச் செல்வதே வழக்கம்.

எனினும், இந்த யானை எவ்வித சேதமும் இல்லாமல், கதவை மட்டும் கழற்றித் தனியாக வைத்துவிட்டு நெல்லைத் தின்று தனது பசியைப் போக்கிக் கொண்டு அமைதியாக சென்றது ஆச்சரியமான விடயமெனப் பிரதேசவாசிகள் வியக்கின்றனர். (சி)

## சிறுபான்மை, பெரும்பான்மையென்ற வேறுபாட்டுடன் செயற்படக் கூடாது

### நீதிபதிகளுக்கு பிரதம நீதியரசர் அறிவுறுத்து

கொழும்பு, டிசெ.19

நீதிபதிகள் ஒருபோதும் பக்கச் சார்பாக இல்லாது நடுநிலையுடன் செயற்பட வேண்டும். அவர்கள் பெரும்பான்மையினருக்குச் சார்பாகவோ சிறுபான்மை இனத்தவர்களுக்குச் சார்பாகவோ செயற்படக் கூடாது என்று பிரதம நீதியரசர் அசோக்க டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு ஏற்பாடு செய்திருந்த நீதிபதிகளுக்கான கருத்தரங்கு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

சட்டம், நீதியை நிலை நாட்டுவது நீதிபதிகளின் கடமை. நீதிபதிகள் அனைவருக்கும் சமனானவர்களாக இருக்க வேண்டும். தற்போது தோன்றியுள்ள பிரச்சினையை உன்னிப்பாகக் கவனித்து அதற்கொரு சிறந்த தீர்வை வழங்க வேண்டிய பொறுப்பே நீதிபதிகளுக்கு உள்ளது. நீதிபதிகள் எந்தவொரு கட்சியையோ தமது தனிப்பட்ட நலன்களையோ சார்ந்து செயற்படக்கூடாது.

நீதிமன்றத்தால் வழங்கக் கூடிய தண்டனைகளுக்கு அப்பாற்சென்று பலர் தண்டனைகளை வழங்குகின்றனர். அது உண்மையிலேயே நல்லதல்ல. மக்களில் பலருக்குச் சட்டம் தெரியும். நான் இந்தத் தவறைச் செய்தால் எனக்குரிய அபராதம் இவ்வளவு என்பதை நன்கறிந்த எத்தனையோ பேர் உள்ளனர். ஆகையால் நீதிபதிகள் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

பல்லின சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழும் நாட்டில் நீதிபதிகள் அனைவருக்கும் சமனா [illegible]

## இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டம்: அரங்கம் சார்பில் மூவர் நியமனம்

கொழும்பு,டிசெ.19


இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அடிப்படைத் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான உப குழுவுக்கு தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, யாழ்., கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரியும், வன்னியைப் பிரதிநிதித்துவப்படுத்தி புளொட் அமைப்பின் தலைவர் ரி.சித்தார்த்தனும், கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கமும் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் கடந்த வாரம் நடந்த சந்திப்பையடுத்து, இரு தரப்பிலும் தலா மூவர் கொண்ட உப குழு ஒன்றை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

இதனையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே இக்குழுவுக்கு மூவரை நியமித்தது. இதேவேளை, உப குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரு தரப்பிலிருந்தும் தலா ஐந்தாக அதிகரிக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியிருந்தது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தா



சிறுகதை

புனிதம் இத்தோடு நான்காவது தடவையாகச் செந்தாவிடம் கெஞ்சிக் கேட்டுவிட்டாள். சொல்லமுடியாத துயரமும் அதிர்ச்சியும் அவளுள் உறங்கிப் போயிருந்த பழைய ஞாபகங்களைக் கிளறின. 'ஐயோ.. அந்த மனுசனும் என்ர மூத்த குஞ்சும் இப்ப என்னோட இருந்தா இப்படியெல்லாம் என்னை உத்தரிக்க விடுங்களே.. கடவுளே... கண்கெட்ட கடவுளே... ஏன் என்னையும் என்ர பிள்ளையையும் இப்படிச் சோதிக்கிறாய்...''

வாய்விட்டுப் புலம்பியழுதாள் புனிதம். அவளின் புலம்பல் ஒலி கேட்டு அடிவளவில் விளையாடிக் கொண்டிருந்த தேனிலாவும் இனியவனும் உள்ளே ஓடிவந்து பார்த்தனர்.

தயங்கித் தயங்கித் தாயருகே வந்த இருவரும், ''ஏனம்மா... ஏனம்மா... அம்மா அழாதீங்கோ'' என அவளை அணைத்தபடி விசும்பினர். இது அவர்கள் அடிக்கடி காணுகின்ற காட்சி தான்.

''அம்மாவுக்கு அப்பாவின்ர ஞாபகமும் அண்ணையின்ர ஞாபகமும் வந்தால் இப்படித்தான் கொஞ்சநேரம் தனக்குத்தானே சொல்லிச் சொல்லி அழுவா...'' ஆரம்பத்தில் புனிதத்தின் இந்தப் புலம்பலைக் கேட்டு அயலவர்களுக்குத் தேனிலா இப்படித்தான் விளக்கம் தருவாள்.

அழாமல் வேற என்ன செய்வாள் அவள்... மனிசனையும் மகனையும் பறிகுடுத்தவளுக்கு எப்படியிருக்கும்...? என்று பெருமூச்சோடு அகன்று போவார்கள்.

அம்மாவோடு ஒட்டினாற்போல் அமர்ந்து விசும்பி அழுதபடியிருந்த இனியவன் இருமத்தொடங்கினான். சளி கோர்த்த நெஞ்சோடு 'கம் கம்' மென அவன் இருமும் போது படும் துன்பம் புனிதத்தை மேலும் சஞ்சலப் படுத்தியது. என்ர ராசா அழ வேண்டாமப்பு.. அழுதால் இருமல் வருமெணை.. என்ர குஞ்செல்லே..

''அம்மா இனி அழேல்ல.. நிலா எழும்பம்மா தம்பியையும் கூட்டிப் கொண்டு போய் விளையாடு....'' என்றபடி எழுந்து வாசலுக்குப் போய் மூக்கைச் சிந்தி விட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டாள்.

''இந்த இருமலுக்குத்தான் மருந்தெடுக்கக் காசில்லையெண்டு இவளை அங்க போகச்சொன்னால் கேக்க மாட்டனெண்டிறாளே..'' எனத் தனக்குள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அறைக்குள் அமர்ந்திருந்த செந்தா என்கிற செந்தாமரை எழுந்து வெளியே வந்தாள். எத்தனை தடவைகள் கேட்டுக் கொண்டும் ''அத மட்டும் என்னக் கேளாதீங்கோ.. நான் மாட்டன்.. அங்க போக மாட்டன்'' என்று பிடிவாதமாய் மறுத்து விட்டாள்.

........

வன்னியில் யுத்தம் ஆரம்பிக்க முன்னரே புனிதவதியையும் இளைய குழந்தைகள் மூவரையும் ஊரோடு கொண்டு வந்து விட்டுப் போயிருந்தான் மகேஸ்வரன். தனக்கு உதவியாக மூத்த மகன் பரணீதரனை மட்டும் வைத்துக் கொண்டான்.

அப்போது யுத்தம் இப்படியெல்லாம் நிலைமைகளைக் கொண்டு வரும் என்று யாரும் கற்பனை கூடச் செய்திருக்கவில்லை. இவர்கள் ஊரோடு வரும்போது பரணீதரன் பத்தாம் வகுப்பிலிருந்தான்.

மகேஸ்வரன், 'வளவன் அரிசி ஆலை' நிர்வாகியாயிருந்தான். அரிசி ஆலை வேலையுடன் வீட்டருகேயிருந்த ஆறு ஏக்கர் நிலத்தில் வயலும் செய்தான். ஆரம்பத்தில் இடையிடை யாழ்ப்பாணத்தில் இருக்கும் மனைவி, பிள்ளைகளை வந்து பார்த்துப் போய்க்கொண்டிருந்தான். பயணத்தில் இருக்கிற இடர்கள் காரணமாய் அடிக்கடி வருவதைத் தவிர்க்க வேண்டியிருந்தது.

இடையிடை தகவல்கள் மட்டும் பரிமாறக் கூடியதாய் இருந்தது. முழு அளவில் யுத்தம் தொடங்கிய பிறகு மகேஸ்வரனிடமிருந்து தகவல் ஏதும் வராது போயிற்று. ''இப்ப பள்ளிக்கூடம் நடக்கிறதில்ல. ஆம்பிளையள் சண்டைக்குத்தான் போகினம்...'' என்ற செவிவழித் தகவல் மட்டும் கிடைத்தது. யுத்தம் உக்கிரமான காலத்தில் நீண்ட நாள்களாய் மகேஸ்வரனுக்கும் பரணீதரனுக்கும் என்னஆயிற்றோ என்று புனிதம் தவித்து அழுது கொண்டிருந்தாள்.

கடைசியில் காலம் தந்த கொடூரமான பதில்களுள் எறிகணை வீச்சொன்றில் தந்தையும் மகனுமாய் பலியான செய்தியும் இருந்தது. தனது சின்னப்பிள்ளைகளுடன் புனிதவதி கதறிய கதறலும் விட்டகண்ணீரும் இந்த மண்ணின் துயரப் பெருஞ் சூழலில் கலந்து கரைந்து உறைந்து போயின.

ஆரம்பத்தில் கையில் மடியில் இருந்தவைகளை விற்றுத் தங்கள் நான்கு பேரினது தேவைகளையும் தீர்க்க முடிந்தது. பின்னர் புனிதவதி தனது அயலில் வாழ்ந்தவர்களின் வீடுகளில் வளவு கூட்டவும் சின்னச்சின்ன வேலைகள் செய்யவுமெனப் போனாள். பின்னர் தூரத்து உறவினர் ஒருவரின் உதவியால் சிறிது தொலைவிலிருக்கிற வீடொன்றில் உத்தியோகம் பார்க்கும் கணவன் மனைவியருக்குக் குழந்தைகளைப் பராமரிக்கவும் வயோதிபத் தாயாருக்கு உதவவுமென நிரந்தரமாய்ப் பணியாற்றத் தொடங்கினாள்.

பதினைந்து வயது நிரம்பிய செந்தாமரையும் சில சமயங்களில் தாயாருக்கு உதவியாகச் செல்வாள். அவ்வாறு அவள் சென்றிருந்த சமயம் தான் அந்த வீட்டுக்காரனின் உறவுக்காரர் ஒருவர் வீட்டில் கூட்டிப்பெருக்க ஆள் வேண்டுமென்றும், சனி ஞாயிற்றுக் கிழமைகளில் வந்தாலே போதும் என்றும் கேட்டார்.

மனைவி, பிள்ளைகளைக் கனடாவுக்கு அனுப்பிவிட்டுத் தனியாளாக வசிக்கின்ற வயோதிபருக்கு வீடு வாசலைப் பராமரிப்பதில் உதவி தேவையென்றே புனிதவதியைக் கேட்டபோது, சனி, ஞாயிறு தினங்களில்

**ந.சத்தியபாலன்**

செந்தாமரைக்குப் பாடசாலை இருக்காது என்பதால் அவளை அனுப்பத் தீர்மானித்தாள். முதலில் தயங்கிய செந்தாமரை தாயின் வேண்டுதலை மறுக்க முடியாமல் செல்லத் தொடங்கினாள்.

(20 பக்கம் பார்க்க...)

# இரு உள்ளங்கள் இணைந்த வாழ்வே அன்பு வாழ்வு

''மலரை விட மென்மையானது காதல்!'' என்கிறார் திருவள்ளுவர்.

காதல் இன்பம் மலரைவிட மென்மையானதாக இருக்கும். அந்த இன்பத்தைச் சிலராலே தான் அனுபவிக்கவும், சுவைக்கவும் முடியும்.

அம்பிகாபதி அமராவதி காதல், ரோமியோ யூலியட் காதல், இவையெல்லாம் மலரைவிட மென்மையான காதல். இங்கிலாந்து நாட்டு இளவரசர் ஒருவர் காதலுக்காக முடிதுறந்தாரே அதுவும் மென்மையான காதல் தான்.

அதிக சீதனம் கிடைக்கிறது என்பதற்காகக் காதலித்த பெண்ணைக் கைவிடுவதும் உயர்ந்த உத்தியோகம் என்பதற்காகக் காதலித்த ஆணைக் கைவிடுவதும் காதல் அல்ல வெறும் விலங்குணர்வே ஆகும்.

தன்னலம் கருதாது காதலனின் நன்மையே கருதும் காதலியும், தன்னலம் கருதாது காதலியின் நன்மையே கருதும் காதலனும் கொண்டிருப்பது தான் மலரினும் மென்மையான காதல்.

இந்தக் காதல் மிகச் சில சோடிகளுக்குத்தான் அமையக் கூடும் என்பதை திருவள்ளுவர் ''மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன் செவ்விதலைப் படுவார்'' என்று கூறுகின்றார்.

அந்தச் சிலர் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒருவர் பிரிவை ஒருவர் தாங்கிக் கொள்ளமாட்டார்.



தலைவனும், தலைவியும் கொளுகொம்பும் கொடியுமெனப் பற்றியிருந்த நிலையில் தலைவன் ''அன்பே இப்பிறப்பில் உன்னைப் பிரியேன்'' என்றான். தலைவி அழத் தொடங்கிவிட்டாள். இப்பிறப்பில் பிரியேன் என்றதற்கு மகிழ்ச்சி அடையாது அழுகிறாளே என்று திகைத்தான். இப்பிறப்பில் பிரியேன் என்றால் மறுபிறப்புக்களில் பிரிவேன் என்ற குறிப்பு இருப்பதைப் பின்னரே தலைவன் உணர்ந்தான்.

''இம்மைப் பிறப்பில்
பிரியலம் என்றேனால்
கண்ணிறை நீர் கொண்டனள்''
என்று கூறுகின்றான்.

மலரைவிட மென்மையான காதல் உள்ளம் கொண்டவர்கள் பிற உயிர்களிடத்தும் மென்மையாகவே நடந்து கொள்வார்கள்.

தொழில் காரணமாகத் தன் காதல் மனையாளைப் பிரிந்து செல்கிறான் தலைவன். எப்போது தொழில் முடியும் எப்போது காதல் மனையாளிடம் திரும்பிச் செல்ல முடியும் என்ற ஏக்கம் தலைவனின் அடி மனதில் இருந்தது. அவன் மேற்கொண்ட தொழில் வெற்றியாக முடிந்தது. வெற்றி மகிழ்ச்சி ஒருபுறம். காதல் மனையாளை காணப்போகிறோம் என்ற உவகை ஒரு புறம். விரைந்து செல்லக் கூடிய நெடுந் தேரில் புறப்படுகிறான். செல்லும் பாதையில் இருமருங்கிலும் பெரும்மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. கண்ணுக்கு அழகையும் , காற்றுக்கு நறுமணத்தையும் கொடுக்கும் மலர்கள், அத்துடன் நின்று விடுகின்றனவா? வண்டுகளுக்குத் தேனையும் அல்லவா கொடுக்கின்றன. இதனால் மலர்களில் எல்லாம் ஆண் வண்டும் பெண் வண்டுமாகச் சோடி சேர்ந்து தேனை உண்கின்றன.

தேரின் மணி ஓசையால் வண்டுகள் தேன் உண்பதை விட்டுச் சோடி பிரிந்து கலக்க முறுமே என்று எண்ணுகிறான் தலைவன். உடனே தேரை நிறுத்துகிறான்.

மணியினுடைய நாவு மணியுடன் அடிபட்டு ஓசை எழாதவாறு மணியின் நாவை கயிற்றினால் இழுத்துக் கட்டுகிறான். பின் தேரை ஓட்டுகிறான். இப்

## இலக்கியக் காட்சி – ௬௧

போது மணியின் பேரொலியும் இல்லை வண்டுகளுக்குத் தொல்லையும் இல்லை. ''பூத்த பொங்கர்த்துணையொடு வதிந்து தாதும் பறவை பேதுறல் அஞ்சி மணி நா ஆர்த்த மாண் வினைத் தேரன்'' என்கிறது அகநானூற்றுப் பாடல். மலரைவிட மென்மையான உள்ளம் கொண்ட தலைவன் தன்னலம் கருதாது தலைவியின் நலனையே கருதுவான். மலரை விட மென்மையான உள்ளம் கொண்ட மனைவி தன்னலம் கருதாது தலைவன் நலனையே கருதுவாள். இந்த இரண்டு உள்ளங்களும் இணைந்த இல் வாழ்வே அன்பு வாழ்வாகும். அதுவே தமிழ்ப் பண்புடன் இணைந்த வாழ்வுமாகும்.

**புலவர் ம. பார்வதிநாதசிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக வங்கியின் முக்கிய அதிகாரி ஜனாதிபதியைச் சந்தித்தார்

கொழும்பு, டிசெ.19

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி நகோஸி ஒகொன்ஜோ நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (சி)


# LONDON இல் உயர்கல்வி.

இலகுவில் விசாக்களை பெற்றுக்கொள்ள இறுதி வாய்ப்பு!

நாம் பிரிட்டானியாவின் பல உயர் தரமான கல்லூரிகளின் அங்கீகாரமான முகவர்களாக தொழிற் படுகிறோம்.

IELTS இன்றி விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 30/01/2011



பெப்ரவரி / ஏப்ரல் மாதத்திற்கான நுழைவுகள் தற்போது ஆரம்பம்!

**எமது சேவைகள் அனைத்தும் இலவசம்.**

- அடிப்படை தகைமை G.C.E O/L
- O/L தகைமை இல்லாதவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- A - Grade கல்லூரிகளிடமிருந்து அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.
- வெளிநாடு சென்றவர்களின் புகைப்படங்களை எமது நிறுவனத்தில் வந்து பார்வையிடலாம்.
- QISAN (UK) அமைப்பினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்.
- Sponsor ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- இலவச ஆங்கில வகுப்புக்கள்

8 வருட நம்பகரமான சேவை

Approved & Accredited By :
Quality Study Abroad Network.
United Kingdom. Reg.No: QRS12007004

0755 091 091
0756 877 877

EBS INTERNATIONAL (PVT) LTD
No. 35, St. Lawrence Road, Colombo 06.
T: (011) 2362534
e: ebsmanager@gmail.com
Reg No: N(PVS) 352110
www.ebslk.com


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அவனியின் மடியில் 24 . 06 . 1946

ஆண்டவன் அடியில் 12 . 01 . 2006



### அமரர் சின்னத்தம்பி நடராசா

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

திதி: திரயோதசி

ஆண்டுகள் ஐந்தாக ஓடி விட்டது
ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும் எம்மீது கொட்டி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வமே! ராசா
எம்மையெல்லாம் துன்பக் கடலிலே தவிக்கவிட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்
மன மகிழ்ந்து நினைக்கும் முன்பே
பொல்லாத காலனவன் பறித்தெடுத்தான் -உங்கள்
உயிரைத் தேடுகின்றோம் கதறி அழுகின்றோம்
பாவத்தை அறியாத உங்களுக்கு ஆண்டவன்
சந்நிதியில் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கச்சாய் வீதி, கொடிகாமம். குடும்பத்தினர்.

(107423)

## அகில இலங்கை பிராமண சமாஜத்தின் கண்ணீர் அஞ்சலி



சங்கானை
ஸ்ரீ முருகமூர்த்தி
தேவஸ்தான ஆதீன
குருவும், சர்வதேச
இந்துமத குருபீடத்தின்
யாழ். மாவட்டத்
தலைவருமாகிய
பிரதிஷ்டா
கிரியாரத்தினம்
சிவாகம கலாநிதி
**சிவப்பிரம்ம ஸ்ரீ
சிவ. நித்தியானந்த
சிவாச்சாரியார்**
அவர்களின் திடீர் மறைவு
குறித்து சர்வதேச
இந்துமத குருபீடத்தின்
அனைத்து குருமார்கள்
சார்பில் கண்ணீர் அஞ்சலி.

சிவாச்சாரியாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர், ஊர்ப் பொதுமக்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, நித்தியானந்த சிவாச்சாரியாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**
இலங்கை பிராமண சமாஜத்தின் தலைவர்,
அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ் சாம்பசிவ சிவாச்சாரியார் J.P.
(தலைவர், இந்துசமய கலாசார முத்தரிப்பு [illegible])

(107474)

## 30ஆம் நாள் நினைவஞ்சலி

பிறக்கும்போது நீ அழுதாய் 27 . 10 . 1927

உயிர் துறக்கும்போது நாம் அழுதோம் 21 . 11 . 2010



### அமரர் வேலாயுதம்பிள்ளை கருணானந்தராஜா (N.G.V.G.ராஜன்)

(பிரபல சோதிடர், ராஜன் சோதிட மஹால் - தும்பளை)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழ வைத்து மகிழ வைத்து
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொற் பேசி
அறிவுரைகள் பல கூறி
அன்புடன் எம்மைப் பேணிக்காத்து
அனைவருடனும்
பாசத்துடனும் நேசத்துடனும்
வாழ வைத்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
பெரியப்பாவே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
நாம் எல்லோரும் பிரார்த்திக்கின்றோம்.

ராஜன் சோதிட மஹால்,
[illegible] ஒழுங்கை,
[illegible], பருத்தித்துறை.

(107492) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்

## நான் பார்த்த கண்காட்சி

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கண்காட்சியைப் பார்க்கச் சென்றோம்.
அங்குள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் எங்களை அன்போடு வரவேற்றனர்.
என்போன்ற மாணவர்களின் ஆக்கத்திறனும் நுட்பமும் என்னை வியக்க வைத்தன.
சவர்க்காரத்தில் நுட்பமாகப் பல விதமான உருவங்களைச்செய்து வைத்திருந்தார்கள்.
மரத்தினால் செதுக்கப்பட்ட பாம்பு, வீடு, கப்பல், கிணறு என்பவற்றைப் பார்வையிட்டேன்.
சித்திரங்கள் கைகளால் சுரண்டுதல், கிறுக்கல் போன்று வகைவகையாகப் பிரிக்கப்பட்டு இருந்தன.
கடதாசியினால் வீணை, புல்லாங்குழல், நாதஸ்வரம், தபேலா, உடுக்கு, யாழ், வயலின் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.
அனர்த்தம், சுனாமித்தாக்கம் பற்றி அறிந்து கொண்டேன்.
அங்கு அழகான கோலத்தையும் பார்த்தேன்.
சிவலிங்கம் கல்லினால் கட்டி இருப்பதையும் கண்டேன்.
பின் ஒரு அறைக்குச்சென்று றெஜீபோம் பொம்மையைப் பார்த்தேன.
பின்னர் இன்னொரு அறைக்குச் சென்று சுற்றாடலை எப்படிப் பாதுகாப்பது என்று அறிந்து கொண்டேன்.
அங்குள்ள காட்சியில் என்னை மிகவும் கவர்ந்தது வாத்தியங்கள் ஆகும்.

ச.குபேரன் - தரம் - 4,
யா/சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலை.

## மரத்திலே பூக்காத பூ

சிறுவர் செய்யும் பூ - குறும்பு
மனிதன் பேண வேண்டிய பூ - மதிப்பு
புத்திசாலியான பூ - எறும்பு
இதயத்தில் ஓடும் பூ - துடிப்பு
அடிக்க உதவும் பூ - கம்பு
வயலில் உள்ள பூ - வரம்பு
இருட்டான பூ - கறுப்பு
எல்லோருக்கும் தேவையான பூ - அன்பு
மனிதன் புகழும் பூ - சிறப்பு
மனிதனுக்கு இருக்க வேண்டிய பூ - பண்பு

கு.நவநீதன் - தரம் - 6 'இ'
யா/மத்திய கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!
'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள்

## விடை தெரியுமா? 86

**உங்களுக்கும் பரிசில்கள்**

01. வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
02. ஒரு சொட்டு இரத்தத்தில் எத்தனை சிவப்பணுக்கள் இருக்கும்?
03. கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அறிமுகம் செய்த நாடு எது?
04. பிரான்ஸின் 2011 ஆம் ஆண்டுக்கான அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
05. இந்த ஆண்டின் டெனிஸ் வீராங் கனையாகத் தெரிவு செய்யப் பட்டவர் எந்த

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 25.12.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.


### விடைகள் - 84

1. 1991 ஆம் ஆண்டு.
2. வெஸ்ட மின்ஸ்டர் அபிபே தேவாலயம்.
3. பேராசிரியர் ரட்ணஜீவன் கூல்.
4. ஹிசாடே புருஷிமா.
5. திருவாவடுதுறை ஆதீனம்.

**பரிசுபெறுவோர் விவரம்**

01. யோ.சிவரஞ்சினி, தரம் - 7
மட்டுவில் கமலாசனி கனிஸ்ட மகா வித்தியாலயம்.
02. ப.ஹம்ஷா, தரம் - 8 'சி'
கொக்குவில் இந்துக் கல்லூரி.
03. க.கபிலன், தரம் - 7
யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.
04. இ.சங்கீதா, தரம் - 5
சங்குவேலி அ.த.க. பாடசாலை.
05. ம.மதுமிதா, தரம் - 5
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.

## மாணவர் தூரிகை




ஆனந்தவிஷ்ணு தரம் 9 A
யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்.



ந.பக்தீசன் - தரம் 8 C
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி.



S.Thusya 8
J/H.F. Convent



நிலா - தரம் 4 B
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

## பொது அறிவு வினா விடை

1. ஆபிரிக்காவின் பெரிய நாடு எது?
★ சூடான்
2. ஐ.நா. சபையின் சின்னம் யாது?
★ ஒலிவ் மரக்கிளை
3. எத்தியோப்பியாவின் பழைய பெயர் என்ன?
★ அபிசீனியா
4. உலகிலே யானைகள் அதிகமாக உள்ள நாடு எது?
★ சிம்பாப்வே
5. இந்து மதத்தின் மறுபெயர் என்ன?
★ சனாதன தர்மம்
6. உலகப் புகழ்பெற்ற ஓவியர் யார்?
★ பிக்காசோ
7. தேனியின் சேகரிப்புப் பொருள் யாது?
★ தேன்
8. எய்ட்ஸ் நோயைக் கண்டு பிடித்தவர் யார்?
★ லொக்மொனிட்டர்
9. இலங்கையில் மார்பு நோய் வைத்தியசாலை உள்ள இடங்கள் எவை?
★ வெலிசறை ★ கந்தானை
10. இலங்கையில் சுண்ணாம்புக்கல் கிடைக்கும் இடம் எது?
★ யாழ்ப்பாணம்.

மு.துஷிதரன் - தரம் - 6 'இ',
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## பச்சைக் கிளி...!

கிளியே கிளியே பறந்து வா,
கார் மேகம் தாண்டி வா,
பச்சைக் கிளியே பாய்ந்து வா,
கிளைகள் தாண்டி ஓடி வா!...

கீ...கீ... கிளியே கிட்டவா
தென்னம் கிளியா?... பனம் கிளியா?...
பதற்றமின்றி நீ சொல்லு
பயமின்றி நாம் பழகிடுவோம்...!

குறும்புத் தனங்கள் செய்திடுவோம்
கும்மாளமாய் இருந்திடுவோம்,
நிறைகள் அனைத்தும் நீ சொல்ல
நாங்கள் கேட்டு மகிழ்ந்திடுவோம்...!

வசந்தன் நிருபாமா - தரம் - 3 'ஏ'
வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாஷ் தெளிவான நடைமுறைகளும்... சரியான தெரிவுகளும்...

வம்புக்கென்றே
அரசு முனைந்து
நிற்கிறதா?
பொருள் விலையேற்றம்...
கட்டுப்படுத்த முடியாதாம்!
வழங்க முடியாதாம்
சம்பள உயர்வு....

ஆனால் ...
வெளிநாட்டுத்
தேன்நிலவுப் பயணங்களுக்கு...
உள்நாட்டுக்
கொண்டாட்டங்களுக்கு...
கோடிக்கணக்காகக்
கொட்ட முடியுமாம்!
எல்லாம் மக்கள்
வரிப்பணம்.

கடந்த 10 மாதங்களில்
மட்டும்
யாழ்ப்பாணத்தில்
பெற்ற வரி
14 கோடிகளாமே!

இந்த இலட்சணத்தில்
மகாநாயக்கர்
வாயை அடைக்கப்
புதுக் கார்.

அரசியல் இருப்பை
உறுதி செய்து கொள்ள
மந்திரி சபை விஸ்தரிப்பு.

எதோ, சிறுபான்மையினர்
எமக்காகக்
கதைத்துக் கொண்டிருந்த
வாசுதேவாவுக்கும்
அமைச்சர் என்ற வாய்ப்பூட்டு.

இவை போதாதென்று...
நம்ம மந்திரி
மேர்வினுக்காக
அவர் தம் நடைமுறைத்
தகுதி காண் பரீட்சையில்
தேறியதால்....
புதிய அமைச்சொன்று
உருவாக்கமாம்.

அன்று ஊடகத்துறையைத்
தாக்கினார்....
ஊடக அமைச்சரானார்.


இன்று பொதுமகனொருவரைத்
தாக்கியதால்...
''பொது சன உறவுகள்
பொதுசன விவகார''
அமைச்சராகினார்.

இந்நாட்டு சிறுபான்மை
முஸ்லிம்களுக்குக்
கிடைத்தது 'நீதி'
அமைச்சராகினார்
ரவூப் ஹக்கீம்

அரச பின்வரிசை
எம்.பிகளின்
மனம் குளிர
'ப்ராடோ' அதி சொகுசு
வாகனம்.
ஒவ்வொன்றும்
எறத்தாழ
இரண்டு கோடி ரூபாய்களாம்!
மக்கள் நாம் எல்லோரும்
இந்நாட்டு மன்னர்களாமே!
வேண்டாமப்பா...
மன்னர்களுக்கு
இங்கேது மரியாதை!
எங்களையும் மந்திரிகள்
ஆக்கிவிடுங்கள்.

ஏ.எம்.கமால்

## ஒரு பிஞ்சின் குமுறல்



கொடிய யுத்தத்தால்
அன்னையை நானிழந்தேன்
கொடும் சுனாமியால்
தந்தையை நானிழந்தேன்
செம்மணிப் பரப்பினிலே
தங்கையை நானிழந்தேன்
முள்ளி வாய்க்காலில்
என் மொத்த உறவுகளையும்
இழந்தேன்
இத்தனை துயரச் சிலுவைகளைச்
சுமந்த நான்
இறுதியில் என்னையும்
இழக்கத் தயாரான நிலையில்......
இரக்கமற்ற இவ்வுலகில்
என் எண்ணங்கள் யாவும்
புதைக்கப்பட்டு விட்டன
நீதி தேவன் இங்கு
நீதியற்றுப் போனதால்
அநீதிகளின் பிடிகளுக்குள் அகப்பட்டு
என் இறுதி ஆசையைக் கூட
நிறைவேற்றிக் கொள்ள
முடியாத பாவியாய்
நிர்க்கதியற்றுக் கிடக்கின்றேன்.

கைகள் கட்டப்பட்டு
கவனிப்பார் எவருமின்றி
உரிமைகளை பறிக்கப்பட்ட
நிலையில்
உணர்வுகள் இழந்த
ஜடமாய் வாடுகின்றேன்
எம் மண்ணில் இது வரை
நடந்தேறிய கொடுமைகளை
கண்டும் காணாதிருந்த
அனைத்துலக அரசுகளே!
சரணாகதியாதி விட்ட
என் போன்ற
தமிழ்ச் சகோதரர்களின்
இறுதி முடிவு என்னவென்று
சனல்- 4 மூலம்
கண்டு கொண்ட பின்னராவது
நியாயமான நம் சொந்தங்களின்
கோரிக்கைகளுக்குச்
செவி சாய்த்து நிறைவேற்றப்பார்!

கவியாக்கம்:- தமிழின் தோழன் (குப்பிளான்)

## கழுகுகள் பறந்து போனதால்

உவர் நீரை நன்நீராக்கும் கருவியைக்கொண்டு
வாருங்கள் - நம்மவரின் கண்ணீரை குடிநீராக்கி
தலைநகருக்கு அனுப்ப

★ ★ ★

பாம்புகளைப் பார்த்து தவளைகள் ஒதுங்கியே
நடக்கின்றன - கழுகுகள் வேறு இடம்
பறந்து சென்றதினால்

★ ★ ★

சில பூக்களாவது காய்த்துக் கனியாகும்
என்ற நம்பிக்கையில் பல பூக்கள்
சருகுகளாக உதிர்கின்றன

★ ★ ★

செருப்புத் தொழிற்சாலை முதலாளிகளே
உங்கள் பூஜையறையில் முட்களையும்
வைத்துப் பூஜை செய்யுங்கள்

ம.அஜித்தன்,
சரவணை.

## இலக்கிய முகம் - பெண் புலவர்கள்

எமது பண்டைப் புலவர்கள் என்றவுடன் ஆண் பாற் புலவர்களே எம்முன் அணிவகுத்து நிற்கின்றனர். பெண்பாற் புலவர் என்று எடுத்துக் கொண்டால் ஔவை யார் மாத்திரமே நம் முன்னே நிற்கிறார். ஆனால் உண்மை அப்படியல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் ஆண்களுக்கு நிகராக அரசவைகளில் புலமைக் கூடங்களில் கொடிகட்டிப் பறந்துள்ளனர்- அத்துடன் தைரியம் தன்னம்பிக்கை, வீரம், காதல் ஆகிய பல உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றலுடன் விளங் கியுள்ளனர்.

எல்லாவற்றிற்கும் மேல் காலத்தின் ''டயரியாக'' பல தகவல்களை, வரலாற்றுச் சான்றுகளை, சம்பிரதாயங் களை எடுத்துக்காட்டியுள்ளனர்.

சங்க காலம் தமிழின் பொற்காலம். அக்காலத்தில் பல பெண்கள் மிகச் சிறந்த புலவர்களாக விளங்கினார்கள். அவர்களுள் சில பெண் புலவர்கள்.

**ஔவையார்:**

இதே பெயரில் சில புலவர்கள் இருந்ததாக அறி கிறோம். அதியமானிடம் மிகவும் நட்புக் கொண்டவர். திருமுடிக்காரி என்னும் மன்னன் அதியமானுடன் போர் தொடுக்க முயன்ற பொழுது, அதியாமானின் புகழை, வீரத்தை துணிந்து கூறியவர். தொண்டமானின் கர் வத்தை ஒடுக்க, அவனிடமே அதியமானின் புகழை வீரத்தை எடுத்துக் கூறியவர். அதே அதியமான் இவரைக் கௌரவிக்கச் சற்றுத் தாமதித்த பொழுது தன்மானத்துடன் அந்த மன்னனின் தவறைச் சுட்டிக்காட்டி வெளியேறி னார். அதியமானிடம் நெல்லிக்கனி பெற்றுப் புகழ் பெற்றவர். புலவர் ஒட்டக் கூத்தரின் கர்வம் அடக்கியவர் என்றும், குழந்தைகளுக்கான நீதி நூல்கள் பல இயற் றிய ஔவைக் கிழவி என்றும் போற்றப்பட்டவர்.

**காவற்பெண்டு:** தாயே! உன் மகன் எங்கே? என்று கேட்ட பொழுது ''என்மகனா? ஏதாவது போர்க்களத்தில் இருப்பான், என்வயிறு அவன் வசித்த குகை அவ்வளவு தான்'' என்று வீரம் நிரம்பிய பாடலைப் பாடியவர்.

**வெறி பாடிய காமக் கண்ணியார்:** குறிகூறும் இயல் புடையவர். அதனை அழகாகப் பாடுவதில் வல்லவர் இப்புலவர்.

**பாரிமகளிர் :** வள்ளல் பாரியின் மகளிர். பாரியை மூவேந்தர்களும் சேர்ந்து கொன்றனர். அவர்களிடமே ''நிலா விளங்கிய அந்த நாளில் எங்கள் குன்றும் எங் களிடம்; எங்கள் தந்தையும் இருந்தார். ஆனால் இன்றோ, மூவேந்தர்களும் எங்கள் குன்றையும் கொண்டனர், எங் கள் தந்தையும் இல்லை.'' என்றுபாடி அவர்களை அவர் களின் செயலுக்காக வெட்கும்படி செய்தவர்கள்.

[illegible] ாக வாழும் மலை எங்கள் மலை. வீரம் நிரம்பியவன் தலைவன் எனும் புறநானூற்றுப் பாடலைப் பாடியவர், குறவர் இனத் தைச் சார்ந்தவர். கல்விக்குப் பிறப்பு ஒரு தடையே இல்லை என்று நிரூபித்தவர்.

**மாரிபித்தியார்:** முதலில் உலக இன்பம் துய்த்து பின்பு காட்டில் தவம் செய்து வாழும் தலைவன் பற்றிப் பாடியவர்.

**நக்கண்ணையார்:** மல்யுத்தத்தில் வென்றபெருநற் கிள்ளியின் வீரத்தைப் பாடியவர்; அவரிடமே காதல் கொண்டு அதை வெளிப்படுத்த முடியாது வாழ்ந்தவர்.

**பூங்கணுத்திரையார் :** தன் மகனைப் போருக்கு அனுப்பி, அச்சிறுவன் நன்கு போரிட்டு வீரமரணமடைந்த பொழுது, பெற்றபொழுதைவிட இன்றுமேலும் மகிழ்கிறேன். என்று ஆனந்தக் கண்ணீர் வடித்த வீரத்தாய் பற்றிப் பாடியவர்.

**மாசாத்தியார்:** தேர்ப்பாகன் தேரோட்டும் காட்சியை யும் வருணணைக் காட்சியையும் ஒப்பற்று வர்ணித்தவர். தன் சகோதரன், தன் கணவன், தன் சிறு பையனையும் போருக்கு அனுப்பும் பாடலைப் பாடையவர்.

**வெண்ணிக் குயத்தியார்:** போரில் கரிகாற் சோழன், சேரனை எதிர்த்து வெற்றி பெற்றதைப் பாடலாகப் பாடி யவர் சொல்லாட்சியில் சுவை படைத்தவர்.

**இளவெயினி:** சாதாரணமான குலத்தில் பிறந்தவர். சேர மன்னனின் கொடைக் குணத்தை மிக நயமாகப் பாடியவர்.

**பெருங்கோப்பெண்டு:** அரசர் பூதப் பாண்டியனின் மனைவி. அரசர் மாண்டதும் தானும் உயிர் நீத்தவர். இவ ரது பாடல் மூலம் அக்காலப் பெண்டிர் கணவனை இழந்த பின்பு நெய் கலவாத சோறு, எள் துவையல், புளியிட்டுச் சமைத்த வேளைக் கீரை மட்டுமே உண்பர் என்பது அறி யக் கிடக்கிறது. வெறும் தரையில் படுப்பர் என்பதும் தெரி யவருகிறது.

**தாயங்கண்ணியார்:** அந்தணர் குலத்தவர். அக் குலத்தில் கணவனை இழந்தால் கூந்தலை மழித்துக் கொள்வர், வளையல்களை நீக்குவர் என்றும் ஆண்கள் குடுமி வளர்த்து வந்தனர் என்றும் இவரது பாடல்கள் மூலம் தெரியவருகிறது.

**நப்பசலையார்:** நல்ல இசை கேட்டால் வாழும் மோச மான இசை கேட்டால் மாளும் அசுணம் எனும் பறவை பற்றியும் கிள்ளிவளவன், திருமுடிக்காரி பற்றியும் இவ ரது பாடலில் அறிய முடிகிறது.

**முடத்தாமக் கண்ணியார்:** பொருநர் ஆற்றுப்படை பாடியவர். கரிகாலன் புகழ் பாடியவர். பொருநர்கள் பற் றிய விவரங்களைத் தரும் நூல் படைத்தவர்.

**நச்செள்ளையார் :** காக்கை கரைந்தால் விருந்து வரும் நெய் கலந்த அரிசிச் சோறை அது உண்ணும் என்று பாடி யவர். பதிற்றுப்பத்தில் ஆறாம் பத்துப் பாடியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேசத்தின் அதிபருக்குக் காட்டப்படும் எதிர்ப்பு எவ்வாறு தேசத்துக்குக் காட்டப்பட்ட எதிர்ப்பாக இருக்க முடியும்? மஹிந்தவின் மேலும் அவரது அதிகாரிகள் மீதும்தான் போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றனவே ஒழிய, இலங்கைத் தீவின் மேல் அல்ல.

# யார் தேசத்துரோகி?

தேசப்பற்று, தேசத்து ரோகம், நாட்டைக் காட்டிக் கொடுத்தல் போன்ற வார்த்தைகள் இப்போதெல்லாம் மிக அதிகமாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு சிலர் தம்மை உத்தமர்களாகக் காட்டவும் சிலரைக் கீழ்மைப் படுத்தவும் இப்பதங்கள் பாவிக்கப்படுகின்றன.

லண்டன் மாநகரில் தமிழர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பயணத்துக்கு எதிராக நடத்திய பெரும் ஆர்ப்பாட்டமும் அதன் காரணமாக அவர் ஒக்ஸ்போட் யூனியனில் ஆற்ற இருந்த உரை இரத்தானமையும், இலங்கையில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தின.

இந்த அதிர்வுகளின் போது மேற்சொன்ன வார்த்தைகள் தாராளமாகவே பலரின் வாய்களிலிருந்து வெளிவந்தன.

### மாட்டிய ஜயலத்

அந்த ஆர்ப்பாட்டத்தைத் தூண்டிவிட்டவர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா குற்றம் சாட்டப்பட்டார். அவர் தனக்கும் அந்த ஆர்ப்பாட்டத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் தான் அந்த நாளில் இத்தாலியில் இருந்தார் எனவும் விளக்கம் அளித்த போதும் எவரும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

மாறாக மறைந்த 'மாக்சிஸ்ட் தந்தை' என வர்ணிக்கப்பட்ட பிலிப் குணவர்த்தனவின் மகனான தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் விமல் வீரவன்ச உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றில் ஜயலத்தைத் தாக்க முயன்றனர். தேசத்துரோகி என்றும் நாட்டைக் காட்டிக் கொடுத்தவர் எனவும் திட்டினர்.

**சந்திரசேகர ஆசாத்**

இந்தச் சண்டித்தனத்தில் அன்று பங்கு கொள்ளாமைக்காக அமைச்சர் மேர்வின் சில்வா பெரிதும் கவலைப்பட்டாராம். இப்போது ஜயலத் ஜெயவர்த்தனா மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

### கரு அடுத்த இலக்கு

அடுத்தவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா.

போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கு ஜனாதிபதி இடமளிக்க வேண்டும் எனக் கேட்டதுதான் அவர் செய்த மிகப் பெரிய குற்றம். அரசமைப்பின்படி ஜனாதிபதியை விசாரணைக்கு உட்படுத்துவது பெரும் தவறாம். எனவே கரு ஜெயசூரியவின் விளக்கங்கள் எதுவும் காதில் வாங்கப்படாமலே அவரும் தேசத் துரோகியாக்கப்பட்டார்.

மற்றொருவர் விக்கிரபாகு கருணரத்தின. லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தூண்டியவர் எனக் குற்றம் சுமத்தப்பட்டு தேசத் துரோகியாக்கப்பட்டார். அவரின் வாகனமும் கட்டுநாயக்காவில் தேச பற்றுக் குண்டர்களால் சேதமாக்கப்பட்டது.

இவர்களைத் தேசத்துரோகிகள் எனக் குற்றம் சாட்டியவர்கள் லண்டனில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒரு மாபெரும் தேச விரோதச் செயல் என்றனர். மேற்குறிப்பிட்ட மூவரும் அதற்குத் துணைபோன குற்றவாளிகள் என்றே கொதிப்படைந்தனர். அதேசமயம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களோ அந்த ஆர்ப்பாட்டத்திற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று நிரூபிக்கவே முயன்றனர்; முயன்று கொண்டிருக்கின்றனர். அந்த வகையில் அவர்களும் அந்த ஆர்ப்பாட்டம் ஒரு குற்றச் செயல் என ஒத்துக் கொள்கின்றனர்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த மாத ஆரம்பத்தில் லண்டனுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து விமான நிலையத்தில் கூடியிருக்கும் தமிழர்கள்.

### அமெரிக்காவில் தேசத் துரோகமல்ல

எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் மக்கள் தங்கள் எதிர்ப்புணர்வை ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் மூலம் காட்டுவதே வழமை. அமெரிக்கப் படைகள் வியட்நாம் மண்ணில் மேற்கொண்ட மைலாய் படுகொலைகள் உட்பட்ட குற்றச் செயல்களுக்கு எதிராக அமெரிக்க மக்கள் தமது நாட்டு வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களை யாருமே தேசத் துரோகிகள் எனக் கூறவில்லை.

தமிழர் வாழும் பகுதிகளில் எத்தனை மைலாய் படுகொலைகள் நடத்தப்பட்டன. போரின் இறுதி நாள்களில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட 40,000 தமிழ் மக்களின் பிணங்களின் துயரத்தை முடியாகச் சூடித்தானே இந்தப் போரின் வெற்றிவாகை சூடப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் பலிகொள்ளப்பட்டவர்களின் அண்ணன் தம்பி, அக்கா தங்கை, தாய் தந்தை உட்பட அவர்களின் உறவுகள் போருக்குத் தலைமையேற்று நடத்திய முப்படைகளின் தளபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவது, நியாயமற்ற செயல் எனக் கூறிவிட முடியுமா? அதைத் தேசத் துரோகம் எனக் கூறி விடமுடியுமா?

இன்று உலக மனித உரிமை அமைப்புக்கள், ஊடகங்கள் எனப் பல்வேறு தரப்புகளும் இலங்கைப் படையினரின் போர்க் குற்றங்களுக்கு எதிராக ஆவேசக் குரல் எழுப்புகின்றன. இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த உரிமை இல்லையா?

### ஆக்கபூர்வ முயற்சிகள் இல்லை

போர் முடிந்து 20 மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கி [illegible] எந்த ஒரு முயற்சியும் எ[illegible]கிலும் கிழக்கிலும் சிங்களக் குடியேற்றங்கள் முடுக்கிவிடப்படுகின்றன. போரின் பாதிப்பில் இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றங்கள் சீரான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. அவர்களின் புனர்வாழ்வுக்கான உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

**ஞாயிறு காரம்**

18 ஆவது திருத்தச்சட்ட மூலமும் உள்ளூராட்சி சபைச் சட்ட மூலமும் மாகாண சபைகளுக்கு இருந்த சிறு அதி காரங்களை யும் பறித்துவிட்டன. அரச நிர்வாக சேவைக்கு சிங்களவர் மட்டுமே தெரிவு செய்யப்படுகின்றனர். தமிழர்கள் முற்றாகவே புறமொதுக்கப்படுகின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் போரினால் திணிக்கப்பட்ட அழிவுகளுக்கு மேலாக தமிழினத்தின் மேலான ஒடுக்கு முறை மேலும் மேலும் வலு வடைந்து வருகிறது. இத்தகைய கொடு மைகளை எதிர்த்து லண்டன் வாழ் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து தங்கள் எதிர்ப் பைத் தெரிவிப்பது எப்படித் தவறாக இருக்க முடியும்?

ஒரு தேசம் என்பது வெறும் நிலப் பரப்புடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அதற்கெனத் தேசிய இனங்கள், மதங்கள் உள்ளன. அவைகளின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் மொழிகள், மதங்கள், கலாசாரங்கள் என்பனவும் அவற்றுக்குள் உள்ளடங்கும்.

### தனிநபர் எதிர்ப்பு தேசத்துரோகம் ஆகுமா?

ஒரு தேசத்தின் ஆட்சிமுறை, தலைமை என்பவை நிரந்தமானவையல்ல. இன்று ஒருவர் நாட்டின் தலைவராக இருக்கலாம். நாளை அவர் தூக்கி வீசப்பட்டு இன்னொருவர் நாட்டின் தலைவராகலாம். ஆனால் தேசம் நிரந்தரமானது.

ஒரு தேசத்தின் அதிபருக்குக் காட்டப்படும் எதிர்ப்பு எவ்வாறு தேசத்துக் [illegible] எதிர்ப்பாக இருக்க [illegible] ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மேலும் அவரது அதிகாரிகள் மீதும் தான் போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றனவே ஒழிய, இலங்கைத் தீவின் மேல் அல்ல.

லண்டன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மக்களும் இலங்கை மக்களே; இலங்கையின் தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தது தங்களை ஒடுக்குகிறார் எனத் தாங்கள் எண்ணும் ஓர் ஆட்சியாளனுக்கு எதிராக. தங்கள் தாய் நாட்டுக்கு எதிராக அல்ல! இங்கு இலங்கையின் நற்பெயருக்கு எவ்வித களங்கமும் ஏற்படவில்லை.

ஆனால் சிங்கள மக்களோ பொய்மைகள் மூலமும் மாயைகள் மூலமும் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தேசம் என்றால் ராஜபக்ஷ குடும்பம் என்ற போலித் தோற்றம் சிங்கள மக்களின் சிந்தனைகளில் வலிந்து திணிக்கப்படுகிறது. அவர்களும் அதை ஏற்று ஏமாறுகிறார்கள் போலவே தோன்றுகிறது. இதன் ஆபத்தை வெகுவிரைவில் அவர்கள் உணரத் தலைப்படுவார்கள்.

கடந்த காலங்களில் நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் எனப் பரப்புரை செய்யப்பட்டு போரின் பின்னால் சிங்கள மக்கள் அணி திரட்டப்பட்டனர். ஆனால், நாட்டின் இரு தேசிய இனங்களான சிங்களவரும் தமிழர்களும் சுயநிர்ணய உரிமையுடன் ஐக்கியப்பட்ட இரு தேசங்களாக ஒரே கட்டமைப்புக்குள், வாழ்வதற்கான ஏற்பாடுகளையே கடந்த கால தமிழரின் போராட்டம் வேண்டி நின்றது.

ஆனால், சிங்கள அதிகாரப்பீடத்தினர் அதைக் குழப்பியடித்து மீண்டும் போர் தொடங்கும் ஒரு சூழலை உருவாக்கினர். இன்று நாடும் நாட்டின் வளங்களும் துண்டாடப்பட்டு கொள்ளையிடப்படுகின்றன. தென்னிலங்கையின் பெரும் பகுதி சீனாவின் ஆதிக்கத்திலும், வடக்கு, கிழக்கு இந்திய ஆதிக்கத்திலும் கொண்டு வரப்படுகின்றன. இலங்கையின் கடல்வளம் ஜப்பானுக்கு விற்கப்பட்டுவிட்டது. கடல் வளத்தின் இன்னொரு பகுதி சவூதிக்கு விற்கப்படவுள்ளது. இல்மனைட், பொஸ்பேற் என்பன ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் விற்கப்பட்டுவிட்டன. மன்னார்க் கடலின் எண்ணெய் வளம் பல நாடுகளுக்கு விற்கப்படவுள்ளது.

### சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கே ஆப்பு

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, சிறிமாவோ பண்டார நாயக்கா ஆகியோரின் காலங்களில் அந்நிய நிறுவனங்கள் தேயிலைத் தோட்டங்கள் என்பன தேசிய மயமாக்கப்பட்டன. இன்றோ அந்நிய முதலீடுகளுக்கு அழைப்பு என்ற பேரில் எமது மூல வளங்கள் அனைத்தும் விற்கப்படுகின்றன. நாட்டு மக்கள் அந்நிய நிறுவனங்களின் கூலி உழைப்பாளிகள் ஆக்கப்பட்டு நாட்டின் மனித வலுவும்கூட விற்கப்படுகிறது. அதாவது இன்றைய அரசு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியக் கொள்கைகளுக்கு விரோதமான போக்கில் நடைபோடுகிறது.

விலைவாசி உயர்வு, வேலையின்மை, சம்பள உயர்வின்மை, வறுமை, பணக்காரருக்கும் ஏழைகளுக்குமான இடைவெளியின் வேகமான அதிகரிப்பு என்பனவே அதன் பயன்கள். இப்படியான நிலைமையில் யார் தேசத் துரோகி என்பதைப் புரிந்து கொள்ள முடியும். நீண்ட காலத்திற்குப் போரின் வெற்றியையும், புலிப்பூச்சாண்டியையும் காட்டி மக்களை ஏமாற்ற முடியாது.

ஒரு தேசத்தின் தலைவர் செய்த குற்றங்களுக்காக அவருக்கு மக்கள் தமது எதிர்ப்புணர்வைக் காட்டுவது தேசத் துரோகம் அல்ல என்பதைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தேசத்துக்கும் தேசத்தின் அதிகாரபீடத்தில் அமர்ந்திருக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையே உள்ள தோற்றத்தைச் சிங்கள மக்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அதுவே அவர்களது மீட்சிக்கும் வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களே..! பெற்றோர்களே..!

## A/L இற்குப்பின் அடுத்தது என்ன....?

அனுமதி இலவசம்
தொடர்புகளுக்கு:-
0214922800
0771944886

## மாபெரும்
## தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கு

கருத்துரை வழங்குவோர்:
நாட்டின் முன்னணி கல்வி, தொழில்சார் வல்லுனர்கள்

இடம்:
"யாழ், மத்தியகல்லூரி, பிரதான மண்டபம்."

காலம்:
20.12.2010 (திங்கள்) – பௌர்ணமி தினத்தன்று

நேரம்:
காலை 9.00 - 12.30 மணிவரை

அனுசரணை:

O/L , A/L மாணவர்களுக்கு
மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை

# மாபெரும் அதிரடி மலிவு விற்பனை
# கவுஸ் ஒவ் செலெக்ஷன்

இல.(22)J நவீனசந்தை, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~850~~ | 590 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1050~~ | 640 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1250~~ | 790 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1300~~ | 890 |
| ✱ கொட்டன் சாறி | ~~900~~ | 590 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1250~~ | 790 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1700~~ | 890 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1900~~ | 990 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~2200~~ | 1290 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~2450~~ | 1390 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~2850~~ | 1450 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~4850~~ | 2990 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~6750~~ | 3490 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~8500~~ | 4790 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~1900~~ | 990 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~2150~~ | 1300 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~2750~~ | 1590 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~4250~~ | 1990 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~4500~~ | 2490 |
| ✱ பஞ்சாபி | ~~1100~~ | 490 |
| ✱ பஞ்சாபி | ~~1200~~ | 600 |
| ✱ பஞ்சாபி | ~~1300~~ | 650 |
| ✱ பஞ்சாபி | ~~1600~~ | 790 |
| ✱ பஞ்சாபி | ~~2400~~ | 1390 |
| ✱ பஞ்சாபி பீஸ் சில்க் | ~~1450~~ | 890 |
| ✱ பஞ்சாபி பீஸ் சில்க் | ~~1900~~ | 1190 |
| ✱ ஸ்கேட் | ~~550~~ | 290 |
| ✱ ஸ்கேட் | ~~775~~ | 490 |
| ✱ ஸ்கேட் | ~~850~~ | 550 |
| ✱ ஸ்கேட் | ~~1250~~ | 690 |
| ✱ ஸ்கேட் | ~~650~~ | 390 |
| ✱ கொட்டன் பிறின் 01m | ~~170~~ | 140 |
| ✱ சீத்தை 01m | ~~110~~ | 80 |
| ✱ பட்ட சில்க் 01m | ~~150~~ | 120 |

| | | |
|---|---|---|
| ✱ பிளவுஸ் | ~~475~~ | 200 |
| ✱ பிளவுஸ் | ~~600~~ | 350 |
| ✱ பிளவுஸ் | ~~675~~ | 390 |
| ✱ லேடிஸ் T.சேட் | ~~350~~ | 100 |
| ✱ லேடிஸ் T.சேட் | ~~450~~ | 250 |
| ✱ லேடிஸ் T.சேட் | ~~550~~ | 300 |
| ✱ சோலிகிற் | ~~1850~~ | 490 |
| ✱ சோலிகிற் | ~~2800~~ | 890 |
| ✱ ஸ்கேட்பீஸ் | ~~1250~~ | 790 |
| ✱ ஸ்கேட்பீஸ் | ~~1350~~ | 890 |
| ✱ டெனிம் ஜீன்ஸ் | ~~2150~~ | 1390 |
| ✱ ரவுசர் | ~~1400~~ | 790 |
| ✱ டெனிம் ஜீன்ஸ் சிறிது | ~~750~~ | 390 |
| ✱ டெனிம் ஜீன்ஸ் சிறிது | ~~950~~ | 490 |
| ✱ சோட்ஸ் சிறிது | ~~475~~ | 290 |
| ✱ சோட்ஸ் சிறிது | ~~650~~ | 390 |
| ✱ சோட்ஸ் சிறிது | ~~850~~ | 490 |
| ✱ T.சேட் | ~~350~~ | 190 |
| ✱ T.சேட் | ~~675~~ | 390 |
| ✱ பேபிகவுண் | ~~750~~ | 490 |
| ✱ பேபிகவுண் | ~~1050~~ | 690 |
| ✱ பாட்டி புறக் | ~~850~~ | 450 |
| ✱ பாட்டி புறக் | ~~900~~ | 590 |
| ✱ சோக்கோ சேட் | ~~850~~ | 390 |
| ✱ சோக்கோ சேட் | ~~1050~~ | 690 |
| ✱ சோக்கோ சேட் | ~~1350~~ | 890 |
| ✱ சேட் L/S Box | ~~1050~~ | 690 |
| ✱ சேட் L/S Box | ~~1250~~ | 750 |
| ✱ சேட் S/S | ~~900~~ | 490 |
| ✱ வெள்ளை சேட் (சிறிது) | ~~400~~ | 250 |
| ✱ சூட்டிங் 01லெந் | ~~550~~ | 250 |
| ✱ ரெறின் 01m | ~~300~~ | 200 |
| ✱ கேட்டின் துணி (60") 01m | ~~210~~ | 170 |
| ✱ கேட்டின் துணி (48") 01m | ~~190~~ | 150 |

மிகக்குறைந்த அனுமதிக் கட்டணம் (Admission Fees) முதலாம் வருடத்திற்கு மட்டுமே

# சர்வதேச தரம் வாய்ந்த BBS பாலர் பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் January 2011ற்கான புதிய அனுமதிகள்

- ✱ 10 வருடமாக சர்வதேச தரத்திலான BBS இன் ஆங்கிலக் கற்கை நெறிகளால் யாழ்குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சிறார்கள் பயன் பெற்றுள்ளார்கள்.
- ✱ இது வரை BBS இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதி சிறந்த பாடசாலைகளில் கற்பதற்கு அனுமதி பெற்றிருப்பதுடன் 5ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்.
- ✱ யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்கென இயங்கிய ஒரே ஆங்கில மொழிமூல தனியார் பாடசாலை.
- ✱ அன்றிலிருந்து இன்று வரை அனைவரும் செலுத்தக் கூடிய ஒரே கட்டணம்.
- ✱ உங்கள் வசதி கருதி யாழ்குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான வளாகங்கள்.

**Dr. Maria Montessori & Canadian Early Learning Method ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்.**

### பாலர் பிரிவுகள்

**Play Group ( 2+ சிறார்களுக்கு)**
- Sensorial Activities
- விளையாட்டுகளுடன் கூடிய அதிநவீன கற்கை நெறிகள்.
- Song, Poems, Nursery Rhymes, Drama & Dialogue

**Montessori ( 3+ சிறார்களுக்கு)**
- மொழி அறிமுகம் – ஆங்கிலம் (Speech Skills) – தமிழ்
- எழுத்து அறிமுகம் – ஆங்கிலம் (Writing Skills) – தமிழ்
- எண் பயிற்சிகள் (Arithmetical Operations)
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue

**Pre School ( 4+ சிறார்களுக்கு)**
- எண், எழுத்து கருதுகோள்
- ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue
- அடுத்த கல்வியாண்டுக்கான முழுத் தகுதி நிலை

### பாட விதானம்

- பாடசாலை ஆரம்பம் காலை 7.30
- பாடசாலை முடிவு மதியம் 12.30
- வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச் செயற்பாடுகள்
  - Language Skils- English - 5 Hrs
  - Language Skils- Tamil - 4 Hrs
  - Maths - 4 Hrs
  - Sensorial Activities - 2 Hrs
- Song, Poem, Drama, Dialog - 2 Hrs
- Art and Craft - 2 Hrs
- Play Activities - 3 Hrs
- Baratha Natyam - 1.5 Hrs
- Computing - 1.5 Hrs

### எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்

- → English Day & Concert - ஆங்கில தின கலைவிழா
- → Sports Day- விளையாட்டு விழா
- → Bharatham Festival- பரத நாட்டிய விழா
- → Art & Craft Exhibition- சித்திர கைவேலைக் கண்காட்சி
- → Muthamilzh Vizhla- முத்தமிழ் விழா
- → Pre-School Graduation and Carol Ceremony

### BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர்: | 140, கோயில் வீதி நல்லூர். |
| கோப்பாய்: | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. |
| நீர்வேலி: | 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி: | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை. |
| மானிப்பாய்-1: | 252, ஆலடி சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய்-2: | சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம்: | Lakshmi(புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |
| புலோலி: | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி: | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை. |
| சங்கானை : | நிகர வைரவர் கோவிலடி, AGA Office அருகாமை |

British Business School
Where Students Come First

வெளிநாடுகளில் தேர்ச்சி பெற்ற கல்வியாளர்களால் சர்வதேச தரத்திற்கமைய நடாத்தப்படும் கல்வி நிலையம்.

# BRITISH BUSINESS SCHOOL

140, கோயில் வீதி, நல்லூர். தொலைபேசி: [illegible]6, 077 362 7055, 077 408 3656, 077 664 6357

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு மக்களின் மதிப்புப் பெற்ற நிர்வாகிகள்

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

### ஆவணப் பெட்டகம் 22

தாண்டவன்

**1905 செப்ரெம்பர் 24**

யாழ்ப்பாணக் கச்சேரிக்கும் பொலிஸ் நிலையத்திற்குமிடையிலான தொலைத்தொடர்புக் கேபிள் பொருத்தும் பணிகள் பூர்த்தியாகின. வான்லங் கொன்பேர்க் (Van Langenbeng) என்ற தொலைத்தொடர்புகள் உதவி சுப்பிரிண்டன் இந்த கேபிள் பொருத்தும் பணியைச் செய்து முடித்தார்.

**01.01.1906**

உப்பு வியாபாரத்தை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தது. சிவியா தெருவில் வசித்தவர்களே உப்பு வியாபரத்தில் ஈடுபட்டுவந்தனர்.

ஒல்லாந்தர் காலம் முதல் உப்பு வியாபாரம் நடைபெற்று வந்தது. 01.06.1906 முதல் உப்பு வியாபாரம் செய்பவர்கள் அரசாங்கத்திடம் அனுமதிப்பத்திரம் (Licence) பெற்றே உப்பு வியாபாரத்தில் ஈடுபட வேண்டுமென அரசாங்கம் உத்தரவிட்டது. இதன் பிரகாரம் உப்பு வரி 3.50 சதம் என அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டது.

**10.01.1906**

யாழ்ப்பாண விவசாயச்சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் அரச அதிபர் லூயிஸ், 'மரவள்ளி ஒல்லாந்தராலேயே யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட்டது' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரையொன்றை வாசித்தார்.

**ஒகஸ்ட் 1907**

சங்கிலியன் தோப்பு பராமரிப்பை அரசு பொறுப்பேற்றது.

**செப்ரெம்பர் 1907**

எண்பது வயதான ஓய்வுபெற்ற சேர்.வில்லியம் துவைனம் பதில் அரச அதிபராகப் பதவியேற்றார்.

துவைனத்தைப் பற்றி நான் ஏற்கனவே எழுதிய குறிப்புகளைப் படித்த இரு வாசகர்கள் யாழ்ப்பாணத்தில் வாந்திபேதித் தாக்கம் ஏற்பட்டபோது அப்போது அரச அதிபராக இருந்த துவைனம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இதன் காரணமாகவே நாவலர் அரச அதிபர் துவைனத்துடன் வாக்குவாதப்பட்டுக்கொண்டு கஞ்சித்தொட்டித் தருமத்தை ஆரம்பித்தாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்களது கூற்றையும் இங்கு பதிவு செய்கிறேன்.

**1907 டிசெம்பர் 14**

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. யாழ்.மாநகரசபை அப்போது உள்ளூராட்சிச்சபை (Local board) என்றே அழைக்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்துக் கிடைக்கவில்லை.

எஸ்.தம்பாப்பிள்ளை, எஸ்.கதிரவேலு, ஏ.சபாபதி (சாம் சபாபதி) ஆகியோர் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அரச அதிபர் உத்தியோக பூர்வ அங்கத்தவராக (Official Member) கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார்.

**1908 ஜனவரி**

யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபையின் முதலாவது கூட்டம் யாழ்ப்பாணக் கச்சேரியில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. ஆரம்பத்தில் யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபையின் கூட்டங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியிலேயே நடைபெற்றன. (நகர சபைக்குக் கட்டடம் அமைக்கும் வரை)

**1908 மார்ச் 6**

புகையிலைச் செய்கையை நவீனமயப்படுத்துவது பற்றிய பொதுக்கூட்டமொன்று யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெற்றது.

**1910 மார்ச் 30**

எச்.ஆர். பிறீமன் யாழ்ப்பாண அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**1910 ஓகஸ்ட் 16**

ஆளுநர் சேர். ஹென்றி மக்கலம் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்தார். யாழ்ப்பாணம் வந்த ஆளுநருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆளுநருக்கு ஒரு வெள்ளி நகைப்பெட்டி யாழ்ப்பாண மக்களின் சார்பாக அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்து சம்பிரதாயப்படி தாமரைப் பூவில் கும்பம் இந்த நகைப்பெட்டியின் நடுவே வடிவமைக்கப்பட்டிருந்தது. தட்டாதெருவைச் சேர்ந்த சுப்பையா வான்லெங் கொன்பேர்பத்தர் இந்த நகைப் பெட்டியை வடி வமைத்திருந்தார். யாழ்ப்பாணத்தில் மூன்று நாள்கள் தங்கியிருந்த ஆளுநர் உள்ளூர் அதிகாரிகளுடன் வன்னிக் குடியேற்றத் திட்டம், புகையிலைச் செய்கை, மலேரியா, இந்து மடாலயங்களின் பராமரிப்பு, கால் நடைகள், கால் நடைகளுக்கான புல்வளர்ப்பு, பரி சோதனைத் தோட் டங்கள் (Experimental gardens), குற்றச்செயல்கள், கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடினார்



**10.03.1911**

ஐந்தாவது குடிசன மதிப்பீடு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது.

வடமாகாண சனத்தொகை 369 651.

யாழ்ப்பாணம் 40 441

**20.4.1911**

நாய்களைப்பதிவு செய்யும் சட்டம் (Dogs Registratin) வடமகாணத்தில் அமுலுக்கு வந்தது.

---

# உணவில் பயன்படுத்தும் அகத்தி பல நோய்களை குணப்படுத்தும்

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**அகத்தி**

வேறுபெயர் - முனி, கரீரம்
தாவரவியற் பெயர் - Sesbania grandi Flora
(செஸ்பானியா கிராண்டி புளோரா)
குடும்பம்-Papilionaceae (பப்பிலியோனேசியே)
சிங்களப் பெயர் - கத்துரு முருங்கா
சமஸ்கிருதப் பெயர் - அகஸ்தியா
ஆங்கிலப் பெயர் - Sesbania

சித்தமருத்துவத்தின் தந்தையான அகத்தியரின் பெயரால் வழங்கப்படும் மூலிகை இது. அகத்தி அதாவது அகத்+தீ என்பது வயிற்றிலுள்ள பசித்தீயை வளர்ப்பது என்று கருத்து. விரதமிருப்பவர்களில் பசித் தீயானது மந்தமடைந்து காணப்படுவது இயல்பு. அவ்விதம் பசித்தீ மந்தப்பட்டிருந்தால் உண்ணும் உணவு சீரணம் அடையாமல் அசீரணமாகிவிடும். அவ்விதம் ஏற்படாமல் பசித்தீயை (அகத்தியை) வளர்ப்பதில் அகத்தி ஒரு சிறந்த மூலிகையுணவாக விளங்குகிறது. எனவேதான் நோன்பிருந்து பாரணை செய்பவர்களின் உணவில் அகத்தியிலை அல்லது அகத்திக் கீரை முக்கிய உணவாக இடம்பெறுகிறது. அதிலும் ஏகாதசி விரதப் பாரணையின் போது அகத்திக்கீரை விசேடமாகச் சொல்லப்பட்டுள்ளது.



அகத்தி சிறுமர வகுப்புக்குரியது. பூக்களின் நிறத்தைப் பொறுத்து சாதாரண அகத்தி (வெள்ளைப் பூ), செவ்வகத்தி (சிவப்பு நிறப் பூ) என்ற பேதங்களுண்டு. இவற்றைவிட சிற்றகத்தி, சீமையகத்தி என்ற பெயர்களுள்ள மூலிகைகளும் உண்டு. அவை இங்கு கூறப்படும் அகத்தியிலிருந்து வேறு பட்டவையாகும்.

இதன் இலைகள் கூட்டிலையாகும். 35-40 செ.மீ நீளமுடையவை. ஒரு கூட்டிலையில் 25-30 சிற்றிலைகள் வரை காணப்படும்.

மார்கழி, தைமாதத்தில் பூக்கும். பங்குனி, சித்திரையில் காய்களைக் காணலாம். இதன் விதைகளில் ஒரு நச்சுப்பதார்த்தம் உள்ளதால் உண்ணக்கூடாது. இதை வீடுகளில் வளர்த்தால் சிலவேளை குழந்தைகள் இவற்றைப் பறித்து உண்ணக்கூடும் என்று கருதியே அகத்தியை வீடுகளில் வளர்க்கக்கூடாது என்கிறார்கள் போலும். "அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான்" என்ற பழமொழியும் இது பற்றியே உண்டாகியிருக்க வேண்டும்.

இதன் இலை, பூ, வேர் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன. அகத்தியிலையை கறி சமைத்து உண்டு வர 'இடு மருந்தை' முறிக்கும். எனவே தான் மருத்தீடு, தோடம் போன்றவற்றில் அகத்தியிலை பயன்படுத்தப்படுகிறது. எனினும் பிறமருந்துகளின் செய்கையையும் அகத்தியிலை கெடுக்குமாதலால் நோயாளிகள் நோயுண்ணுங்காலத்தில் அகத்தியிலை பத்தியத்திற்காகாது என்று கூறி விலக்கப்படுகிறது.

அகத்தியிலையைப் பாற்சொதியாகச் செய்து சாப்பிட்டுவர வாய் அவியல், வாய்ப்புண் என்பன ஆச்சரியப்படத்தக்க வகையில் குணமாவதைக் காணலாம்.

குருதிச் சோகையுள்ளவர்கள் வாரத்திற்கு இரண்டு, மூன்று தடவை அகத்தியிலையைக் கறிசமைத்துண்டுவரக் குணமேற்படும்.

அகத்திப் பூச்சாற்றைக் கண்நோய்களுக்குக் கண்ணில் பிழிய குணமாகும். அகத்தி வேர்ப்பட்டையைக் குடிநீர் செய்து பருகிவர கை, கால் எரிவு, நீர் வேட்கை என்பன தணியும்.

**கருங்காலி**

வேறுபெயர் - கதிரம்
தாவரவியற் பெயர் - Diospyros ebenum
(டையோஸ்பைரோஸ் எபேனம்)
குடும்பம் - Ebenaceae (எபனேசியே)
சிங்களப் பெயர் - ரத் கேரியா
சமஸ்கிருதப் பெயர் - கதிரா
ஆங்கிலப் பெயர் - Ebony

நவக்கிரகங்களில் செவ்வாய்க்குரிய சமித்தாகக் கருங்காலி விளங்குகிறது. இது பெருமர வகுப்புக்குரியது. இலையுதிர் மரம். இலைகள் நீண்ட முட்டை வடிவாகவும் நுனி கூர்மையாக அல்லது மழுங்கியதாகவும் காணப்படும். கரும்பச்சை நிறம். இலையின் கீழ்ப்புறம் கறுப்புப்பொடி தூவியது போலக் காணப்படும். ஆண் பூக்களும், பெண் பூக்களுக்கும் தனித்தனியாக உருவாகும். பச்சை, மஞ்சள் நிறமாக இருக்கும். கனி முட்டை வடிவாகவும் சிறு மூக்குடையதாகவும் இருக்கும். இதன் கனி உண்ணத்தக்கது. இம்மரம் தற்போது அருகிவருவது குறிப்பிடத்தக்கது.



இதன் பட்டை, பிசின், வேர் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இதன் வேரூறிய நீரைப் பருகிவர அழற்குன்மம், திமிர்வாதம், வயிற்றுப்புழு என்பன நீங்கும். வேர்க்குடிநீர் நீரிழிவைக் கட்டுப்படுத்தும்.

கருங்காலி மரப்பட்டையைத் தனித்தாவது, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்பவற்றுடன் சேர்த்தாவது குடிநீர் செய்து வாய் கொப்பளித்து வர வாய்ப்புண்கள் மாறும். புண்களைக் கழுவுவதற்கும் இக்குடிநீரைப் பயன்படுத்தலாம்.

இதன் பிசினை 1-2 கிராம் அளவில் எடுத்து நீரில் கரைத்துப் பருகிவர பெரும்பாடு, கருங்கரப்பன் என்பன நீங்கும்.

கருங்காலிப் பட்டையைப் பொடி செய்து பற்பொடியுடன் கலந்து பல் துலக்கிவரப் பற்சூத்தை, முரசால் இரத்தம் வடிதல் நீங்கும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 142

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | ■ | 11 | |
| 12 | | ■ | 13 | | 14 | | ■ |
| | ■ | 15 | ■ | 16 | | ■ | 17 |
| ■ | 18 | | 19 | | ■ | 20 | |
| 21 | | | | ■ | 22 | | |
| 23 | | ■ | 24 | | | | |

அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1.மயிர்க்கொட்டி போன்றவற்றை இரையாக்கும் பறவை.
4. உள்.
6. மறி.
7.வெட்டும் ஆயுதம்.
8.ஒன்றைச் சுக்குநூறாக்கி அழிப்பு.
11. நிலம்.
12. ஏழ்மை/வறுமை.
13.வாழ்க்கை நெறியைப் போதித்தவர்.
16. செல்வம்/தமிழ் 'மிஸ்டர்'
18. ஒரு மரக்கறி இனம்.
20. அடவி.
21. அமைச்சன்.
22. தீட்டும் கருவி.
23.பெருங்கதை.
24.தாம்பூலத்துக்குச் சேர்ப்பர்.

### மேலிருந்து கீழ்

1. தூய எம்மொழி.
2.உள்ளீடு இல்லாத அற்பம்.
3. அகங்காரம்/எரிவு/கொதிப்பு/சினம்.
4.ஒரு வாசனைப் பொருள்.
5.நாற்காலி.
9.வாயால் கவ்வு.
10. மகள்.
14.மரம்.
15. தந்திரோபாயம்.
17.ஊர்வன வகையைச் சேர்ந்தது. பிடித்தால்விடாது.
18. இதுவானாலும் கசக்கிக் கட்ட வேண்டும்
19.பயன்படுத்தப்படாத நிலம்.
20.உறைப்புச் சுவை.
21.பெரிய.
22.இந்தியாவில் பணத்தின் சிறிய அளவு. ரூபாவுக்கு பதிலான பெறுமதி. இப்போது அருகி வருகிறது.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படு வதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவ தால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 140 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)பிகாசம். (5)சாதி.(7)கும்பம். (8)சவுரி.(9)மின்சாரம். (11)சய. (12)ரம்பம். (13)கம்பம்.(16) அதிபன். (18)சர்க்கரை. (20)தனி. (21)குடா. (22) சிவிகை.

### மேலிருந்து கீழ்

(1)பிகு. (2)ரம்மியம். (3) காபன். (4)சம்சாரம். (5)சாவு-திரிகை. (8) சம்பந்தி. (10)ரம்.(11)சகவாசம். (14)பதுக்கு. (15)கன்னிகை.(16)அரை. (17) பதவி.(19)கடா.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 140 இற்கான சரி யான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — மெ.இங்கிதை, கிருஷ்ணபதி,அல்வாய் வடக்கு, அல்வாய்.

2 ஆம் பரிசு — பே.இரத்தினேஸ்வரன், இல.165,அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

3 ஆம் பரிசு — செல்வி பா.கிரிஷாந்தி, இல.8/1 ...தம்பி லேன், வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்

4 ஆம் பரிசு — சிவநாதன் மயூரன், இல.24/4,1/1 பிரான்சிஸ் வீதி, கொழும்பு.

5 ஆம் பரிசு — ஏ.எம்.கமால், இல.24 ஏ.பி லேன்,சோனகதெரு, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி வி.குகதாசன், இல.65,வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

(2) தே.சர்மிலா, மாப்பாணவூரி, காரைநகர்.

(3) சிவராஜா இராசமணி, முள்ளானை,இளவாலை.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 142**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 29.12.2010 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.142இல் வெற்றி பெறுவோர் களது விவரம் 02.01.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத் தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப் பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும்.

# செந்தா....

(13ஆம் பக்கத்தொடர்ச்சி)

நவீன வசதிகளுடனிருந்த அந்த வீட்டைக் கூட்டித் துடைப்பதில் அவ ளுக்கு எதுவித சிரமமும் இருக்க வில்லை.

தானே சமைத்துச் சாப்பிடுகின்ற பென்ஷனர் கனகசுந்தரம் மிகவும் கனிவாக நடந்து கொண்டார். வேலை செய்கிற நாள்களில் செந்தாவுக்கு நிறையத் தின்பண்டங்கள் கிடைத்தன.

அக்கா எப்போது வேலை முடிந்து வீடு திரும்புவாளென தேனிலாவும் இனியவனும் காத்திருப்பார்கள். வித விதமான தின்பண்டங்கள். குழந்தை கள் மகிழச்சியாக இருந்தது புனிதத் துக்கும் ஆறுதலாகவேயிருந்தது.

இரண்டொரு மாதங்கள் செந்தா ஒரு முணுமுணுப்புமில்லமல் வேலைக் குப் போனாள். புனிதவதி எதிர்பார்த் ததற்கு மேலாகவே பென்ஷனர் செந்தா வின் பணிக்கான சம்பளத்தை வழங் கினார். இவையெல்லாம் திருப்தியாக இருந்தபோதும் வளர்ந்து வருகின்ற தனது மகளை இப்படியாக வேலைக்கு அனுப்பவேண்டியிருக்கிறதே என்ற கவலையும் இல்லாது போகவில்லை. தனது நிலைமையின் நிர்ப்பந்தத்துக் குப் பணிய வேண்டியிருக்கிறதே என்று ஏங்கினாள் அவள்.

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் தனது மூத்த மகள் செந்தாமரை ஓ.எல் சித்தியடைந்து விட்டால் ஏதாவது சின்ன வேலைக்காவது போக மாட் டாளா என்று கனவு கண்டாள் புனிதம். செந்தாமரையும் கெட்டிக்கார மாணவி யாக விளங்குவதை அறிந்தபோது அவள் மனம் மகிழ்ந்தது.

இன்று சனிக்கிழமை வேளைக்கே எழுந்து தேநீர் தயாரித்து வேலைக்குப் போகிற மகளுக்குக் கொடுத்தபோது தான் செந்தா ''இனிமேல் நான் வேலைக்குப் போகமாட்டேன்'' என்று திடீரென்று கூறினாள்.

''ஏன் சும்மா கூட்டித்துடைக்கிறது உனக்கென்ன கஷ்டம்? எனக்கும் கஷ்டங்கள் இருக்குது பிள்ளை. அம்மா வுக்கு வாற சம்பளம் மட்டும் காணாது, நீயும் கொஞ்சம் கொண்டுவாற படியால் தான் சாப்பிட்டுப்படிச்சு நீங்கள் கொஞ்ச மெண்டாலும் ஆறுதலா இருக்கிறியள்... ஏன் பிள்ளை மாட்டனெண்டிறாய்..?

''எனக்குத் தெரியாது நான் மாட் டேன் என்னை அங்கு போகச்சொல் லாதேங்கோ....'' இரண்டு மூன்று தரமாகக் கேட்டுப் பார்த்தாயிற்று, கெஞ்சிப் பார்த்தாயிற்று. செந்தா மசிவதாயில்லை. திண்ணையில் இருந்து தூணில் தலை சாய்ந்திருந்த புனிதம், எதையும் லட்சியம் செய்யாமல் கையி லொரு புத்தகத்தோடு அமர்ந்தி ருக்கிற செந்தாவைப் பார்த்தாள். செந்தா வின் கவனம் புத்தகத்திலிருந்தது.

''பெரிய படிப்பாளி... கம்பஸ் போகப்போறா... படிச்சுக்காட்டுறா எனக்கு...'' ''ஏனடி இப்படிப் பிடிவாதம் செய்யிறாய், தம்பிக்கு இருமல் மருந் தெடுக்க இண்டைக்குப் போனி யெண் டால் அந்த மனிசன் சம்பளம் தரும் ஏனடி மாட்டனேண்டிறாய்....''

''என்னால் ஏலாது.... நான் மாட் டன்...'' புனிதத்துக்கு ஆத்திரத்தில் தேகம் பதறியது. 'ஆமோ அப்படியோ... நீ சொல்லுக்கேக்க மாட்டியோ...'' கையிலெடுத்த [illegible] விறுவிறென்று வாங்கிவிட்டாள் செந் தாவை. திகைத்துப்போன செந்தா - ஒரு நாளுமில்லாமல் கோபம் கொண்ட அம்மாவின் அடிகளைத் தாங்காமல் குளறினாள். குளறக்குளற அடி விழுந்தது. காதில், முதுகில், கைகளி லென்று மாறிமாறி அடித்தாள். சின்னக் குழந்தைகள் இரண்டும் மிரண்டு போய்நின்று மௌனமாய் கண்ணீர் வடித்தன.

ஒரு நாளுமில்லாமல் மகள் குளறக் குளற அவளுக்கு அடிக்கிற சத்தத்தைக் கேட்டு அடுத்த வீட்டு சுதாஜினி ரீச்சர் படலையைத் திறந்து கொண்டு ஓடிவந்தாள். ''ஏன்.. ஏன்.. பிள்ளைக்கு அடிக்கிறியள் என்ன பிரச்சனை.. அவள் ஒரு நல்ல பிள்ளை அப்படி என்ன பிழை செய்தவள்... என்றபடி புனிதத் தைத் தடுத்தாள். தன்னை மறந்து அடித்தபடி நின்ற புனிதம் தும்பு தும் பாய்ப்போன பாளைக்கீற்றை எறிந்து விட்டு வாய் விட்டு அழுதாள்.

அய்யோ ரீச்சர் எல்லாம் என்ர தலைவிதி இருக்கிற துன்பங்கள் காணா தெண்டு... அழுதழுது நடந்ததைச் சொன் னாள் புனிதம். கொஞ்சம் பொறுங்கோ இவ்வளவு நாளும் பிரச்சனையில்லா மல் போய்வந்த பிள்ளை இப்ப மாட்ட னெண்டு அழுகிறாளெண்டால் ஏதும் காரணமிருக்கும். கோபப் படாதேங்கோ நான் அவளோட கதைச்சுப் பார்க்கிறன்.

''செந்தா எழும்பம்மா அம்மாவும் தன்ர கஷ்டத்தில் தானே உன்னை வேலைக்குப் போகச்சொல்லுறா - எனம்மா உனக்கு என்ன பிரச்சனை - வேலை செய்ய விருப்பமில்லையா... உனக்கேதும் கரைச்சலா பிள்ளை. செந் தாவை மெல்ல எழுந்திருக்கப் பண் ணித் தன்னோடு அழைத்துச் சென்றபடி [illegible] ரீச்சர். மிகவும் திறமை கொண்ட அமைதியான மாணவியான செந்தா ஏன் இப்படிச் செய்தாள் என அவளுக்கும் திகைப்பாயிருந்தது.

''ஏன் பிள்ளை என்னட்டைச் சொல்லம்மா நான் அம்மாவுக்கு விளங்கப் படுத்துறன். உனக்கேதும் கரைச்சலா..'' ''அங்கை போக எனக் குப் பிடிக்கேல்ல ... ரீச்சர் அங்க.. சரி யில்ல.. துவக்கத் தில ஒரு பிரச்சனை யுமில்ல... இப்ப இப்ப அந்தாள்.. சிக்.. சனிக்கிழவன்.. அருவருத்து முகஞ் சுழித்து முறைப்பாடு செய்யும் அந்தப் பதினான்கு வயதுச்சிறு பெண்ணின் மனத்துயரம் - சங்கடம் எல்லாம் புரிவது போலிருந்தது சுபாஜினி ரீச்சருக்கு.

வன்னியில் யுத்த காலத்தில் தந்தையை இழந்து, தமையனைப் பறிகொடுத்து விட்டு, வகையில் லாமல் சொந்த ஊர் என்ற உரிமை யோடு வாழ வந்த இந்த ஏழைகள் இங்கு இந்த மண்ணின் மனிதர்களால் இப்படி....


கசப்பாலும் விபரிக்க இயலாத கவலையாலும் அழுகை பொங்கியது சுபாஜினிக்கு. நீ அழாதையம்மா.. ரீச்சர் உன்ர அம்மாவுக்குச் சொல்லு றன் - அநியாயப் படுவார் வீட்டுக் கெல்லாம் நீ போகவேண்டாம்.

சுபாஜினி விளங்கப்படுத்திய விட யத்தைக் கேட்ட புனிதம் கொதித்தாள் - குமுறி அழுதாள். ''அந்த ஆளின்ர பேரப்பிள்ளை மாதிரி என்ர குழந்தை அதைப்போய்... எளிய மனுசன்....

செந்தாவைத் தன்னோடு அணைத் தபடி எல்லாவற்றையும் பார்த்து நின்ற சுபா, ''பிள்ளையைப் பக்குவமா வளர் ளளக்க வேணும் புனிதம் அக்கா. அதுகள் பாவம் ஏதும் அறியாத பிஞ் சுகள்'' என்றாள். ★★★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேசிய கீதமும் திசைதிருப்பல் புள்ளியும்





இலங்கை முழுவதும் கடந்தவாரம் அதிகமாக உச்சரிக்கப்பட்ட அல்லது கேட்கப்பட்ட அல்லது வாசிக்கப்பட்ட சொல் 'தேசிய கீதம்' என்பதாகத்தான் இருக்கும். 'இனிமேல் சிங்களத்தில் மட்டுமே தேசியகீதம் இசைக்கப்படவேண்டும்' என அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகச் செய்திகள் புறப்பட்டிருந் தன. அதிலிருந்து பரபரப்புக்கும், பக்கம் பக்கமான அறிக்கைகளுக்கும் பஞ்சமே இல்லை. இதன் உச்சக் கட்டமாக இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகள் மட்டுமல்லாது, கடிதங்கள் எழுதுவதில் இந்தத் தள்ளாத வயதிலும் தளராத தமிழக முதல்வர் மு.க.கருணாநிதிகூடத் தன் பங்குக்கு இலங்கை அரசைக் கண்டித்து அறிக்கை வெளியிடும் அளவுக்கு 'தமிழில் தேசியகீதம் பாடத் தடை' என்கிற விடயம் தீவிரம் பெற்றிருந்தது.

லண்டனில் புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிகழ்த்தவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டதால் வரலாறு காணாத அவமானத்தை மஹிந்த சுமக்க நேரிட்டது. அங்கிருந்து இலங்கை வந்த பின் மஹிந்த முதல் முதலாகக் கூட்டிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே இத்தகைய அதிரடியான முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மஹிந்தவின் முடிவுக்கு நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட ஒரு சிலர் எதிர்ப்புத் தெரிவித்தபோதும், பெரும்பாலான அமைச்சர்கள் இம்முடிவை ஆதரித்திருந்தனர். தமிழ் உணர்வாளர் கள் இச்செய்தி அறிந்ததும் கொதித்துப் போயினர்.

தமிழ் மக்கள் மீது அரசு நிகழ்த்துகின்ற அடக்குமுறையின் மற்றொரு வடிவமே 'சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதத்தைப் பாடலாம்' என்ற அமைச்சரவைத் தீர்மானம் எனவும், உடனடியாக இத் தீர்மானம் ரத்துச் செய்யப்படவேண்டுமெனவும் அவர்கள் கோரினர். ஆனாலும் அரசுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கின்ற அமைச்சர் விமல் வீரவன்ஸ ''உலகின் எந்தவொரு நாட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேசிய கீதம் பாடப்படுவதில்லை. இந்தியாவில் ஏராளமான மொழிகள் இருக்கின்றபோதும் கூட அங்கு எல்லா மாநிலங்களிலும், எந்த மொழி பேசுகின்றவர்களாக இருப்பினும் அவர்கள் ஹிந்தி மொழியில் அமைந்த தேசிய கீதத்தையே இசைக்கிறார்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். இதிலுள்ள தவறுகளைக் கண்ணுற்ற நம்மவர்கள் சும்மா இருப்பார்களா?. 'சண்டிக்கட்டோடு' களத்தில் இறங்கி ''சுவிஸ் உள்ளிட்ட பல நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேசிய கீதம் பாடப்படுகிறது. இதைவிட இந்தியாவில் பெரும்பான்மை மொழியான ஹிந்தியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதில்லை. அங்குள்ள சிறுபான்மை மொழிகளில் ஒன்றான வங்க மொழியிலேயே இந்தியாவின் தேசிய கீதம் அமைந்துள்ளது'' என்று பட்டிமன்றப் பாணியில் விமலுக்கு மறுத்தான் அடித்தார்கள். வேறுவழியின்றிக் கருணாநிதியும் இலங்கை அரசைக் கண்டித்து அறிக்கை விடவேண்டியதாயிற்று. (இல்லாவிட்டால் உலகத் தமிழர்களின் தலைவன் தானே என்று அவரே சூடிக்கொண்ட மணிமகுடத்துக்கு ஆபத்து வந்துவிடலாம்).

**ஔண்யன்**

மெதுவாக அரசு தன் நிலையில் இருந்து இறங்கத் தொடங்கியது. அரசியல் அமைப்பில் உள்ளபடியேதான் தேசிய கீதம் இசைக்கப்படும் எனவும், தமிழில் தேசியகீதம் பாடக்கூடாது என எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை எனவும் கூறி முன்னர் வந்த செய்திகளை அமைச்சர்கள் பலர் மறுத்தனர். என்றாலும் இன்னமும் இப் பிரச்சினை தீரவில்லை. கண்டனங்களும், அவற்றுக்கான அரசின் 'சளாப்பலும்' தொடர்ந்தபடியேதான் உள்ளன. இந்நிலையில் தான் ஒரு பெரும் கேள்வி நம்மிடையே மேல் எழுகின்றது. திடீரென - கனவு கண்டவர்கள்போல - மஹிந்தவாதிகள் எதற்காக தேசியகீதத்தை சிங்களத்தில் மட்டும் பாடுவது பற்றி யோசிக்கவேண்டும்?. இந்தக் கேள்விக்கான பலரது பதிலும் ''லண்டனில் தமிழ்மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் மூக்குடைபட்ட ஆத்திரத்தில், அவர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே அவசர அவசரமாகத் தமிழில் தேசிய கீதத்தை இசைப்பதற்குத் தடைபோடுவது பற்றி ஆலோசிக்கப்பட்டுள்ளது'' என்பதாகவே இருக்கின்றது. ஒரு கோணத்தில் பார்த்தால் காரண காரியத் தொடர்பின்படி இந்தப் பதில் திருப்தியான தாகவே இருக்கிறது. ஆனாலும் உண்மையில் இதுதான் நோக்கமா? என்ற இன்னொரு கேள்வியை எழுப்பினால் இந்தத் தீர்மானம் பற்றிய சில அடிப்படை உண்மைகளை உணரமுடியும்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் போர் நிகழ்ந்த மூன்று தசாப்தங்களிலும் தேசிய கீதம் என்பது மறக்கப்பட்டுப்போன ஒரு விடயம். பாடப் புத்தகங்களின் முன் பக்கத்திலும், ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற ஊடகங்களின் தினசரி நிகழ்வுகளின் ஆரம்பத்திலும் முடிவிலும் மட்டுமே தேசிய கீதத்தைக் கேட்டறியக்கூடிய நிலை இருந்தது. இதனால் தேசிய கீதத்தையே அறிந்திராத அல்லது இசைத்திராத ஒரு தலைமுறைகூட தமிழர்பகுதிகளில் உருவாக்கம் பெற்றிருந்தது.

அரசாங்க விழாக்களாக இருந்தாலும் கூட தேசிய கீதத்துக்குப் பதிலாக மௌன வணக்கங்களோடு தான் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வைபவங்கள் ஆரம்பமாகி முடிவுற்றன. மிக அண்மையில்தான் - ஏறக்குறைய ஒரு நான்கு வருடங்களுக்குள்தான் - மீளவும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அரச வைபவங்களில் தேசிய கீதம் இடம்பிடித்துக் கொண்டது. இந்நிலையில் தனிச் சிங்களத்தில் மட்டுமே தேசியகீதம் பாடப்படவேண்டும் என்ற உத்தரவு நடைமுறைக்கு வந்தால் மீளவும் இலங்கை என்ற தேசிய ஒருமைப்பாட்டில் இருந்து தமிழ்மக் கள் மனதளவில் அந்நியப்பட்டுப் போகலாம்.

தனிச் சிங்களச் சட்டம் எவ்வாறு இனரீதியான பிரச்சினைகளுக்குப் பிள்ளையார் சுழி போட்டதோ அதேபோன்று இன்னொரு பிரச்சினைக்குத் தனிச் சிங்களத் தேசியகீதமும் வழிவகுக்கலாம். தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளே என்பதையும் தனிச் சிங்களத் தேசியகீதம் மறைமுகமாகச் சுட்டலாம். மற்றும்படி தமிழில் பாடினால் என்ன? சிங்களத்தில் பாடினால் என்ன? வேறெந்தப் பாதிப்பும் நிகழ்வதற்கான சாத்தியங்கள் குறைவே. இதைவிடத் தனிச் சிங்களத் தேசியகீதம் இசைக்கப்படும் முறைமை நடைமுறைக்கு வந்தால் சிங்கள மொழியிலும் இசையிலும் தேர்ச்சிபெற்றவர்களே அதனைப் பாடமுடியும். நன்றாகத் தமிழ்தெரிந்த சிங்கள மக்கள்கூட என்னதான் முயற்சித்தாலும் அவர்கள் உரையாடும்போது கொச்சைத் தமிழில்தான் கதைப்பார்கள். அதன்போது சில வார்த்தைகள் அர்த்தப் பிழைகளோடும் வெளிப்படுவதுமுண்டு. அதுபோன்றே தமிழ்மக்கள் நன்றாகச் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தாலும்கூட, தேசியகீதத்தைச் சிங்களத்தில் இசைக்கும்போது அது கொச்சைச் சிங்களமாகவும், அர்த்தப் பிழைகளோடும் பாடப்படும் வாய்ப்பும் உண்டு. இதுதான் உண்மையில் தேசியகீதத்தையே அவமதிக்கும் செயலாகும். இது அரசுக்கும் தெரிந்திருக்கும். அப்படியானால் தனது நாட்டின் தேசிய கீதத்தை அவமதிக்க அரசு துணிந்துள்ளதா? என்ற வினாவும் எழத்தான் செய்கிறது. ஆனாலும் தனிச் சிங்களத் தேசியகீதம் தொடர்பான ஆலோசனையை அரசு என்ன நோக்கத்துக்காக கையில் எடுத்ததோ அதில் வெற்றிபெற்றிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

உண்மையில் தனிச்சிங்களத் தேசியகீதம் என்பது ஒரு திசைதிருப்பல் புள்ளிதான். உயர்பாதுகாப்பு வலயங்களால் சொந்தக் காணியில்லை. கட்டிய வீடு இல்லை. தேடிய சொத்துக்கள் இல்லை. கூடியிருந்த உறவுகளும் இல்லை. எல்லாவற்றையும் போர் தின்றுவிட்டது. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பலவும் தீர்க்கப்படவில்லை. இப்படி எல்லாமே இல்லாமல் இருக்கும்போது தமிழிலோ அல்லது சிங்களத்திலோ தேசியகீதம் பாடப்படுவது சாதாரண எந்தவொரு தமிழ்க் குடிமகனுக்கும் பாதிப்பைத் தரப்போவதில்லை. இதனைத் தெரிந்துகொள்ளாமல்தான் நம் அரசியல் கட்சிகள் பலவும் துள்ளியடித்துக் கொண்டிருக்கின்றன.

எந்த ஒரு அரசும் பிரதான பிரச்சினைகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக அல்லது நாட்டு மக்கள் உணராதிருப்பதற்காக அவ்வப்போது உபபிரச்சினைகளை உருவாக்குவது நீண்டகாலமாக நடைபெற்றுவரும் ஒரு யுத்தி. இப்போது போர் முடிவுக்கு வந்துவிட்டது. கூடவே போரின்போது அரசுத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றச் சாட்டுகளும் ஆதாரங்களோடு வெளிக்கிளம்பிய வண்ணம் உள்ளன. நலம்புரி நிலையங்களில் இருந்தவர்களில் பெரும்பாலானோரைக் மீள்குடியமர்த்தியாயிற்று. எங்கும் இயல்பு நிலை. போதாக்குறைக்கு சர்வதேசத்தின் நெருக்குதல். இவையெல்லாம் சேர்ந்து இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை முன்வைக்க வேண்டுமென்ற குரலை வலுப்பெறச் செய்துள்ளன. தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாகவும் வேறெந்தச் சாட்டுகளும் சொல்லி இழுத்தடிக்க முடியாத நிலையாலும் கட்டாயமாக இத்தருணத்தில் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை இலங்கை முன்வைத்தே தீரவேண்டும். ஏனெனில் இனி மக்களினதும், அரசியல் கட்சிகளினதும், சர்வதேசத்தினதும் ஒரேயொரு கோரிக்கையாக இது மட்டுமே இருக்கப்போகின்றது. இந் நிலையில்தான் இனப்பிரச்சினை என்ற பிரதான பிரச்சினைப் புள்ளியை விடுத்து வேறு உப பிரச்சினைகளில் தமிழர் தரப்பை மூழ்க வைத்துத் திசைதிருப்ப அரசு முயற்சிக்கிறது. நாவற்குழியில் நடந்த சிங்களக் குடியேற்றம்கூட இத்தகைய திசை திருப்பும் நிகழ்வுதான். ஆனாலும் அது தமிழர்களின் பதிலடியான குடியேற்றத்தின்மூலம் பிசுபிசுத்த நிலைக்குச் சென்றதால் இப்போது தனிச் சிங்களத் தேசிய கீதம் என்ற இன்னொரு உப பிரச்சினையை கிளப்பிவிட்டிருக்கிறது. நாங்களும் - தமிழ் உணர்வாளர்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் - இதுதான் எங்களது தலையாய பிரச்சினை என்பதுபோல நடந்துகொள்வதும், கண்டன அறிக்கைகளை விடுவதும், அதற்குப் பயந்ததுபோல அரசு தன்னிலையில் இருந்து இறங்குவதும் எங்களுக்கு வெற்றி என்ற மாயையைத் தருகின்றது. இந்த வெற்றி மாயையில் இருந்து மீளும்போது அரசு இன்னொரு உப பிரச்சினையைக் கிளப்பிவிடும். பின்னர் அதற்கான தீர்வைத் தேடுவதிலேயே தலையை நாம் உடைக்கத் தொடங்கியிருப்போம். ஆனால் தீராத நோயாக ஒரு புறத்தில் இனப்பிரச்சினை நீண்டுகொண்டே இருப்பதை அத்தருணத்தில் நாம் மறந்திருப்போம். இதுதான் அரசுக்குத் தேவை. உப பிரச்சினைகளில் மட்டுமே ஈடுபட்டுப் பிரதான பிரச்சினையை மறந்துவிடுகின்ற அரசியல் போக்கைத் தமிழர் தரப்பு மாற்றிக் கொள்கின்றவரை அரசின் தீர்வுத் திட்ட இழுத்தடிப்பும் இத்தகைய உப பிரச்சினைகளால் அனுமர் வாலாகவே நீண்டுசெல்லும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர்களுக்கு கொழும்பில் செயலமர்வு

கொழும்பு, டிசெ. 19

போதைவஸ்தின் தீமைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அறிவுறுத்தும் செயலமர்வொன்று எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் பெலவத்தையிலுள்ள நிர்மாணப்பயிற்சி நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது .

போரூட் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் பயிற்சிச் செயலமர்வில் யாழ்ப்பாணம், மன்னார்,வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (சி)


யாழ் மண்ணில் முதற் தடவையாக பிருந்தாவன் கல்லூரி....

Brindavan College
Group of Institutions, Bangalore, India
Approved by AICTE, Recognized by Govt. & UGC and Affiliated to Bangalore University & VTU



www.brindavancollege.com

Engineering courses
- B.E- Electronics & Communication Engineering
- B.E- Computer Science Engineering
- B.E- Information Science Engineering
- B.E- Mechanical Engineering
- B.E- Civil Engineering

Under-graduate courses
- BCA - Bachelor of Computer Application
- BBM - Bachelor of Business Management
- B.Com - Bachelor of Commerce
- B.Sc. Computer Science
- B.Sc. Biotechnology
- B.Sc. Microbiology
- B.Sc. Genetics

A/L 2"S" சித்திகள் போதுமானது




Post-graduate courses
- MBA - Master of Business Administration
- MCA - Master of Computer Applications
- M.Sc. Biotechnology
- M.Sc. Microbiology
- M.Sc. Applied Genetics

Pre-university courses (10+2)
Science, Arts & Commerce courses

- Presently over 100 Sri Lankan students are studying.
- About 800 Sri Lankan students have graduated.
- Degree recognized by UGC - Sri Lanka.
- Pay US$100/- for reservation and book the seat.
- Students with 2/3 A/L passes or awaiting results can register for UG courses and save one year.

Free Seminar & Spot Admission by Chairman / Principal at JAFFNA

| VENUE | DATE | TIME |
|---|---|---|
| Green Grass Hotel 33, Aseervatham Lane,Hospital Road | 20- Dec- 2010 | 10 AM |

மேலதிக விபரங்கள் மற்றும் அனுமதிக்கு கல்லூரி பிரதிநிதியை தொடர்பு கொள்ளவும்
S. K. சிவராம் - 077 9703866


## ஐ.நா. அமைதி காக்கும் படைக்கு மேலும் 140 இலங்கைப் படையினர்

கொழும்பு, டிசெ. 19

ஐ.நா. அமைதிப் படையில் இணைந்து கொள்ளும் பொருட்டு 140 இலங்கை இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை லெபனானுக்குச் சென்றுள்ளனர்.

காலாட்படையின் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்களே கடந்த வியாழக்கிழமை லெபனானுக்குப் புறப்பட்டுச் சென்றனர் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவில் 8 அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர் என்றும் அவர் கூறினார்.

காலாட் படைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இராணுவத்தின் மேலும் சில பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் இணைந்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (சி)


ACT APEX of Computer Tecnology
ஸ்ரேசன் ரோட், சுன்னாகம். Sales, Service & Repairs
- புதிய கணினிகள் 41000 ரூபாவிலிருந்து
- பாவித்த நல்லநிலையிலுள்ள கணினிகள் (HP, DELL)
- CD, DVD
- D-Link Dongle (Mobile Broadband Internet)
- கணினி சார்ந்த பொருட்கள்
- கணினி மற்றும் உபகரணங்கள் திருத்த வேலைகள்

☎ 0213206893
☎ 0773530125

CD, DVD • MWORKS • மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு
Kaspersky 2011 License


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18.11.1967 திதி: திரயோதசி
மறைவு: 29.12.2009 19.12.2010

### திருமதி தேவகி இலங்கேஸ்வரன்

உள்ளத்தால் உறவாகி
வாழ்விற்கு வழிகாட்டி இதயத்தில்
குடிபுகுந்து வீற்றிருக்கும்
எம்தேவகியே! ஓராண்டு
ஓடிமறைந்தாலும் உம்
நினைவு என்றும் எம்முடன்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
(107504) சூசையப்பர் கோயிலடி, கோப்பாய் மத்தி.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் தருமராசா தவகருணேஸ்வரன்

அன்னை மடியில்
21.10.1981
ஆண்டவன் அடியில்
05.11.2010

துள்ளித்திரிந்த கன்றுக்குட்டியே!
நீ கட்டினம் காளையானது எப்போ?
கடிவாளம் போட மறந்த எமக்கு
கட்டவிழ்ந்த கதைதான் என்ன?
போடா என்று சொன்னதும் போக மறுத்தாயே
போட்டது போட்டபடி போனது எங்கே?
வஞ்சனை அற்ற உனக்கு வஞ்சகம் தெரியாதே!
வஞ்சகன் இட்ட சதிதான் என்ன?
கண்ணாடிக் குவளைக்குள் மூச்சுத்திணற மறுத்தாயே
ஊன் உருக்கி வளர்த்த பின் மூச்சுத் திணறியதேனோ?
உதடுகள் அற்ற எமக்கு சொந்தங்கள் சேர்த்தாயே
உயிர்பறித்த போது கொக்களித்து கதறியழவோ?
தந்தை வழி பிள்ளைகள் என்பார்கள்
அப்பாவி ஆன உனக்கு அப்பாவின்
வழிதான் தெரிந்ததோ?

கடந்த 05.11.2010 இல் அகால மரணம் அடைந்த எமது குடும்பக் குல விளக்கு அமரர் தருமராசா தவகருணேஸ்வரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியப்படுத்துவதுடன் அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம். (107515) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சுந்தரலிங்கம் (சுந்தா)

(கிராம அலுவலர் J/66, J/67 யாழ்ப்பாணம், முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் மற்றும் தலைவர்- வடக்கு, கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம் - யாழ். மாவட்டம்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுந்தரலிங்கம் (கிராம அலுவலர்) 14.12.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகரத்தினம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பத்மாதேவி (கனடா) தம்பதியரின் மருமகனும் லலிதா (செல்வி)வின் பாசமிகு கணவரும் சிந்துஜன் (இணைமருத்துவ விஞ்ஞானம் 2ஆம் வருடம் -யாழ். பல்கலைக்கழகம்), யதுர்சன், நிருஜன் (2ஆம் வருட வர்த்தக முகாமைத்துவ பீடம் - கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரராஜா (சுவிஸ்), தனபாலசிங்கம் (அவுஸ்திரேலியா), திலகவதி (கனடா), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பத்மாவதி (மணி), காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

94, ஈச்சமோட்டை வீதி, தகவல்:
யாழ்ப்பாணம். 021 222 7075. (107509) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்துகள் ...?

திருமணம் என்பது வாழ்வதற்கே. இன்று திருமணமானவுடனேயே விவாகரத்துச் செய்வது நாகரிகமாக மாறி வருகிறது. இதற்குக் காரணம் என்ன? அனைவரும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தொழில் பார்க்கும் பெண்களே விவாகரத்துக்கு விண்ணப்பிக்கின்றார்கள் என்றும் 25-30 வயதுக்குட்பட்டோரே இவர்களில் அதிகம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

உண்மையிலே அது கவலை தரக்கூடிய விடயமே. இது எவ்வாறு ஏற்படுகிறது? இதனை எப்படித் தீர்ப்பது? இனிவரும் காலங்களில் இவ்வாறான விவாக ரத்துக்கள் ஏற்படாமல் தவிர்க்க என்ன வழி? என்பதனை அனைவரும் கருத்தில் எடுத்துச் சிந்திக்க வேண்டும். நாம் இதைச் செய்யத் தவறினால் நிச்சயதார்த்தம், அடுத்தது திருமணம் என்று இருந்த காலம் போய் திருமணம், அடுத்து விவாகரத்து என்ற காலம் உருவாகிவிடும்.

### மனம் ஒத்த திருமணங்கள் நடைபெறாமை

அதாவது மணமகள் மணமகன் சம்மதத்தை கேட்பதில் - பெற்றோர் தாமாகவே திருமணங்களைப் பேசி முடித்து விடுவார்கள். நாம் என்ன பிள்ளைகளுக்கு தீமையா செய்வோம் நல்லது தானே செய்கிறோம் என்ற எண்ணத்தில் அவர்களே முடிவு செய்துவிடுவார்கள். இவர்களும் என்ன செய்வது எனத் தெரியாது மனம் ஏற்காது விட்டாலும் பெற்றோர்களுக்காக திருமண பந்தத்தில் இணைகின்றார்கள். இங்கு இவர்கள் மனம் ஒத்து இணைகிறார்களா என்றால் இல்லை. சில பெற்றோர் பிள்ளைகளின் ஆசைகள் அவர்களின் எதிர்பார்ப்புகள் எதனையும் கருத்திற் கொள்வதில்லை. இவ்வாறான திருமணங்களில் சிறிது காலத்திலேயே மன வேற்றுமை ஏற்படுகிறது. இதனால் கருத்து முரண்பாடுகள் தோன்ற அவை விரிசலடைகிறது.

### சீதனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நடைபெறுபவை

சில வீடுகளில் சீதனம் ஒரு பிரச்சினை. சீதனம் இல்லை என்பதால் வசதியான ஓர் இடம் கிடைத்தவுடன் திருமணம் செய்துவைக்கிறார்கள். வசதியுடன் இருப்பவர்களைப் பார்க்கிறார்கள். வசதியுடன் இருப்பவர் நல்ல குணத்துடன் இருக்கிறாரா எனப் பார்க்கத் தவறுகிறார்கள். வசதி கூடியவர்கள் தமக்கு ஏற்ற போக்கில் சில விடயங்களைச் செய்வார்கள். அதனைக் கேட்க முற்படும்போது அங்கு ஆரம்பிக்கத் தொடங்கும் பிரிவு.

### வரட்டுக் கௌரவம்

தொழில் பார்க்கும் பெண்கள் திருமணம் செய்து வைத்தவுடன் அவர்கள் இஷ்டத்திற்கு வாழ ஆரம்பிக்கிறார்கள். தமக்கு தொழில் இருப்பதால் தாம் ஏன் அடங்கிப் போக வேண்டும் என்றநிலை ஏற்படுகிறது. (எல்லாப் பெண்களும்இல்லை) தொழில் பார்க்கும் பெண்களே இன்று அதிகம் விவாகரத்திற்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. இவர்கள் சிறு பிரச்சினையும் பெரிதாகப் பார்ப்பவர்களாகவே இவர்களது மனநிலை காணப்படுகின்றது. அதனை எப்படிச் சீர்செய்வது என சிந்திப்பதில்லை. உடனே விவாகரத்து. அது தான் முடிவு என்ற நிலைக்கு வருகிறார்கள். பிரிவு ஏற்பட்டால் அதைச் சீர் செய்வது என்பது இன்றுகௌரவப் பிரச்சினையாகியுள்ளது. அவர்களுக்கு சுய கௌரவம் விட்டுக்கொடுக்காது அதனால் விவாகரத்தை நாடுகிறார்கள்.



### காதல் விவகாரங்கள்

தமது பிள்ளைகள் காதலிக்கிறார் கள் என்று தெரிந்தவுடன் அவசர அவசரமாக வேறு இடத்தில் திருமணம் பேசிமுடித்து விடுவார்கள். ஏனெனில் இங்கு பெற்றோர் தம் சுயகௌரவத்தை பார்க்கிறார்கள் தமக்கு ஏற்ற இடமில்லை. அதனால் தாம் திருமணம் செய்துவைக்க முடியாது என்று கூறி வேறு இடத்தில் திருமணம் பேசுவார்கள். தமது தகுதிக்கேற்றவர்களை தானே காதலித்து இருக்கிறார்கள் என்று எண்ணுவதில்லை. பிள்ளைகள் சம்மதிக்காவிடின் நாம் உயிருடன் இருக்க வேண்டும் என்றால் இதற்கு சம்மதிக்க வேண்டும் என்று அடக்குகிறார்கள், கட்டாயப் படுத்துகிறார்கள். இதில் பெற்றோர் தவறு இழைக்கிறார்கள். தாம் கெட்டித் தனமாக வேறு இடத்தில் திருமணம் செய்து வைத்து விட்டோம் என சிந்திக் கிறார்களே தவிர முதலில் தம் பிள்ளை காதலித்த விடயம் தெரிந்தால் அதனால் ஏற்படப்போகும் பிரச்சினைகளை சிந்திக்கத் தவறுகிறார்கள். அவர்கள் தம் பிள்ளை காதலித்த விடயத்தை மறைத்து ஏதோ ஒருவழியாக தமக்கு ஏற்ற இடத்தில் திருமணம் செய்து வைத்த விட்டு தம் கௌரவம் காப்பாற்றப்பட்டதாக நினைக்கின்றார்கள்.

இந்த விடயம் தெரியவர எதற்கு எடுத்தாலும் சந்தேகம் தோன்றும் ஒவ்வொரு விடயத்திற்கும் ஏதோ ஒரு வழியில் முதலில் காதலித்த விடயத்தைக் காரணம் காட்டிப் பிரச்சினை ஏற்படும். எத்தனை தடவை தான் பிரச்சினையை தாங்குவது.முடியாவிடத்து விவாகரத்தை நாடுகிறார்கள். கௌரவம் பார்த்து செய்த பெற்றோர்தான் இங்கு குற்றவாளி. முதலிலே கௌரவம் பார்ப்பவர்கள் இப்படி விவாகரத்து எடுத்தால் அவர்கள் கௌரவம் என்ன ஆவது?

விவாகரத்து ஏற்படாது எப்படிப் பிரச்சினையைத் தீர்ப்பது என்று சிந்தித்து முதலிலே செயற்பட வேண்டும். முதலிலே திருமணம் பேசும் போது தமது பிள்ளைகளின் விருப்பங்கள் சம்மதங்களை கேட்க வேண்டும்.நாம் நமது பிள்ளைகளுக்கு தீமையா செய்வோம் நன்மையைத் தானே செய்வோம் என்று தான்தோன்றித்தனமாக சிந்திப்பதை முதலில் பெற்றோர் நிறுத்த வேண்டும். ஆதியிலே தான் மணமேடையில் மணமக்கள் சந்திக்கிற காலம். இப்போது அப்படி இல்லை. பெற்றோர் பிள்ளைகளுடன் நண்பர்கள் போல் பழகும் காலம். அவர்களுடன் கதைத்து அவர்கள் விருப்பு வெறுப்புக்களை அறியவேண்டும்.

### இயந்திர வாழ்க்கை

அடுத்து வேலை பார்க்கும் பெண்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். அவர்கள் தம் வீட்டில் இருந்து கதைப்பதற்கே நேரம்இல்லாது இருக்கிறது. இயந்திரம் போல் செயற்படுகின்ற வாழ்க்கை இன்று காணப்படுகிறது. இங்கு ஒருவர் விருப்பு வெறுப்புகளை இன்னொருவர் அறிந்து கொள்ள நேரம் கிடைப்பதில்லை. நேரம் கிடைக்கும் போது மனம் விட்டுப் பேசுங்கள். அப்போதுதான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். வீட்டில் ஏற்படும் பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்க்க முற்படுங்கள். வீட்டில் ஏற்படும் பிரச்சினைகளை வீட்டிலேயே முடியுங்கள். அதை வெளியில் தெரியப் படுத்துவதைக் குறையுங்கள்.

பிள்ளைகளின் மனம் ஒத்து வாழக் கூடிய வாழ்க்கையை எவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கலாம்? என்று சிந்தியுங்கள் அவசர திருமணங்களைக் கட்டுப்படுத்துங்கள். நன்றாக ஆராய்ந்து சரியான முறையில் தெரிவு செய்யுங்கள். திருமணம் என்பது இருவர் இணைந்து வாழவே தவிர உடனே விட்டுப் பிரிவதற்கு அல்ல. அதனால் ஏற்படப்போகும் பின் விளைவுகளைச் சிந்தியுங்கள்.

எதிர்காலம் எப்படி அமையும் என்று யோசியுங்கள். அதை விட்டு நாம் ஏதோ கெட்டித்தனமாக விவாகரத்துப் பெற விண்ணப்பித்து விட்டோம் எனச் சிந்திக்காதீர்கள். விவாகரத்துக்கு விண்ணப்பித்தவுடன் நீதிமன்றில் விவாகரத்து கிடைப்பதில்லை. விவாகரத்து கடையில் வாங்கும் பெருள் அல்ல.

நாம் போனவுடன் விவாகரத்து பெறுவதற்கு அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதிலும் சரியான காரணமும் இருந்தால் தான் அதனை ஏற்பார்கள். அப்படி ஏற்காது விட்டால் கூட இதன் பின்பு இவர்களால் சேர்ந்து வாழ முடியுமா?

இனிவரும் காலங்களில் இவ்வாறான விவாகரத்துக்களை எப்படித் தடுப்பது? திருமணம், விவாகரத்து என்ற நிலையை எப்படி மாற்றுவது ? என்று ஒவ் வொருவரும் சிந்திப்பதன் மூலமே விவாகரத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். ✱

**மானியூரான்**

---

# வையத்துள் வாழ்வாங்கு வாழுங்கள்

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

ஒவ்வொரு மனிதனும் தன்னுள் தெய்வ பிரீதி, பாபபீதி, சங்கநீதி ஆகிய மூன்றையும் வளர்க்க வேண்டும். பாவம் செய்வதற்கு அஞ்சாமையே தற்போதைய சமுதாயத்தில் ஒழுக்கநெறி சீரழிந்த நிலைமைக்கு காரணமாகின்றது. எல்லா வற்றையும்விட மனிதருக்கு ஒழுக்க நெறி மிக முக்கியமானது. இறைவன் அனைவர் மீதும் அன்பைச் சொரிந்து கொண்டிருந்தாலும் மனிதன் பாவஞ் செய்ய அஞ்சுவதில்லை என சத்திய சாயிபாபா கூறுகிறார்.

### பாவத்திற்குத் தண்டனை உண்டு

கடவுள் கருணை மிக்கவர் ஆகை யால் எப்படியும் கடைசியில் தன் பாவங் களனைத்தையும் மன்னித்து விடுவார் என நம்பி மனிதன் பல பாவங்களைச் செய்து கொண்டே செல்கின்றான். அவனது எல்லாப் பாவங்களை மன்னிப்பாரெனி னும் மனிதன் தன் பாவங்களுக்கான தண்டனையை அனுபவித்தே ஆக வேண் டும் என்றும் சத்திய சாயிபாபா கூறுகின் றார்.

### நீதிநிறைந்த நல்லொழுக்கம் தேவையானது

ஒருவர் தீயதை எண்ணாது, பேசாது, செய்யாது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவனது பாவங்களின்விளைவுகள் அவனைப் பின்னர் நேரடியாகத் தாக்கும். பொய் பேசுவது, மற்றவர்களுக்கு அநீதி இழைப்பது, நேர்மையற்ற, தீமை விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவது, மிகவும் கொடியது. இவ்வுலகில் ஒழுக்கம் குன்றிய நடத்தையுள்ளவனை எவரும் மதிக்க மாட்டார். எனவே மனிதர்கள் எல்லா சமயங்களிலும் நீதி நிறைந்த நல் லொழுக் கத்தைக் கடைப் பிடித்து வாழ்க்கை நடத்தவேண்டும் எனவும் சத்திய சாயி பாபா கூறுகின்றார்.

### மூவகையான ஆன்மீக சாதனைகள்

இறைவனிடம் அன்பு, பாவத்துக்கு அஞ்சுதல், சமுதாயத்தில் ஒழுக்கம் ஆகிய வற்றை வளர்க்க மூன்று வகையான ஆன்மீக சாதனைகள் உள்ளன. பக்தி (இறைவன் மீதான அன்பு), ஞானம் (அறிவுப் பாதை), வைராக்கியம் (பற்றற்ற நிலை) என்பனவே அவையாகும்.

### ஏன் கடவுளிடம் அன்பு செலுத்த வேண்டும்

இறையன்பிலிருந்து பாவத்துக்கு அஞ்சும் உணர்வு ஏற்படுகின்றது. அதிலி ருந்து சமுதாய நல்லொழுக்கம் வளர்கின்றது. ஒவ்வொருவரும் நல்லது, கெட்டது, புண்ணியம், பாவம் ஆகியவற்றை பாகுபடுத்தி ஆராய்ந்தறிந்தபின் நல்லவற்றையே செய்ய வேண்டும். நல்லவனாக இரு, நல்லதையேசெய், நல்லவற்றையேபார், அதுவே இறைவனை நோக்கிச் செல்லும் பாதை எனவும் சாயி பாபா கூறுகிறார்.

### நல்லொழுக்கம் வந்து வளரும்

ஒருவனுக்கு நல்ல குணமில்லாவிட்டால் அவனிடம் நல்லொழுக்கம் இருக்காது. நாம் சமூகத்தில் மதிப்பும் கௌரவமும் பெற உழைக்க வேண்டும். இப்போ தெல்லாம் எவரும் அது குறித்து அக்கறை கொள்வதில்லை. மனிதர்களிடம் செல்வம் வந்து செல்லும், ஆனால் நல்லொழுக்கம் வந்து வளரும் என்பது பழமொழி.

அதனால் நிலையில்லாத செல்வம், அந்தஸ்து, அதிகாரம் போன்ற உலகாதாய விஷயங்களுக்காக ஏங்கி அவற்றை தேடுவது தவறு. நிலையானதன் மீது, நின்று [illegible] என்று [illegible]

### தனிமனித மாற்றமே முதலில் தேவை

ஒருவர் சமூகத்தை, உலகத்தை முன்னேற்ற எண்ணினால் முதலில் தன்னிடம் நல்லொழுக்கத்தை வளர்க்க வேண்டும். தனி மனிதன் மாறுதல் அடைய இறையன்பும் பாவத்துக்கு பயமும் இருக்க வேண்டும். மக்களிடையே ஒற்றுமையிருப்பின் புனிதமும் தெய்வீகமும் அங்கு நிலவும். வெறும் கல்வியினால் மட்டும் ஒற்றுமை, புனிதம், தெய்வீகம் ஆகியவற்றை அடைய முடியாது என்றும் சத்தியசாயிபாபா கூறுகிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என்று சாயிபாபா கூறுகின்றார். உங்கள் செயல்களைச் சமூகத்துக்குத் தெரியாது மறைக்கலாம். ஆனால் எங்கும் வியாபித்துள்ள இறைவனுக்கு அனைத்தும் தெரியும். நாங்கள் செய்யும் செயல்களின் பின்விளைவுகளை நாங்கள்தான் அனுபவித்தே தீர வேண்டும் என்று சாயி பாபா கூறி அது மாற்ற முடியாத விதி என்றும் கூறுகிறார். எனவே மற்றவருக்கு உதவ முடிந்தால் உதவுங்கள். அது முடியாதுவிட்டால் சும்மா இருந்திடுங்கள். மற்றவர்களுக்குத் தீங்கு இழைக்காதீர்கள் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி நிற்கின்றார்.

சத்திய சாயிபாபாவின் மற்றுமொரு முக்கிய கூற்றே;

Love All Serve All - அனைவர் மீதும் அன்பு செலுத்துங்கள். அனைவருக்கும் சேவை செய்யுங்கள்.

HELP EVER, HURT NEVER - எப்பொழுதும் உதவி செய்திடுங்கள். ஒருபோதும் துன்பம் விளைவிக்காதீர்கள்.

சாயிபாபாவின் இக்கூற்று நாம் வாழ் வாங்கு வாழ்தலுக்குத் துணைபுரியும் வழிகாட்டுதலாகும்...

**டாக்டர் இ.சிவசங்கர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## இராமசாமி பொன்னம்மா

## (சின்னக்கிளி)

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
புன்சிரிப்புத் தவழும்
உங்கள் திருவதனத்தை
இனி எப்போது காண்போம்?
சித்தம் கலங்கியே
சிந்துகின்றோம் கண்ணீர்.

**காந்தன் குடும்பம்**
**(டோகா),**
**நவரட்ணம் குடும்பம்,**
**இளங்கோ குடும்பம்,**
**மதீஸ்வரன் குடும்பம்.**

54/2, மெனிக் லேன்,
மோதர, கொழும்பு - 15.

(107537)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# வெள்ளி விழா போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

உதயன் தனது ஊடக வளர்ச்சியில் உயர்ந்தொளிரும் இருபத்தைந்தாவது அகவையில் வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது.

அதன் சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றாக நடத்தப்பட்ட எழுத்தாக்கத் திறன் தேர்வில் பங்குகொண்ட அனைத்து இலக்கிய ஆர்வலர்களையும் பாராட்டுகிறோம்.

எழுத்தாக்கத் திறன் தேர்வுக்கெனத் தமது ஆக்கங்களை அனுப்பி வைத்த நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களின் ஆர்வமிக்க பங்களிப்பினைப் பார்த்து நாம் மகிழ்வடைகிறோம். ஈழத்தின் பல திசைகளிலிருந்தும் வந்து குவிந்த ஆக்கங்கள் எம்மை ஆச்சரியப்பட வைத்தன.

இளையோர் தொடக்கம் முதியோர் வரையான எழுத்தாளர்கள் இவற்றில் பங்குகொண்டு தமது திறன்களை வெளிப்படுத்தி உள்ளமையை எம்மால் அவதானிக்க முடிகிறது. உங்கள் ஒவ்வொருவரதும் இலக்கிய ஆர்வத்திற்கு ஊக்கம் தரும் வகையில் உதயன் தனது பய ணத்தையும் பாதையையும் அகலப்படுத்தியுள்ளான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

தேர்வுக்கென வந்து குவிந்த ஆயிரத்திற்கும் மேலான ஆக்கங்கள் அனைத்தையும் தரம் கண்டு, சிறப்புக்களுள் சிறப்பு எது எனத் தேர்ந்து, இலக்கியப் பிரியர்களை மகிழ்விக்க முன்வந்த மூத்த எழுத்தாளர்களையும் கல்வியியலாளர்களையும் பாராட்டுகிறோம் அவர்கள் தமது நேரத்தையும் காலத்தையும் கருதாது எம்முடன் ஒத்துழைத்தமைக்காக அவர்களின் சேவைக்கு என்றும் நாம் நன்றியுடையோம்.

பரிசுக்குரிய ஆக்கங்களுடன் மேலும் பாராட்டுக்குரியவை எனத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து ஆக்கங்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தேர்வுக்கென எமக்கு அனுப்பப்பட்ட தரமான ஆக்கங்கள் எமது வெளியீடுகளில் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும்

உதயன் வெள்ளி விழா நிகழ்வில் பரிசுகள் வழங்கப்படும்.

### சிறுகதைகளுக்கான பரிசுகளைப் பெறுபவர்கள்

முதலாம் பரிசு ரூபாய் 25000/=

'எனக்குப் பயமாய்க் கிடக்குது' - வேலாயுதம் சிவராஜா, மகாத்மா வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி

இரண்டாம் பரிசு ரூபாய் 15000/=

'தோழர் விக்கிரம யாழ்ப்பாணம் செல்கிறார்' - பெ.வடிவேலன், 155/19, இராஜ வீதி, மாத்தளை.

முன்றாம் பரிசு ரூபாய் 10000/=

'சொந்தமில்லாத பந்தங்கள்' - அ. விஷ்ணுவர்த்தினி, மலையந்தோட்டம், கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறை.

### பாராட்டுச் சான்றிதழ்களைப் பெறும் எட்டுச் சிறுகதைகள்

1) 'விடியல் தேடும் அஸ்தமனங்கள்' - அருந்ததி அழகானந்தம், செட்டி வளவு லேன், இணுவில் மேற்கு, இணுவில்.

2) 'அம்மாக்களின் ஆத்மா' - பி.கிருஷ்ணானந்தன், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

3) 'அகதி நிலை' - க.குணராசா, 75/10A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

4) 'மனிதம்' - மா.பஞ்சலோகரஞ்சன், 82, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

5) 'இசைவான வாழ்வே இன்பம்' - பா. பாலச்சந்திரன், சண்முகபவனம், மயிலணி, சுன்னாகம்

6) 'மழை' - சின்னராசா உதயகுமார், கூனந்தோட்டம், சமரபாகு, வல்வெட்டித்துறை.

7) 'கல்லுக்குள் கண்ணீர்' - க.நீலாம்பரி - கிளி/மாவட்ட மருத்துவமனை, கிளிநொச்சி.

8) 'குளத்தடி வைரவர்' - நா. யோகேந்திரநாதன் - ''மலரகம்'' நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

### புதுக்கவிதைகளுக்கான பரிசுகளைப் பெறுபவர்கள்

முதலாம் பரிசு ரூபாய் 25000/=

'தற்கொலை எண்ணமே தற்கொலை செய்துகொள்' - பாரதி சிவசோதி , அல்வொல்லை வீதி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

இரண்டாம் பரிசு ரூபாய் 15000/=

'காதோடு' - ஆ.கனிமொழி, உடையார் வீதி , ஊரெழு கிழக்கு, சுன்னாகம்

முன்றாம் பரிசு ரூபாய் 10000/=

'எல்லாமே இதற்குத்தானோ' - த.நாகேஸ்வரன், கச்சாய் வீதி, யாழ்ப்பாணம்.

### பாராட்டுச் சான்றிதழ்களைப் பெறும் எட்டுப் புதுக்கவிதைகள்

1) 'உன்னை நீ அறிந்து கொள்' - சி. மதுஷன் நாகலிங்கம், சுவாமி வீதி , சங்கானை.

2) 'மனிதா உனக்கொரு விண்ணப்பம்' - அருந்ததி அழகானந்தம், செட்டி வளவு லேன், இணுவில் மேற்கு, இணுவில்.

3) 'தவறிப் பிறந்த வரலாறு' - வி. முகிலன் - 13ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

4) 'நத்தை வீட்டில் ஒட்டடை அல்ல நந்தவனத்து நட்சத்திரம்' - வி.நிதர்ஷா, யாழ்ப்பாணம்.

5) 'போதிமர புத்தனும் கதிர்காமக் கந்தனும்' - திருமதி ஸ்கந்தவராணி ஸ்ரீதர், 49/93C, கோவில் வீதி, குருமண்காடு, வவுனியா

6) 'ஒரு பெண்ணின் உள்ளத்திலிருந்து' - நிக்ஷிகா சிவப்பிரகாசம், உசன், மிருசுவில்.

7) 'ஊடக வேட்கை' - சுரேந்திரன் விதர்சன், 29 சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம்.

8) 'மானிடத்தை ஏன் தொலைத்தோம்' - வே.இளையகுட்டி - மணற்பகுதி, புத்தூர்

### முதலாம் இடம்பெற்ற கட்டுரைகள்

'புலம் பெயர்தல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாகுமா' - க.குக தாசன், ஏழாலை கிழக்கு, களபாவோடை, ஏழாலை.

'எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்' - இரத்தினசேகர் தனுஜன், சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

'மூன்றாம் உலக நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்' - செ.றொஷானி, பழைய வளவு, நெல்லியடி வடக்கு, வதிரி, கரவெட்டி.

'ஈழத்தில் மெல்லத் தமிழ் இனி'- திருமதி பு.இரத்தினேஸ்வரி, கிளி/கண்டாவளை கல்விக் கோட்டம், பரந்தன்.

தமிழ்ப் பெண்கள் உண்மையில் விடுதலை பெற்றுள்ளார்களா- தேவ மதி யோசேப், மாகியப்பிட்டி, சண்டிலிப் பாய்.

ஒவ்வொருவரும் ரூபாய் 5000/= பணப்பரிசு பெறுகிறார்கள்.

### இரண்டாம் இடம்பெற்ற கட்டுரைகள்

'புலம் பெயர்தல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாகுமா' - ஏ.எம். கமால், 24, ஏ.பி.லேன், சோனக தெரு, யாழ்ப்பாணம்.

'எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்' - நிருபனா இரத்தினசிங்கம், 75/1 பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

'மூன்றாம் உலக நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்' - சபாரட்ணம் அதிரதன், 182 குட்செட் வீதி, வவுனியா.

'ஈழத்தில் மெல்லத் தமிழ் இனி' - உதயராசா சாளீன், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.

'தமிழ்ப் பெண்கள் உண்மையில் விடுதலை பெற்றுள்ளார்களா' - மரியசேகரன் ஜனிஸ்ரன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

ஒவ்வொருவரும் ரூபாய் 3000/= பணப்பரிசு பெறுகிறார்கள்

### மூன்றாம் இடம்பெற்ற கட்டுரைகள்

'புலம் பெயர்தல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாகுமா' - செ.அகிலாஜினி, பழைய வளவு, நெல்லியடி வடக்கு, வதிரி, கரவெட்டி.

'எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்' - சி.தனுஷா - கெற்பேலி மேற்கு, கெற்பேலி.

'மூன்றாம் உலக நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்' - மணிவாசகன் நிமலன் - வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

'ஈழத்தில் மெல்லத் தமிழ் இனி - தனுஷா பேரின்பம்' - 4ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு

'தமிழ்ப் பெண்கள் உண்மையில் விடுதலை பெற்றுள்ளார்களா' - சூரிய குமாரன் குணசாந்தன், கம்பனை அம்மன் வீதி, சுழிபுரம்.

ஒவ்வொருவரும் ரூபாய் 2000/= பணப்பரிசு பெறுகிறார்கள்

### மரபுக்கவிதைகளுக்கான பரிசுகளைப் பெறுபவர்கள்

முதலாம் பரிசு ரூபாய் 25000/=

'எங்ஙனம் மனிதம் வாழும்' - வே. இளையகுட்டி, மணற்பகுதி, புத்தூர்.

இரண்டாம் பரிசு ரூபாய் 15000/=

'அறிவுலகின் நியமங்கள்' - மா.பஞ்சலோகரஞ்சன் - 82, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

முன்றாம் பரிசு ரூபாய் 10000/=

'நன்நெறிகேள்' - பா.வேதநாயகம் ''கலையரசு'' தும்பளை தெற்கு, பருத்தித்துறை

### பாராட்டுச் சான்றிதழ்களைப் பெறும் எட்டு மரபுக்கவிதைகள்

1) 'வன்னி மண்ணில் வாழ்க்கை' - செல்லையா குமாரசாமி, நாவற்குழி மேற்கு, கைதடி

2) 'மனிதனை உயர்த்தும் மானிடப் பண்புகள்' - வயிரமுத்து சின்னப்பா - தனங்களப்பு, சாவகச்சேரி

3) 'ஊனமுற்றோர் உலகாளும் நிலைமை தோன்றும்' - பாரதி சிவசோதி, அல்வொல்லை வீதி, புலோலி மத்தி, பருத்தித்துறை

4) 'தமிழ்மொழி உணர்வு' - செ. பரமநாதன் ''அறிவகம்'' மண்டைதீவு - 2

5) 'தடுமாறும் தாயகம்' - க.ஆனந்தராசா கவிமணி அன்னைதாசன், ஸ்ரீரங்கம், ஊரெழு.

6) 'கண்ணீர் வாழ்க்கை' - தேனுஜா சாந்தகுமாரன், யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி

7) 'பற்றி எரிந்திடவில்லையே உலகம்' - முத்தையா இராசரத்தினம், மாத்தனை, செம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

8) 'அரசியலில் நேர்மை வேண்டும்'- செ.பரமநாதன் - மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில்

# உள்ளூராட்சி மன்றங்களில் இருந்தாவது அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும்

## வவுனியா நகரசபை உறுப்பினர் முனைவர் தெரிவிப்பு

தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை உள்ளூராட்சி மன்றங்களில் இருந்தாவது நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே வவுனியா நகரசபையின் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கின்றேன் - என்று வவுனியா நகரசபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எல்.எம்.முனைவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பிய செய்திக்குறிப்பில் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழின விரோதப் போக்கினைக் கொண்ட மூன்று உறுப்பினர்கள் குறுகிய இலாபத்துக்காக வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்து, வவுனியா நகரசபையின் தலைவர், உப தலைவர் நாற்காலிகளைத் தம் வசப்படுத்த முனைகின்றனர்.

'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன்'' என் பது போல் இருக்கிறது இவர்களின் நோக்கம்.

சபையின் எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை கோடரிக் காம்புகளாகச் செயற்பட்டு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கை மழுங்கடித்து - அரசியல் இலாபம் தேட நினைக்கின்றனர்.

மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் என முதலைக் கண்ணீர் வடிக்கும் இவர்கள், என்னால் முன்வைக்கப்பட்ட அங்காடி வியாபரிகள் பிரச்சினை, டெங்கு தடுப்பு நடவடிக்கைகள், வடிகால் அமைப்பு, வீதி திருத்தல், மற்றும் மக்கள் நலன்சார் நடவடிக்கைகளை கடந்த எட்டு மாதங்களாக சபையில் நிறைவற்ற விடாமல் குழப்பம் விளைவித்து வருகின்றனர். எனவே, இவ்வாறானவர்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். - இவ்வாறு முனைவர் தெரிவித்துள்ளார்.

(சி)

# உலகம் முழுவதும் 20 கோடி பேர் தொழில் நிமித்தம் இடம்பெயர்வு

## அவர்களில் 14 லட்சம் பேர் இலங்கையர்

கொழும்பு, டிசெ.19

நேற்று சர்வதேச புலம் பெயர்ந்தோர் தினமாகும். 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதியை புலம்பெயர்ந்தோர் தினமாக ஐ.நா. சபை பிரகடனப்படுத்தியது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் பணிபுரிவோரினதும் அவர்களது குடும்ப உறுப்பினர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐ.நா. அமைப்பு டிசெம்பர் 18ஆம் திகதியை சர்வதேச இடம் பெயர்ந்த தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் தற்போது 20 கோடி பேர் தொழிலின் நிமித்தம் புலம் பெயர்ந்துள்ளனர். 14 இலட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் விசேடமாக மத்திய கிழக்கில் பணிபுரிகின்றனர். இவர்களின் நிலைமை முன்னிட்டு இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இலங் கைத் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் இழைக்கப் படும் உடல் ரீதியான இம்சைகள் தொடர்பான விசாரணை களை அரசு முன்னெடுத்து வரு கின்றது.

கடந்த வருடம் வெளிநாடுகளில் பணிபுரிவோரின் மூலம் இலங்கைக்கு 3.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நியச் செலாவ ணியாகக் கிடைத்தது.

புலம்பெயர்வோரின் எண் ணிக்கை துரிதமாக அதிகரித்து வருகிறது என ஐநாவின் புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2050ஆம் ஆண்டு புலம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை 405 மில்லியனை எட்டிவிடுமென ஐ.நாவின் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு விடப்படும்

நீர்வேலிச்சந்தி, பழைய Glass factory முன்பாக 10 பரப்புக் காணியில் சுற்றுமதிலுடன் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 6331914 (107536)

## காணி விற்பனை

தாவடி தெற்கு, பத்தானை வீதியில் 4 1/2 பரப்பு உடைய ஒரு காணியும் வீட்டுடன் 4 1/2 பரப்புடைய மற்று மொரு காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777667136, 0112503415, 021 300 7003

## வீட்டுக் காணி விற்பனை

இரண்டு பரப்புக் காணியில் தனிக்கிணறுடன் சகல வசதியுடன் கூடிய வீடு - மானிப்பாய் பட்டினசபை ஒழுங்கையில் விற்பனைக்குண்டு. அத்துடன் அதே ஒழுங்கையில் 8 1/2 பரப்பு தென்னை மரங்கள் அடங்கிய காணியும் விற்பனைக்குண்டு

தொடர்பு : 0213214605 ,0725458234

## அருள்முருகன் திருமணப் பணியகம்

திருமண சேவைகளிலும் யாழ் மண்ணிலும் முதல் நிலை மணமக்கள் இணைப்பகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வரும் பணியகம் இது. கமிஷன் முறை நிராகரிக்கப்படுகின்றது. சேவைக்கான வெகுமதி விரும்பி வழங்கப்படுவதாகும். Teachers, Lecturers, Accountants, Doctors, Engineers மற்றும் விரும்பும் மணமக்களுடன் திருமண வாய்ப்புகள் இப்பொழுது மிக நெருக்கத்தில் வருகின்றன. முன்னேற்பாடு ஒழுங்கின்படி விவரங்களுடனும் போட்டோவுடனும் சந்திக்கலாம். சிரேஷ்டபட்டதாரி ஆசிரியர் SLTS 1 வழங்கும் ஓய்வுகால கௌரவ சேவை.

03,யாழ் வீதி ([illegible]), யாழ்ப்பாணம். தொடர்பு : 021 222 9334

## கணக்காளர் தேவை

கணினி அறிவுள்ள கணக்காளர் தேவை. நேரில் வரவும்.

MEDIA ELECTRO MART,
1-1, 1-II, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 4566

(573217)

## வான் விற்பனைக்கு

HL xxxx தொடரிலக்கமுடைய Hijet (சிறிய) (A/c Power starting) வான் விற்பனைக்கு அல்லது நீண்டகால வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0779218244 (107466)

## பிரத்தியேகக் கணித வகுப்புகள்

தரம் 6 முதல் G.C.E.(O/L) வரை, யாழ்/கொழும்பு பல வருட அனுபவமிக்க ஆசிரியரால், வீடுகளுக்கு வந்து தனியாகவும், குழுவாகவும் வகுப்புகள் எடுக்கப்படும். சுன்னாகம் இராமநாதன் கல்லூரி முன்பாகவும் வகுப்புகள் நடைபெறும். தொடர்பு:- 0779370228, 0777584396

## விற்பனைக்கு

NISSAL ATLAS 226-xxxx தொடரிலக்க ட்ரக் வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773763122,0771308767

## காணி, கடை விற்பனைக்கு

சங்கரத்தையில் இரண்டு கடைகளும், 2 பரப்பு 7 குளி காணியும் வீதி ஓரத்தில் விற்பனைக்குண்டு.

மேலதிக விவரங்களுக்கு
தொ.பே: 0785825403 (107378)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள dish அன்ரனா (பெரிது), சக்கர நாற்காலி (புதியது) மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0714624219 (107381)

## கோழிக் குஞ்சு விநியோகம்

ஒரு நாள் வயதான NO.1 புறொயிலர் குஞ்சு 24.12.2010 விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும். விபரங்களுக்கு சே.கிருஷ்ணகுமார் விதானை வளவு, மானிப்பாய்.

தொ.பே:- 0772338084 (107488)

X' MAX & NEW YEAR SPECIAL OFFER

| | |
|---|---|
| Ms Office | Rs. 1250 |
| Internet & E - Mail | Rs. 1500 |
| Kids Programme | Rs. 2000 |
| Diploma In Computer Studies | Rs. 2250 |
| Diploma In Hardware Engineering | Rs. 2500 |

BRITISH
British Institute of Computer & Business
# 687 Hospital Road, Jaffna.
(Near the Jaffna Railway station Junction)
Hotline:- 0775 975 556 / 0750 428 428

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 430/= வியாபாரிகள் விசேட விலையில் பெற்றுக்கொள்ளலாம். காலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை வியாபாரம் இடம்பெறும்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 021 2226944. (107411)

## WANTED in following Districts to Distribute




USHA Electric Fans, Gas Cookers and Sewing Machines

| | |
|---|---|
| 01. Trincomalee | 04. Vavuniya |
| 02. Mannar | 05. Mulathivu |
| 03. Killinochchi | 06. Batticaloa |

Write to us with a Copy of Business Registration.

Director Sales & Marketing
**KIR HOLDING (PVT) LTD.**
No: 186 C,Anagarika Dharmapala mawatha, Karagampitiya,Dehiwela.
Contact No : 0115-230903/0773021020

## WANTED (யாழில் பணியாற்ற)
### MEDICAL REPRESENTATIVES



- ★ க.பொ.த (உ/த) விஞ்ஞானப்பிரிவில் சித்தி
- ★ ஆங்கிலம் பேசக்கூடிய
- ★ சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள/ இல்லாத இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

முகவரி: Askar Remedies Pvt, Ltd.
No.71, George Rde Silva mw,
Colombo- 13

மின்னஞ்சல்: info-vacan@gmail.com
தொ.பே:0112340737

மிக விரைவில்
சாவகச்சேரி நகரிலும்


GATEWAY CfiCT
மற்றும்
ICDL International Computer Driving Licence

சர்வதேசத் தராதரப் பத்திரப் பரீட்சை நிலையம்

IT ISLAND - GATEWAY CENTRE
New Market Building,
Chavakacheri
021 227 0323

# அசோஸியேட்டட் மோட்டோர் வேய்ஸ் (தனியார்) நிறுவனம்

# அறிவித்தல்




பொதுமக்களுக்கு பின்வரும் தகவலை அறியத்தருகின்றோம். யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு, காளிகோயிலடியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல.902961607V உடையவரான **திரு.சுப்பிரமணியம் நர்மதன்** என்பவர் எமது நிறுவனத்தில் பயிலுநர் விற்பனை உதவியாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் எமது நிறுவனத்தில் தொடர்ந்தும் பணியாற்றவில்லை. அவரால் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செயற்பாட்டுக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்லர்.

AMW

**MARUTHI/SUZUKI SALES DIVISION**
**ASSOCIATED MOTORWAYS (PRIVATE) LIMITED**
**185, UNION PLACE, COLOMBO-02**
**Mobile - 0777271848**

(C/573620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லா(ம்)வ(ல்)ல மெத்தானந்த தேரர்

இல்லாத விடயங்களை எல்லாம் உண்டு என்றுகூறி அவற்றுக்குக் கை, கால், வாய், மூக்கு வைத்துக் கருத்து வெளியிட்டுக் காலத்தை ஓட்டும் அரசியல் வாதிகள் இலங்கையைப் போல வேறு எந்த நாட்டிலும் இல்லை. அடிக்கடி சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்துக் குட்டையைக் குழப்பிக் கூத்துப் பார்க்கும் இந்த அரசியல் வாதிகளின் அநாகரிகமான செயற்பாடுகள் இலங்கை அரசியலில் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றமையை நாம் சொல்லி நீங்கள் தெரியவேண்டியதல்ல.

இதற்கென்று இலங்கை நாடாளுமன்றில் சில அரசியல்வாதிகள் உள்வாங்கப்படுகிறார்களா என்று யோசிக்கும் அளவுக்கு அவர்களின் கருத்துக்கள் அப்பட்டமான பொய்யாகவே இருக்கும். அந்தப் பொய்யை உண்மையாக்குவதற்காக அவர்கள் காட்டும் காரணங்கள் - கூறும் விமர்சனங்கள் பல வேளைகளில் சாதாரண மக்களையே வாய்விட்டுச் சிரிக்க வைத்திருக்கிறது. கூறப்போனால் அமைச்சர் மேர்வின் சில்வா, விமல்வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க, அத்துரலிய ரத்தினதேரர் ஆகியோர் அந்த வரிசையில் இருக்கின்றனர். இவர்களுக்கு எல்லாம் தலைவர்போல இன்னொருவர் இருக் கிறார். அவர்தான் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளு மன்ற உறுப்பினர் எல்லாவல மெத்தானந்த தேரர்.

### நாடாளுமன்றத்திலும், வெளியிலும்

நாடாளுமன்றத்திலும் சரி, அதற்கு வெளியிலும் சரி சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடுவதில் இவர்களுக்கு நிகர் இவர்களேதான். அடிக்கடி இன வன்முறையை ஊக்குவிக்கும் வகையிலும், சிறுபான்மை மக்களின் மனங்களை நோகடிக்கும் விதத்திலும், தொன்மையான வரலாறுகளை மூடி மறைக்கும் வகையிலும் கருத்துக்களை வெளியிட்டு அதனைவைத்து அரசியல் நடத்துவதில் இவர்கள் வல்லவர்கள்.

இந்தவகையில் அண்மையில் இந்த எல்லாவல மெத்தானந்த தேரர் வெளியிட்ட கருத்து ஒன்று இப்போது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கிறது.

கடந்த 16 ஆம் திகதி கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கை நெறிக்காக நிலையத்தில் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வில் அவர் வழங்கிய சாட்சியமே சர்ச்சைக்குரியதாக அமைந்துள்ளது. அவரின் சாட்சியம் இதுதான்.

*''வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம், தமிழ்த் தேசியம் என்று எவரும் உரிமை கொண்டாட முடியாது. அதற்கான ஆதாரங்களும் இல்லை. வடமுனை முதல் தென்கரை வரை ஆட்சி புரிந்தவர்கள் சிங்களவர்கள்தான். அதற்கான ஆதாரங்களும் சரித்திரச் சான்றுகளும் நிறையவே உள்ளன.''*

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எந்த உரிமையுமே கிடையாது என்பதை அடியோடு மறுப்பதாக அவரது இந்தச் சாட்சியம் அமைந்திருக்கிறது. இந்தச் சாட்சியத்தினால் கொதித்துப் போய் இருப்பவர்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்மக்களும்தான்.

### தமிழ்க் கட்சிகள் கண்டனம்

தமிழ் மக்களுக்கு இந்த நாடு உரிமையானது என்பதை நிரூபப்பதற்குத் தேவையான சான்றாதாரங்கள் இருக்கின்றன. எனவே, வந்தேறு குடிகளான சிங்கள இனத்தைச் சார்ந்தவர்களில் இனவாத நோக்கம் கொண்ட சிலர் தமிழர் பற்றியோ அல்லது தமிழர் தாயகம் பற்றியோ பேசுவதற்கு அருகதையற்றவர்கள் எனத் தெரிவித்துள்ள தமிழ்க் கட்சிகள், எல்லாவல மெத்தானந்த தேரரினால் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் அளிக்கப்பட்ட சாட்சியத்துக்குக் கடுமையான கண்டனங்களையும் தெரிவித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு மற்றும் புளொட் ஆகிய தமிழ்க் கட்சிகள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

### தொடரும் இனவாதக் கருத்து

இவ்வாறு இனவாதத்தைக் கக்கும் வகையில் சிங்களத் தலைவர்கள் கருத்துக்களை வெளியிடுவது தமிழ் மக்களுக்கு ஒன்றும் புதிதல்ல. காலம் காலமாக இந்தச் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே வருகின்றன. முக்கியமாக இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்று எட்டப்படவேண்டும் என்ற கருத்து வலுத்துக்கொண்டு வரும்போதெல் லாம் இவ்வாறான இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு அந்த முயற்சிகளை மழுங்கடிக்கச் செய்வதில் மெத்தானந்த தேரர் போன்றவர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அதிலும் முக்கியமாக தெற்கில் உள்ள பௌத்த உயர்பீடங்களின் தலைவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

### புத்தரின் பெயரால்

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பேச்சு எழும்போதெல்லாம் தமிழர்கள் வந்தேறுகுடிகள். இலங்கையில் அவர்களுக்கென்று ஒரு தாயகம் இல்லை. எனவே அவர்களுக்குத் தீர்வு என்ற ஒன்று தேவையே இல்லை என்ற பொருள் படக் கருத்துக்களை வெளியிட்டுத் தீர்வு முயற்சிகளைத் தவிடுபொடியாக்குவதில் கணிசமான பங்களிப்பு இந்தப் பௌத்த பீடங்களுக்கும் இருக்கிறது. மதம் என்றதற்கு அப்பால் அரசியலையும் கையில் எடுத்துக்கொண்டு நாட்டை ஆள்பவர்களுக்கு ஆலோசனை வழங்குகிறோம் என்ற போர்வையில் இவர்கள் செய்யும் அட்டகாசம் தொடர்ந்து வலுத்துக்கொண்டே வருகிறது. போதாக்குறைக்கு இப்பொழுது நாடாளுமன்ற உறுப்புரிமையையும் பெற்றுக்கொண்டு கௌதம புத்தரின் பெயரால் இவர்கள் ஆடும் நாடகங்களைப் புத்தபெருமான் கூடப் பொறுத்துக்கொள்ளமாட்டார். அந்தளவுக்கு தமிழர்கள் தொடர்பாக இவர்கள் வெளியிடும் கருத்துக்கள் மோசமானதாக இருக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளில் இப்போது முன்னணியில் இருப்பவர் இந்த எல்லாவல மெத்தானந்த தேரர்.

✱ *''இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று இல்லை. நிர்வாக சம்பந்தமான சில பிரச் சினைகளே இருக்கின்றன. இந்த நிலையில் நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் கூடுதலான அதிகாரங்களையோ சுய ஆட்சியையோ வழங்கக் கூடாது. அவ்வாறு வழங்கினால் அது மீண்டும் இனங்களுக்கு இடையில் மோதல்களையே உருவாக்கும்.''*

✱ *''இனப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வைத் தர வேண்டும் என்பது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரி யும். அவர் கொடுப்பதை வாங்கிக் கொண்டு வாழத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பழகிக் கொள்ள வேண்டும்.''*

**அதிரன்**

✱ *''ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு இலங்கை மண்ணில் காலடியெடுத்து வைக்கக் கூடாது. மீறி பலவந்தமாக நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சி செய்தால் அவர்களை உடனடியாகக் கைது செய்து சிறையிலடைத்து இலங்கைச் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டும்.''*

✱ *''பௌத்த மத வரலாற்றுச் சான்றுகள் இருந்த இடத்தில் இந்து மத ஸ்தலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, இந்துக் கோயில்கள் இருந்த எந்தவொரு இடத்திலும் பௌத்த விகாரைகள் அமைக்கப் படவில்லை ஆகவே பொய்யான கருத்துகளை வெளி யிடுவதன் மூலம் மீண்டும் மத, இன வாதங்களுக்கே இடமளிக்கும்.''*

✱ *''இலங்கையில் தமிழில் தேசிய கீதம் பாடப்படுவது சட்டவிரோதமானது.''*

மேற்சொன்ன கருத்துக்கள் கடந்த இரண்டு ஆண்டு காலப் பகுதிக்குள் வெளியிடப்பட்டவை. இவற்றைக் கூறியவர் வேறு யாரும் அல்ல. இந்த மெத்தானந்த தேரர்தான். தனது அண்மைக் காலங்களில் இத்தகைய சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடும் பணியை அவர் மேற்கொண்டு வருகிறார். அதிலும் குறிப்பாக அண்மைக்காலங்களில் அவர் முன்வைக்கும் கருத்துக்கள் தமிழ்மக்களுக்கு முற்றிலும் எதிரானதாகவும், அவர்களைச் சீண்டிவிடும் வகையிலும் அமைந்து வருகின்றன. போரினால் நொந்துபோய் மீண்டும் தேறிவரும் தமிழ் மக்களின் மனங்கள் இவ்வாறான இனவாதக் கருத்துக்களால் வேதனைப்படுவது இவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது. இவ்வாறான இனவாதக் கருத்துக்களின் வெளிப்பாடுதான் தமிழர்களின் ஆயுதப் போராட்டம். அதனை இன்னும் விளங்கிக் கொள்ளாமல் இந்த இனவாதிகள் தொடர்ந்து தமிழர்களின் மனங்களை வேதனைப்படுத்தி வருவது எதிர்காலத்தில் மேலும் மோசமான எதிர்ப்புகளையே தோற்றுவிக்கும். முடிந்துபோன ஆயுதப்போராட்டம் மீண்டும் தலைதூக்கவே இத்தகைய இனவாதக் கருத்துக்கள் வழிவகுக்கும்.

### கண்டும் காணாத அரசு

இவ்வாறு இனவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் கருத்துக்களை வெளியிடுபவர்களை அரசும் கண்டும் காணாதது போல் இருந்துவருகிறது. அரசின் இந்த நடவடிக்கை அவ்வளவு ஆரோக்கியமானதல்ல. இவ்வாறு கருத்து வெளியிடுபவர்களை அரசு கண்டிக்காமல் இருப்பது அதனை மேலும் ஊக்குவிப்பதாகவே பொருள்படும். அல்லது அரசுதான் பின்னணியில் இருந்து இவர்களை இயக்குகின்றது என்ற தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும். இதன்மூலம் மீண்டும் வன்முறை வெடிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படவேண்டும் என்ற கருத்து இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் இப்போது வெகுவாக வலுப்பெற்றிருக்கிறது. அதற்கான அழுத்தங்களும் இலங்கை அரசுமீது இப்போது கடுமையாகப் பிரயோகிக்கப்படு கின்றமை தெரிகின்றது. இந்த வேளையில் இலங்கையில் தமிழர்களுக்குத் தீர்வு தேவை யில்லை. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் இல்லை. அதற்கான ஆதாரங்கள் எவையுமில்லை என்று வரலாற்றையே மூடிமறைக்கும் வகையில் வெளி யிடப்படும் கருத்துக்களைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். யுத்தத் தினால் அனைத்தையும் இழந்துபோன தமிழ் மக்களின் மனங்களை மேலும் நோகடிக்காதவாறு அரசு பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தமிழர்கள் தனியாகப் பிரிந்து செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இந்தத் தனிவழியை உருவாக்குவதில் முன்நிற்கப் போகின்றவர்கள் இந்த மெத்தானந்த தேரர் போன்றவர்கள்தான்.

எது எவ்வாறாயினும்-வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு இப்போது சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கி விட்டன.

தமிழ்மக்கள் பாரம்பரியப் பிரதேசங்கள் படைபலத்தின் மூலம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதையடுத்து இதுபோன்றே உரிமை கொண்டாடப்படுவதும் குடியேற்றம் பற்றிய சிந்தனைகள் வெளிப்படுவதும் வரலாறாகிவிட்டது. எதிர்காலத்தில் தமிழ்மக்களின் பிரதேசங்களை சிங்கள பௌத்த பாரம்பரிய வாழ்விடமாக உரிமை கோருவதற்கு இன்னும் பல முயற்சிகள் எடுக்கப்படலாம். ஆனால், இவை யெல்லாம் இன ரீதியான அமைதி குலைப்பு நடவடிக்கைகளாகவே அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

புலிகளுக்கு எதிரான போரை பயங்கரவாதத் துக்கு எதிரான போரெனக் காட்டி அரசு வெற்றி கொண்டிருந்தாலும் தமிழ்மக்கள் மனதில் அது எத்தகைய எண்ணப்பாட்டைத் தோற்றுவித்திருக் கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இந்தநிலையில் தமிழ்மக்கள் வாழ்ந்த பிரதேசங் களைக் கைப்பற்றி விட்டு, அதற்கு சிங்களப் பௌத்த வரலாற்றுடன் முடிச்சுப் போடுவதும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதும் இனவாதம் பற்றிக் கொக்கரிப்பதும் இனப்பிரச்சினையைத் தீர்க்கின்ற வழியாக அமைய மாட்டாது. இது இனப்பிரச்சினை இன்னும் கூர்மையடையவே வழிவகுக்கும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவி பயிற்சி முகாமில் சுசந்திகா



வலிவடக்கு , டிசெ.19

தேசிய மட்டத்தில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், நிற விருது பெற்ற வீரர்கள், வீராங்கனைகள் உட்பட மாவட்ட மட்டத்தில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் இரண்டாவது வாரமாகவும் மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க உட்படப் பலர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்குகின்றனர்.

இந்தப் பயிற்சி முகாம் ஏனைய பயிற்சி முகாம்களில் இருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளதுடன் இரவு பகல் என முழு நேரமாக செயல்முறைப் பயிற்சிகள் பலவற்றுடன் மொழி மற்றும் கணினி அறிவையும் கொண்டதாக அமைந்துள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் தேசிய மட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் பல்வேறு பயிற்சிகளையும் வழங்கி வருகின்றார்கள்.

விளையாட்டு பொது பயிற்சி செயல்முறை தொடர்பாக பிரசன்னா பெரெராவும், உயரம் பாய்தல் முப்பாய்ச்சல் பயிற்சிகளை மஞ்சுளாவும், தடைதாண்டல் பயிற்சியை பிரசன்னா குணவர்த்தனாவும், விளையாட்டு மருத்துவம் தொடர்பாக தேசிய விளையாட்டு மருத்துவர் வைத்திய கலாநிதி சிவானியும் விளக்கம் அளித்து பயிற்சி வழங்குகின்றார்.

இத்துடன் உள்நாட்டுப் பயிற்றுவிப்பாளர்களும் இந்த பயிற்சி முகாமில் இணைந்து பயிற்சிகளை வழங்கி வருகின்றார்கள்.

இந்தப் பயிற்சி முகாம் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளதுடன் மாவட்ட ரீதியாக ஆசிரியர்கள் பத்துப் பேரும், வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு அலுவலர்கள் நான்கு பேரும் கலந்து கொண் டுள்ளமையால் எதிர்காலத்தில் மேலும் சிறந்த பெறுபேறுகளை பெறக்கூடியதாக அமையும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

(த-86)

# ஹொக்கி சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

வலிவடக்கு , டிசெ.19

யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான கூட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அதிபர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

✱ தலைவர்-வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன்

✱ செயலாளர் - உடுவில் மகளிர் கல்லூரி உடற்பயிற்சி பொறுப்பாசிரியர் ப.தர்மகுமாரன்

✱ பொருளாளர் - சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சி.ஏ. அரவிந்தன்

நிர்வாக உறுப்பினர்கள்

துஸ்யந்தன் (ஆசிரியர், குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), வி. எல் மோகன் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ்.ராஜராஜன் (ஆசிரியர், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), பிரான்சிஸ் சந்திரன் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ்.உதயனன் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), எஸ். ஜெனப்பிரியன் (உடுவில் மகளிர் கல்லூரி).

இக்கூட்டத்தில் அடுத்தாண்டு மேற்கொள்ளப்படவுள்ள ஹொக்கி அபிவிருத்தி செயல் திட்டங்கள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது. (த-86)

## வெற்றி நமதே...



மகிழ்ச்சியுடன்: யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கி விளையாட்டுச் சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஹொக்கி சுற்றுப்போட்டியில் சம்பியன்கிண்ணத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வென்றுள்ளது. (த-86)

# ஸ்பெயின் அணி தொடர்ந்தும் முதலிடத்தில்



2010 ஆம் ஆண்டின் இறுதியில் சர்வதேச உதைபந்தாட்ட அணிகளுக்கான தரப்படுத்தலில் உலகக் கிண்ண சம்பியனான ஸ்பெயின் அணி முதலிடத்தைப் பெற்றுள்ளது. சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் வெளியிட்டுள்ள இத்தரப்படுத்தல் பட்டியலில் கடந்த 18 மாதங் களில் ஐரோப்பிய அணிகள் முதல் மூன்று இடங்களையும் பெறுவது இதுவேமுதற்தடவையாகும்.

இதேவேளை கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் ஸ்பெயினுடன் மோதி 2 ஆம் இடத்தை பெற்ற நெதர்லாந்து அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.இதனால் ஜேர்மனி மூன்றாம் இடத்தையே பெற்றது. கடந்த மாதம் நடைபெற்ற ஆர்ஜன்ரீனாவுடனான போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் பிறேசில் 4 ஆம் இடத்தையும் ஆஜன்ரீனா இங்கிலாந்து அணிகள் முறையே 5 ஆம், 6 ஆம் இடங்களையும் பெற்றுள்ளன.

ஆபிரிக்க நாட்டு அணிகளில் முன்னணி வகிக்கும் எகிப்து 9 ஆம் இடத்தைப் பெற்றுள்ள அதே வேளை அமெரிக்கா 6 இடங்கள் முன்னேறி 18 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. இதேவேளை, அவுஸ்திரேலியா 6 இடங்கள் பின்தள்ளப்பட்டு 26 ஆவது இடத்திற்கு சென்றுள்ள போதும் ஆசியப் பிராந்திய அணிகளில் தொடர்ந்தும் முன்னிலை வகிக்கிறது. தரப்படுத்தலில் மிகப்பெரிய முன்னேற்றமாக கடந்த வருடம் 75 ஆவது இடத்தைப்பெற்ற மொன்ரீ நீக்ரோ அணி 49 இடங்கள் முன்னேறி 25 ஆவது இடத்தைப்பெற்றுள்ளது. கடந்த மாதம் 13 ஆவது இடத்தைப் பெற்ற ரஷ்ய அணி இந்த இறுதித் தரப்படுத்தல் பட்டியலில் 101 இடங்கள் பின்தள்ளப்பட்டு 114 ஆவது இடத்தை அடைந்துள்ளது.

# மூன்று யாழ். பாடசாலைகளுக்கு கிரிக்கெட் நிதியத்தின் உதவி

வலிவடக்கு , டிசெ.19

இலங்கைக் கிரிக்கெட் நிதியத்தினால் மூன்று யாழ். மாவட்டப் பாடசாலைக்ளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானத்தில் வளரும் புற்களை வெட்டுவதற்கான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, நல்லூர் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு இந்த நிதி ஒதுக்கீடுகள் செய்யப் பட்டுள்ளன.

மூன்று பாடசாலைகளுக்கும் தலா 2லட்சத்து 40 ஆயிரம் ரூபா வீதம் 7 லட்சத்து 20 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி புல் வெட்டும் இயந்திரத்தை உடனடியாகக் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-86)

# ஹொக்கிப் போட்டி முடிவுகள்

வலிவடக்கு , டிசெ.19

யாழ். மாவட்ட ஹொக்கி விளையாட்டுச் சங்கம் யாழ் மாவட்டப் பாடசாலை 15 வயதுப் பிரிவு பெண்களுக்கு இடையே வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடத்திய போட்டி ஆட்டங்களின் முடிவுகள் சில வருமாறு:-




மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை வென்றது.

உடுவில் மகளிர்கல்லூரிக்கும் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலைதவிர்ப்பு அடிகளைத் தொடர்ந்து குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 1:0 என்ற கோல் கணக்கில் உடுவில் மகளிர் கல்லூரியை வென்றது.

உடுவில் மகளிர் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றதால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (த-86)

# கூடைப்பந்தாட்டப் போட்டி

*யாழ்ப்பாணம், டிசெ.19*

*யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 2010ஆம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் யாழ். மத்தியகல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றது.*

*இதில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-*

*★ ஜொலிஸ்ரார் 'பி' அணி எதிர் சென்றலைட்ஸ் 'ஏ' அணி (காலை 8 மணிக்கு)*

*★ ஜொலிஸ்ரார் 'ஏ' அணி எதிர் பற்றீசியன்ஸ் வி.க. அணி (காலை 9 மணி)*

*★ சென்றலைட்ஸ் 'பி' அணி எதிர் ஜொனியன்ஸ் வி.க. அணி (பி.ப 3.30 மணி)*

*★ யாழ். விளையாட்டுக்கழகம் எதிர் கோப்பாய் வி.க (மாலை 4.30 மணி)*

*(த-23)*

# கிளிமஞ்ரோவுக்கு பயணமாகிறார் நவரத்திலோவா



விளையாட்டுத் துறையில் நல்லெண்ண அறக்கட்டளைக்கு நிதி திரட்டுவதற்காக முன்னாள் டெனிஸ் வீராங்கனை மார்டினா நவரத்திலோவா ஆபிரிக்காவின் மிக உயரமான மலை உச்சியான கிளிமஞ்சரோ சிகரத்திற்குப் பயணம் மேற்கொள்கிறார்.

செக். குடியரசு நாட்டைச் சேர்ந்த முன்னாள் உலகின் நம்பர் 1 வீராங்கனையாக இருந்த மார்டினா நவரத்திலோவா (54 வயது) தற்போது மார்புப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், கென்யாவைச்சேர்ந்த இளைஞர் விளையாட்டு சங்கத்தின் நல நிதிக்காக ஆபிரிக்கா நாடான தான்சானியாவிலுள்ள மலை உச்சியான கிளிமஞ்சரோ சிகரத்திற்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். இவருடன் ஜேர்மனின் நட்சத்திர சைக்கிளோட்ட வீரர், பரிட்டனில் பட்மின்ரன் வீரர்கள்,பாரா ஒலிம்பக் வீரர்கள் என 27 பேர் கொண்ட குழுவினர்களுடன் 6 நாள்கள் பயணமாக கிளிமஞ்சரோ சிகரம் (5985 மீற்றர்) 19,341 அடி உயரம் செல்லவுள்ளனர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிஸ் அபார இரட்டைச் சதம் வலுவான நிலையில் தென்னாபிரிக்கா



இந்திய தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி 190 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்துள்ளது.

முதலாவது இன்னிங்ஸில் 136 ஓட்டங்களைப் பெற்றநிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 620 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக் கொள்வதாக நேற்று அறிவித்தது.

366 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்கள் இழந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தெடங்கிய தென்னாபிரிக்க அணி ஜக்கலிஸின் அபார இரட்டைச் சதத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது.

தென்னாபிரிக்க அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக கலிஸ் ஆட்டமிழக்காமல் 201 ஓட்டங்களைக் குவித்தார். அம்லா 140 ஓட்டங்களையும் டீ வில்லியர்ஸ் 129 ஓட்டங்களையும் பீர்ரஸன் 77 ஓட்டங்களையும் சிமித் 62 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

இந்திய அணி சார்பாக பந்து வீச்சில் இசாந் சர்மா மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தென்னாபிரிக்க அணியை விட 484 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சேவாக் மற்றும் கம்பீர் ஆகியோரது அரைச் சதத்தின் உதவியுடன் ஓரளவு ஸ்திர நிலையை அடைந்தது. இதில் கம்பீர் 80 ஓட்டங்களுடன் ஸ்ரெய்யினின் பந்து வீச்சில் எல்.பீ.டபள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.சேவாக் 63 ஓட்டங்களுடன் ஹரிஸின் பந்து வீச்சில் ஸிமித்திடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது டிராவிட் 28 ஓட்டங்களுடனும் நைர் வோச்மனாக களமிறங்கிய இசாந் சர்மா 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

விளையாட்டு அரங்குகளில்

# 2011 உலகக் கிண்ண நுழைவுச் சீட்டு அமோக விற்பனை

ஐ.சி.சி. உலக வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டிக ளில் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான போட்டிக்குரிய நுழைவுச் சீட்டுக்கள் துரிதமாக விற்பனையாகி வருவதாகவும் மேலும் சில நுழைவுச் சீட்டுக்களே பதிவுக்கென எஞ்சியுள்ளன என்றும் இலங்கையிலுள்ள ஐ.சி.சி.செயலகம் அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இரவு பகலாக நடைபெறும் இந்தப் போட்டி மார்ச் மாதம் 05ஆம் திகதி கொழும்பில் நடைபெறும். சுற்றுலாவின் 20ஆவது ஒருநாள் ஆட்டம் இதுவாகும். இந்தப் போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்களின் கோரிக்கை தீவிரமாக உள்ளதாகவும் ஏனைய போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டுக்களும் துரிதமாக விற்பனையாகி வருவதாகவும் ஒருங்கமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வெற்றிக்கிண்ண தொடர் சுற்றுப்போட்டி முகாமையாளர் கபில தந்தெனிய கருத்து வெளியிடுகையில்:

இலங்கையில் நடைபெறவிருக்கும் மாபெரும் சர்வதேச நிகழ்வு இது என்பதனால் கடந்த சில வாரங்களில் அதிக எண்ணிக்கையான கிரிக்கெட் ரசிகர்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்று கூறினார். இலங்கையில் இடம்பெறும் சகல போட்டிகளுக்குமான நுழைவுச் சீட்டுகள் துரிதமாக விற்பனையாகி வருவதாகவும் உள்ளூர் ரசிகர்களைத் தவிர சர்வதேச கிரிக்கெட் ரசிகர்களும் பெருமளவு அக்கறையை காண்பித்து வருகின்றார்கள் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் நடைபெறும் 12 போட்டிகளுக் குமான பதிவுகள் தற்சமயம் மேற்கொள்ளப் படுகின்றன. நுழைவுச் சீட்டுகள் துரிதமாக விற்பனையாகி வருவதனால், கிரிக்கெட் ரசிகர்கள் இயன்றளவு விரைவில் பதிவுகளை மேற்கொள்ளும் படி ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். கண்டியில் பள்ளேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலும் அம் பாந்தோட்டையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக் கெட் மைதானத்திலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

கொழும்பில் இலங்கை கிரிக்கெட் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள 2011 ஐ.சி.சி. உலக வெற்றிக்கிண்ண உத்தியோக பூர்வ செயலகத்தில் நுழைவுச் சீட்டுக்களுக்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

நுழைவுச் சீட்டுக்கள் ரூ.30 இல் இருந்து ரூ.2500 வரை உள்ளன. ரூ.5,000 ரூ.10,000 இற்கு அதிவிசேட பிரிவு ஒதுக்கீடு செய்யப்படவிருக் கிறது. எந்தவொரு தனி நபரும் ஆகக்கூடியதாக 4 நுழைவுச் சீட்டுக்களையே பெற்றுக்கொள்ளலாம்.

10ஆவது உலக வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டியை இந்தியா, பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகள் பெப்ரவரி 19 இலிருந்து ஏப்ரல் 02ஆம் திகதி வரை இணைந்து நடத்தவிருக்கின்றன. 43 நாட்கள் நீடிக்கும் 49 கிரிக்கெட் போட்டிகள் புதியதொரு அட்டவணையின் அடிப்படையில் இடம்பெறும். ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி மும்பாயின் வான்கடே மைதானத்தில் இடம்பெறும் இறுதிப்போட்டி உட்பட 29 போட்டிகளை இந்தியா நடத்தவிருக்கிறது. இலங்கையில் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாகும்- என்றார்.



ஸ்பெயினின் மட்ரிட் நகரில் நடந்த ஐரோப்பிய லீக் கால்பந்து தொடரின் லீக் போட்டியில், கிடாபெ அணி 1-0 என்ற கோல் கணக்கில் யங்பாய்ஸ் அணியை வீழ்த்தியது. பந்தை தட்டிச் செல்ல போராடிய இரு அணி வீரர்கள்.

# உலக்கிண்ண இந்திய உத்தேச அணி

INDIA

இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் இணைந்து அடுத்த ஆண்டு உலககோப்பை (50 ஓவர்) கிரிக்கெட் தொடரை நடத்துகின்றன. இத்தொடர் வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி முதல் ஏப்ரல் 2ஆம் திகதி வரை நடக்க உள்ளது. இந்த முறை இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இலங்கை, பங்களாதேஷ், இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, பாகிஸ்தான், சிம்பாவே, கனடா, கென்யா, அயர்லாந்து மற்றும் நெதர்லாந்து அணிகள் விளையாட உள்ளன.

இத்தொடரில் பங்கேற்க உள்ள அணிகள், 30 பேர் கொண்ட உத்தேச அணியை அறிவிக்க நேற்றுக் கடைசி நாள் என அறிவித்திருந்தது [illegible] தேர்வுக் குழு தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையில், இந்திய உத்தேச அணி நேற்று அறிவிக்கப்பட்டது.


அணி வருமாறு: டோனி (கப்டன்), சச்சின் டெண்டுல்கள், சேவக், கம்பீர், விராத் கேஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், முரளி விஜய், ரோகித்சர்மா,சவுரப் திவாரி, ஹர்பஜன் சிங், ஜாகிர் கான், பார்த்திவ் படேல், சகா, தினேஷ் கார்த்திக், யூசுப் பதான், ரஹானே, சிகர் தவான், புஜாரா, அஷ்வின், ஸ்ரீசாந்த், பரவீண் குமார், அமித் மிஸ்ரா, ரவிந்திர ஜடேஜா, நெஹ்ரா, இஷாந்த் சர்மா, வினய் குமார், பயுஸ் சாவலர், பரக்யான் ஓஜா மற்றும் முனைப் படேல்.

# உலகக் கிண்ணப் போட்டிக்கு இலங்கை மைதானங்கள் தயார்

2011 இல் இலங்கையில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்காக திருத்தியமைக்கப்பட்டு வரும் கேத்தாராம விளையாட்டரங்கின் திருத்தப் பணிகள் முடிவடையும் தறுவாயிலிருப்பதாகவும் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்குமிடையில் விளையாட்டரங்கை பொறியியல் நிர்மாணத்துறை அமைச்சிடமிருந்து பொறுப்பேற்கப்படவிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை கேத்தாராம விளையாட்டரங்கத் திருத்த வேலைகளை பார்வையிட அமைச்சர்கள் விமல் வீரவன்சவும் மகிந்தானந்த அளுத்கமகேயும் சென்றனர். இப்போது விளையாட்டரங்கு திருத்தி முடிவுறும் தறுவாயில் இருப்பதாகவும் அடுத்த வருடம் எந்தவித தடங்கலுமின்றி உரிய திகதிகளில் உலகக் கிண்ணப் போட்டிகளை இந்த விளையாட்டரங்கில் நடத்த முடியுமெனவும் அதற்குச் சமாந்தரமாகப் போட்டிகள் நடைபெறவுள்ள ஏனைய விளையாட்டரங்குகளும் தயார்படுத்தப்பட்டு வருவதாகவும் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறுர். அமைச்சர்களுடன் இலங்கை கிரிக்கெட்சபைத் தலைவர் டி.எஸ்.டி.சில்வா,அரசு பொறியியல் கூட்டுத்தாபனத் தலைவர் ஆஷ மாரசிங்க ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

## பெர்த் டெஸ்டில்....



பெர்த் டெஸ்டில், ஆஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க்கை போல்டாக்கிய மகிழ்ச்சியில் இங்கிலாந்தின் டிரம்லட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் (பல்கலைக் கழகத்துக்கு அருகில்) 1/2 பரப்புக் காணியில் 3 அறைகள், 2 ஹோல், சமையல் அறை, குளியல் அறை என்பவற்றுடன் அமைந்த வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 3734352, 077 2913008


# வேலணை கடற்கரையில் ஒதுங்கிய டொல்பின்கள்!

யாழ்ப்பாணம், டிசெ.19

வேலணை துறையூர் கடற்கரையோரத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 10இற்கும் அதிகமான டொல்பின் மீன்கள் உயிருடன் கரையொதுங்கின.

டொல்பின் மீன்கள் கரையொதுங்குவதைப் பார்வையிட்ட பெருந்திரளான மக்கள் துறையூர் கடற்கரையில் திரண்டிருந்ததை கேள்வியுற்ற வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் அவ்விடத்துக்கு வந்து தொந்தரவு கொடுக்காமல் இருக்குமாறு அவர்களை அறிவுறுத்தினார்.

பின்னர் பொலிஸார் மற்றும் படையினரின் ஒத்துழைப்புடன் டொல்பின்கள் அனைத்தும் ஆழ்கடலில் பத்திரமாக விடப்பட்டன. (ஓ-7)


## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg க்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய Bahiraha புறொயிலர் குஞ்சுகள் 22.12.2010ஆம் திகதி விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே:021 222 2867, 0776090926





ஜெய் குருதேவ்

THE ART OF LIVING

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் இலங்கைக்கான வருகையை முன்னிட்டு சிறப்புப் பயிற்சிகள் (பாகம் 1)

மூச்சுப் பயிற்சி, சுதர்சன கிரியா, தியானம், யோகா

**அறிமுக உரை**

இடம்: ரஸிக ரஞ்சன சபா மண்டபம், வண்ணை அரசடி விநாயகர் ஆலயம், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 20.12.2010
நேரம்: மாலை 5 மணி

*குறிப்பு: ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்கான சுதர்சனகிரியா*
*இடம்: 132 பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
*காலம்: 19.12.2010*
*நேரம்: காலை 6.40 மணி*

தொடர்பு: 0770474757


## கண்ணகை அம்மனுக்கு நாளை சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்.வண்ணார்பண்ணை அரசடி வீதி, இந்துக் கல்லூரி ஒழுங்கையில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மகா சங்காபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று, அம்பாள் கிராம வீதி வலம் வருவார். (ஓ)


# KECC

Where Your Child's Dream Comes True!

Periya Arasady, Chavakachcheri.

Grade 6 to 9
English Medium Classes.

*Maths *History
*Science *Health Science

Classes Commence on
20th Dec 2010
Monday at 10 a.m. Director



# STUDY IN U.K. (no needs IELTS) AND CANADA

இறுதி சந்தர்ப்பம்

- Jan & Feb Intake.
- 3 நாள்களில் கல்லூரி அனுமதி.
- குறைந்த செலவில் Sponsor வசதிகள்.
- கல்வித் தகைமை G.C.E. O/L.
- பிரபலமான சட்டத்தரணிகள் ஆலோசனை.
- 100 சதவீதம் விசா உத்தரவாதம்.

SKILL MIGRATION IN AUSTRALIA
(Doctor, Engineer, Accountant and IT Degree holder.)

தொடர்புக்கு:-

JAFFNA BRANCH
82/12 A, CHETTY STREET NALLUR.
Phone:- 0774454646 / 0777849853.

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
NO. 22A, Frankfort place, Bambalapitiya, colombo - 04, Sri Lanka.
Tel: 011 2508443 / Mbo: 0777849853
Web: www.etbclanka.com / e-mail: etbc@etbclanka.com


## வருடாந்த நத்தார் விழா

யாழ்ப்பாணம், டிசெ.19

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன கிறிஸ்தவ நிறுவனம் நடத்தும் வருடாந்த நத்தார் தின விழா இன்று காலை 8.30 மணியளவில் யாழ். சீனியர் ஒழுங்கையில் உள்ள செவிப்புலனற்றோர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பரிசில் வழங்கலும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-9)

## சிங்கள சான்றிதழ் நெறி மீட்டல் பரீட்சை

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சிங்களச் சான்றிதழ் கற்கை நெறி மாணவர்களுக்கான மீட்டல் பரீட்சை இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் என்று பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (201)


## கண்ணீர் அஞ்சலி

கடந்த 19.11.2010 அன்று இறைபதமெய்திய, எமது நண்பர் த.டெஸ்மன்ட் தவஷிரோஜன் (பொது சுகாதாரப் பரிசோதகர் - சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு அப்பம்மா

திருமதி சிவகுரு கதிராசிப்பிள்ளை (பாக்கியம்)



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*அலுவலக நண்பர்கள்,*
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி.



## வீடு வாடகைக்குத் தேவை

7பேர் கொண்ட குடும்பத்துக்கு பருத்தித்துறை, சாரையடி, மாலுசந்தி, மந்திகை, நெல்லியடி ஆகிய பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 2487653, 071 6182182



## TUITION

A graduate in English with good experience in the teaching of English wishes to offer tuition Prefers of make home visits. Contact: 0778002075



## LAND FOR LEASE IN JAFFNA TOWN

2½ பரப்புக் காணி குத்தகைக்கு விட உண்டு. சிராம்பியடி லேனில் Cozy உணவகத்திற்கு முன்பக்கமாக சிறிதளவு வடக்கில்.

தொடர்புக்கு- கனக நாகநாதன், சட்டத்தரணி, திருநெல்வேலி வடக்கு, குகன் பெற்றோல் செற் அருகில்.
தொலைபேசி- 0212228174



## ஒத்து மாறல்

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கடமை புரியும் பயிற்றப்பட்ட ஆரம்ப ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணம் அல்லது வலிகாமம் கல்வி வலயத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார். உடன் தொடர்புகொள்ளவும்.

T.P- 0777393720


## குருநகரில் நேற்று ஒரு கிலோ மீன் ரூ.100

குருநகரில் வெள்ளோரா மீன் நேற்று மிக மலிந்த விலையில் விற்கப்பட்டது ஒரு கிலோ மீன் 100 ரூபாவில் இருந்து 70 ரூபா வரை போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாக்கடலில் கற்கட தீவு பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளர்களுக்கு பெருந்தொகையான வெள்ளோரா மீன்கள் பிடிபட்டதைத் தொடர்ந்தே மீனின் விலை நேற்று மிகவும் மலிவாகக் காணப்பட்டது.

பருவப்பெயர்ச்சி மழை மற்றும் காற்றுக் காரணங்களால் வருடாவருடம் இவ்விதம் பெரும் கூட்டமாக மீனினங்கள் பிடிபடுவது வழக்கம் என மீனவர்கள் தெரிவித்தனர். (ஓ-160)


## மரண அறிவித்தல்

*திருமதி சண்முகநாதன் அன்னம்மா (பூமணி)*



கல்வியங்காடு, ராஜவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் அன்னம்மா நேற்று முன்தினம் (17.12.2010) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை -சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், சத்தியநாதன்(கனடா), ரஞ்சனாதேவி(கனடா), சதானந்தன், ஸ்ரீநாதன்(ஜேர்மனி), சாந்தனா தேவி (கனடா), சிலோசனாதேவி(கனடா), வசந்தனாதேவி (லண்டன்), றெஜினாதேவி (கனடா), ரவீந்திரன் (கனடா), சுபத்திராதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேதீஸ்வரி, புவனேந்திரன், காலஞ்சென்ற யோகராணி மற்றும் விஜயவதனி, ரதி, ஹீஸ்கந்தராசா, பேரானந்தன், பாலச்சந்திரன், ஜெகநாதன், சுதர்சினி, கமலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேஸ்வரி, மங்கையர்க்கரசி, செல்வராஜா, பராசக்தி, சகுந்தலாதேவி, காலஞ்சென்ற தங்கராஜா மற்றும் யோகராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகன் கோயில் முன்பாக, ராஜ வீதி, கல்வியங்காடு.* (107637)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் (லண்டன், கனடா, ஜேர்மனி)



## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியில் 2 3/4 பரப்பில் சகல வசதிகளும் கொண்ட வீடு, வளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0112 715130
M.மகாதேவா 077 9775017



## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு ஆடியபாதம் றோட் (ஸ்ரேசன் றோட்) சரஸ்வதி மில்லுக்கு அருகில் 2 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. T.P- 0777891475.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பும்

## அமரர் நாகலிங்கம் ஜெயரட்ணம்



கடந்த 20.11.2010 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும் நாளை (20.12.2010) திங்கட்கிழமை இல.651, நாவலர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னார் இறைபதம் அடைந்தசெய்தி கேட்டு நேரிலும், தொலைபேசியிலும், பல்வேறு வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்த சகல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

[இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்] குடும்பத்தினர்.
651, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தோற்றம்: 26.11.1949
மறைவு: 20.11.2010



## SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.

A/L DAY CLASS - 2011
* B.St - B.S.பசீல் B.B.A
* ACC - S.தவா B.Com (Hons.) ACC.Spl
* ECON - V.ஞானவேல் B.B.A

அரசியல்
S.S.செந்தூரன் B.A. (Hons) Pol.sc.spl

புதிய கல்வியாண்டு 2011
English Med. 6 to 11



## இலகுவான இறுதி சந்தர்ப்பம் இதோ!...

# Study/ Work / Live in UK/ India

January & February Intake

O/L- English C உடன் A/L Pass எனில் Processing Charge முற்றும் இலவசம்

* Highly Trusted, A Grade College களில் Admission
* IELTS தேவையான எமது மாணவர்களுக்கு இலவச Individual Classes.
* Sponsor நிதி ஆலோசனைகள்

தொடர்புக்கு:
BFC Services
01, Brown Road, Jaffna.
T.P: 0213206826, 0755518040, 0772266889.
Email: bfcservice@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவின்றி இயங்கும் 75 சிறுவர் இல்லங்கள்

கொழும்பு, டிசெ.19

உரிய பதிவுகளை மேற்கொள்ளாமல் சுமார் 75 தன்னார்வ சிறுவர் நிலையங்கள் இதுவரை நாடெங்கும் இயங்கிவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

பதிவு செய்வதற்குத் தேவையான அடிப்படை ஆவணங்கள், நற்சான்றிதழ்கள் ஆகியவற்றில் ஏற்படும் காலதாமதங்கள், அக்கறையின்மை ஆகிய காரணங்களால் இந்தச் சிறுவர் நிலையங்களின் பதிவுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரியவருவதாக சிறுவர் பாதுகாப்புத் திணைக் கள ஆணையாளர் சரத் அபே குணவர்த்தன தெரிவித்தார்.

இவ்வாறு பதிவு செய்யப்படாத சகல இல்லங்களுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவையாவும் உரிய ஒழுங்குகளை மேற்கொள்வதன் மூலம் அடுத்த ஜனவரி மாதத்தில் பதிவு செய்து கொள்ளப்படவேண்டுமெனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களை அவற்றின் நிலைக்கேற்ப ஏ, பீ, சீ, டீ எனத் தரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அதற்கு ஏற்ப சீ, டீ தரங்களில் அமையும் இலக்கங்களை ஏ, பீ தரத்துக்கு உயர்த்தத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இதுவரை நாடெங்கும் 375 தன்னார்வ சிறுவர் நிலையங்கள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவையும் நிபுணர்கள் குழு சந்திக்கும் என பான் கீ மூன் கூறினார்.

தனக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த ஏற்பாட்டுக்கு வந்ததாகவும் அவர் தெரி வித்தார். ''இந்த விடயத்தில் ஜனாதி பதியின் நெகிழ்வுத் தன்மையை வரவேற்கிறேன்'' என்றார் ஐ.நா. செயலாளர்.

### இலங்கை எதிர்ப்பு

முன்னதாக, கடந்த ஜூலை மாதத் தில் ஐ.நா. செயலாளர் நிபுணர் குழுவை நியமித்த போது இலங்கை அரசு அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பதன் மூலம் நாட்டின் இறைமை யில் தலையீடு செய்கிறது ஐ.நா. என்று விமர்சித்தது. நிபுணர் குழுவினர் இலங்கைக்குள் நுவைதற்கு விஸா வழங்க முடியாது எனவும் தெரிவித்தது.

ஐ.நா. பொதுச் செயலரின் நடவடிக்கை குறித்துக் கடும் கோபம் அடைந்திருந்த இலங்கை அரசு, அமைச்சர் விமல் வீரவன்ஸ மூலமாகக் கடும் எதிர்ப்பை வெளியிடுவதற்கும் தயங்கவில்லை.

### தற்போது இணக்கம்

இலங்கை அரசு தற்போது தனது அந்த முடிவில் இருந்து மாறி உள்ளது. ''நல்லிணக்க ஆணைக் குழுவின் முன் தோன்றி யாரும் சாட்சியங்களை அளிக்கலாம் என்று கடந்த ஜூன் மாதமே அரசு விளம்பரங்களை வெளியிட்டிருந்தது. அந்த வகை யில் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க முன்வருபவர்க ளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவது அரசின் கடமை'' என்று வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச் செயலாளரின் நிபுணர் குழு, நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்க விரும்பி னால் அதற்கான முழு ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கை கூறியது. ''இந்தச் செய்தி இராஜ தந்திர வழிமுறைகள் ஊடாக ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரி யப்படுத்தப்பட்டுள்ளது'' - என்றும் அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

### விசாரணை இல்லை

நிபுணர் குழு இலங்கை வந்து நல்லிணக்க ஆணைக்குழு விடம் தனது விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிப்பதுடன், போர்க் குற்ற ஆதாரங்களையும் பகிர்ந்து கொள்ளும் என்றே அரச தரப்பு தெரிவிக்கின்றது.

நிபுணர் குழு இலங்கையில் தன்னிச்சையாக விசாரணை களை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்றே எதிர் பார்க்கப்படுகிறது.

குழு எப்போது இலங்கை வரும் என்ற திகதியும் தீர்மானிக் கப்படவில்லை. (உ)


## முக்கிய அறிவித்தல்

116, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தியில் இயங்கும் எமது கணேசா வாச் வேக்ஸ் தொழிலகம் வேறு இடத்திற்கு இடமாற்ற வேண் டியுள்ளதால் நீங்கள் திருத்துவதற்கு தந்த (கடிகாரம்) பொருள்களை இம் மாதம் 31ஆம் திகதி (31.12.2010)க்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு 0776248397 உரிமையாளர்.


## துயர் பகிர்கின்றோம்



யாழ். பிரதேச செயலகத்தில் J/66, J/67 (பதில்) கிராம சேவைப் பிரிவுகளின் கிராம அலுவலராகக் கடமையாற்றிய **மயில்வாகனம் சுந்தரலிங்கம்** அவர்கள்

*(தலைவர். வடக்குக் கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம், யாழ்மாவட்டம், முன்னாள் மாநகரசபை உறுப்பினர்)*

14.12.2010 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (107523)

கோ.விஜயகுமார் குடும்பம்,
ஜெ.பிரசன்னா ரூபன் குடும்பம்.

## உர விநியோகம்

தென்மராட்சி, டிசெம்.19

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கை யாளர்களுக்கான மூன்றாம் கட்ட மானிய உரம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மீசாலை புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்க படுமென அமைப்பின் தலைவர் கா.வேத நாயகம் அறிவித்துள்ளார். (ஐ-207)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.19

மாபெரும் தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கு யாழ். மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை திங்கட் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற் பகல் 12.30 மணிவரை நடைபெறவுள் ளது.

நாட்டின் முன்னணி கல்வி சாரார்ளர் கள், தொழில்சார் வல்லுநர்களால் கலந்து ரையாடல் நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

இதில் கலந்து சரியான தொழிலை தெரிந்தெடுப்பதற்கு உதவும் என்ற வகையில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படு கின்றது. (ஐ-311)

## பரிசளிப்பு விழா

துன்னாலை, டிசெ.19

துன்னாலை கோயிற்கடவை சன சமூக நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் சித்திவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

சன சமூக நிலைய முன்பள்ளி இணைப் பாளர் ச.உருத்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தின ராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-9)

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் கடந்த புதன்கிழமை இரவு மரண மடைந்து விட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசா ரணை செய்த மானிப்பாய் பொலிஸார் இரண்டு சிப்பாய்களையும் இரு பொது மக்களையும் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன் றம் உத்தரவிட்டது. (ஒ-ஐ)

### திருத்தி வாசிக்கவும்

கடந்த 17ஆம் திகதி 26ஆம் பக்கத்தில் வெளியான ''இதயம் நெகிழ்ந்த கண்ணீர்க் காணிக்கை'' என்ற தலைப்பிலான விளம்பரத் தில் தகவல் தெரிவிப்பவர்களின் விவரத்தில் க.மகாலிங்கம் என்பவரின் பெயர் தவறிவிட் டது. அதைத் திருத்தி வாசிக்கவும்


**கல்வி** A/L 2011,2012 PHYSICS, COM. MATHS,

ஆகிய பாடங்கள் மீட்டல் வகுப்புகள் தனி யாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 4233845

### வீட்டுப் பணிப்பெண் தேவை

கந்தர் மடம், பலாலி வீதியிலுள்ள வீடு ஒன் றிற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய 25 வயதிற்குட்பட்ட பணிப் பெண் தேவையாக உள்ளது. தகுந்த சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக் கப்படும். விருப்பமுடையவர்கள் தொடர்பு [illegible]

தொலைபேசி இல:- 0759392379


## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2332ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "T" என்ற ஆங்கில எழுத் தும் 8/7/6/8/9/7 என்ற இலக்கங்களும் அதிர்ஷடத்துக்குரி யனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

8/7/6/8/9/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/6/8/9/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/8/9/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 138 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/9/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,357 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

9/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,429 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

7 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,32,831 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 8/7/6/8/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள் ளது.

8/7/6/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 134 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

8/7/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,365 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,330 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"T" என்ற ஆங்கில எழுத்தை மட் டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 53,034 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ஒ)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் சர்வானந்தராஜா

(ஓய்வுபெற்ற தொழில்நுட் பவியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், அரியா லையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம் பலம் சர்வானந்தராஜா காலமாகி விட்டார்.

அன்னார் பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் பரமேஸ் வரிதேவியின் அன்புக் கணவரும் கிருஷ்ண பிருந்தா, சர்வப்பிரகாஷ் ஆகியோரின் பாச மிகு தகப்பனாரும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர் களான நாகராஜா, தியாகராஜா, சவுந்தலாதேவி, திரௌபதா தேவி மற்றும் தேவராஜா பத்மாதேவியின் பாசமிகு சகோதர ரும் காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் விஜயகுலசிங்கம் (கனடா), செகராஜசிங்கம், ராஜகுலசிங்கம், இராஜேஸ்வரி, சுமதி (நோர்வே), மகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் 120/15, புகையிரத நிலைய வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவு டல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

*தொ.பே.: 0776590485*

### திருமதி தர்மலிங்கம் யோகேஸ்வரி



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் யோகேஸ்வரி நேற்று (18.12.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லை யம்பலம் - தங்கம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் (ஓய்வுபெற்ற சிறாப்பர், இலங்கை வங்கி) அன்பு மனைவியும் தெய்வேந்திரம், தேவதாசன் (ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சியாமளா (கனடா), பிரேமிளா (சுவிஸ்), உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சீவரத்தினம், ஜெகதீஸ்வரன், பவானி ஆகியோரின் அன்பு மாமியும் கேசவன், விஷால், தாரணி, திஷிகேசன், தாட்சாயினி, திரிசங்கவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: உதயகுமார் (மகன்).

*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஐடியல் அக்கடமி

சிறுப்பிட்டி சந்தி, சண்டிலிப்பாய். | கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

### A/L - DAY CLASS

தமிழ் : A.K. கீர்த்திராஜன்
T. அஜந்தகுமார் (வடமராட்சி முன்னணி ஆசிரியர்)
இந்துநாகரிகம் : T. ஸ்ரீஸ்
நாடகமும் அரங்கியலும் : K. சுதா
அளவையியல் : E.S. பவன்
அரசியல் : S. கோகுலன்
வரலாறு : R.S. சந்திரன்
புவியியல் : Y. ஆனந்தன்

ஆரம்பம் : 20.12.2010 (திங்கள்)
நேரம் : 2 P.m

## அச்சுப்பதிப்பு செய்திடலாம் 12/=
## 2011 ஆம் ஆண்டு கலண்டர்கள்

யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ் றோட், யாழ்.

## நுளம்புக் குடம்பிகளை ஒழிக்க மீன்குஞ்சுகள்; தென்மராட்சி மக்கள் ஆர்வத்துடன் வாங்கினர்

தென்மராட்சி, டிசெ. 19

நீர்நிலைகளில் உருவாகும் நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் மீன்குஞ்சு வகைகளை பெற்றுக்கொள்ள நேற்று தென்மராட்சிப் பிரதேச மக்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்தனர்.

டெங்கு நுளம்பு பிரதேசத்தில் பரவாமல் தடுப்பதற்கு மக்கள் ஆர்வத்துடன் மீன் குஞ்சுகள் வாங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

மீன் குஞ்சு விநியோகம் தொடர்ந்து விநியோகம் நடைபெற வுள்ளதால் மீன் குஞ்சுகள் தேவைப்படுவோர் தமது பெயர்களைச் சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையில் பதிவு செய்து பிரதி சனிக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிலாப்பியா, கச்சக்கொட்டியான் போன்ற மீன் குஞ்சு வகைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.(ஒ-207)

## ரிஜூசன்

G.C.E (O/L) CHIEF EXAMINER ஆக 11 வருடங்கள் அனுபவமுடைய ஆசிரியர். முன்னணி ஆசிரியர் SCIENCE, MATHS ஆகியன ENGLISH/TAMIL மொழிமூலம் 6-11 வரை "A" சித்தியை உத்தரவாதப்படுத்தி வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 0772453963, 0773614194 after 7 P.m

## கடையும் வீடும் விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு:- Te. No - 0718454025

## இறைச்சிக் கோழி விற்பனை

இறைச்சிக்குரிய புறொயிலர், கல்பேர்ட்ஸ், சேவல் என்பன வேண்டிய அளவுகளில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக்கழிவு உண்டு.

(1 Kg சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் 440/= மட்டும்)

தொடர்பு : மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.

## A/L - DAY CLASS

கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்

ஆரம்பம் : 20.12.2010 (Mon. 8.00)
நேர அட்டவணை அலுவலகத்தில்

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு / குத்தகைக்குத் தேவை

பிரபல்யமான கம்பனி தனது கிளையினை யாழ். நகர மையப் பகுதிக்குள் ஸ்தாபிப்பதற்கு 40 அடி அகலமும் 80 அடி நீளமுமான வாகனத் தரிப்பிடமும் கொண்ட கட்டடம் அவசியமாக உள்ளது.

தொடர்பு : T.P 0772620842

## பிரத்தியேக வகுப்பு

அனுபவம் மிக்க ஆசிரியர்களினால் தனியாகவோ / குழுவாகவோ வீடு வந்து கற்பிக்கப்படும்

தொடர்புகளுக்கு :

பௌதீகவியல் 0773405973
இணைந்த கணிதம் 0775581600

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 19

தம்பசிட்டி பாடசாலையின் அதிபர் திருமதி பொ.ரட்ணசோதி தலைமையில் திருவாசக முற்றோதல் இன்று ஞாயிற்றுக்கிழமை அத்தியடி முதலியம்மன் ஆலயத்திலும், நாளை திங்கட்கிழமை பளவத்தை காளி கோயிலிலும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்திலும் நடைபெறவுள்ளது.

(ஒ-9)

## மட்டக்களப்பில் தேவார பாராயணம்

யாழ்ப்பாணம், டிசெ. 19

உலக அமைதி மற்றும் ஒற்றுமைக்காக வாழும் கலை நிறுவனத்தினர் வரலாற்றுச் சிறப்பு மிக்க தேவார பாராயண நிகழ்வொன்றை மட்டக்களப்பில் ஒழுங்கு செய்துள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 22ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு மட்டக்களப்பு வெபர் அரங்கில் இந்த நிகழ்வு இடம் பெறவிருக்கின்றது.

மேற்படி நிகழ்வில் 11 ஆயிரம் பேர் ஒரே மேடையில் ஒன்றாக இணைந்து தேவாரத்தைப் பாராயணம் செய்யவுள்ளனர்.

## விற்பனை பிரதிநிதி (Sales Representative) தேவை

இலங்கையில் முதற்தர விற்பனையில் முன்னோடிகளான Vimal Brand தயாரிப்புக்களை யாழ் குடா நாட்டில் விநியோகிப்பதற்கு 2,3 வருட அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதி (Sales Representative) தேவை.

gbnads

தொடர்புகளுக்கு

S.V. MURUGESU (S.V.M)
154, HOSPITAL ROAD,
JAFFNA. Tel: 021-2228899

## Orbitrack விற்பனைக்கு!



9,000/=
POWER GYM

218, கோயில் வீதி, யாழ்ப்பாணம். | 38, உடுவில் வீதி, மானிப்பாய். | 230 A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 772933022

## வாருங்கள்... விடுதலைப் பெருவிழா இலவசம்!!!

கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின்பிடி, பில்லி-சூனியக்கட்டு, பரம்பரை சாபங்கள் ஆகியவற்றிலிருந்து

### இயேசு விடுதலை கொடுக்கிறார்....

இடம்: நாற்சதுர வளாகம், பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்
காலம்: மார்கழி 20ம், 21ம், 22ம் திகதிகளில்
நேரம்: தினமும் மாலை 4 மணி

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.11:28)

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, 673 பருத்தித்துறை வீதி, நல்லூர்.

கடந்த விடுதலைப் பெருவிழா நாட்களில் அனேக மக்கள் அற்புத விடுதலையைப் பெற்றார்கள்

## வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்

ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

உங்களித்தான அன்பளிப்புக்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்

கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள்
உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD
மற்றும் சகல விதமான பொருட்களையும்
மிக விரைவாக அனுப்பிடலாம்

DHL WORLDWIDE EXPRESS

திருமுருகன் கொம் நெற்
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

➤ TCN Express
No-2B, Nelson Place, Colombo-6
➤ இல-46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. ➤ பிரதான வீதி, நெல்லியடி.
➤ இல-6, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. ➤ 4, மில் றோட், வவுனியா.

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புகளும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna. (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்

GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

குறிப்பு : மார்ச் மாத ஜேர்மன் எம்பஷி பரீட்சைக்கான புதிய வகுப்புகள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
பதிவுகளும் தற்சமயம் மேற்கொள்ளப்படுகின்றன.
(சி/573237)

## அறியத்தருகிறோம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படும் பல்கலைக்கழக முதல்படிவம் (University First Form) விற்பனை செய்வதற்கு யாழ். மாவட்ட முகவராக எமக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இனிவரும் காலங்களில் எம்மிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

அன்னை புத்தகசாலை,
இல. 7, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
021 222 9881
(சி/573222)

## NALIN INFORMATION TECHNOLOGIES Pvt Ltd

நளினின் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை முன்னிட்டு விசேட விலைகளில் intel CORE i3 smart கணனிகள்

| | |
|---|---|
| PROCESSOR | - CORE i3 |
| MOTHERBOARD | - INTEL 55 CHIP |
| RAM | - KING/ 2GB/DDR3(1333) |
| HARD DISK | - SAM/ 500GB |
| DVD WRITER | - SAMSUNG |
| MONITOR | - 19" SAMSUNG (LED) |
| KEYBOARD | - MULTI LANGUAGE |
| MOUSE | - SQUTE |
| CASING | - POWERLOGIC |

Free Offer
4GB kingston Flash(1y)
Computer Table
இவை அனைத்தும்

55,800/=

Free Offer
தேவையற்றோர்களுக்கு மேலும் விலைக் குறைப்பு

credit COMMERCIAL BANK வாடிக்கையாளர்கள் ஒரு வருட இலகு தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம்

மூன்று வருட உத்தரவாதத்துடன் உங்கள் இல்லங்களிற்கு இலவச நேரடி விநியோகம் (பொருத்துதல்) மற்றும்

விற்பனையின் பின் சிறந்தசேவை

### நளின் காட்சியறையில் Christmas Offer

Laptop மிகவும் மலிவான விலையில்

* CQ40 dual core- 56,000/=
* CQ 620 Core 2duo- 68,000/=
* Hp G62 Core I3- 79,000/= மட்டுமே

1 year Hp warranty வழங்கப்படும்

Micro soft ols குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

195/4, PARAMESWARA JUNCTION, JAFFNA.
TP: 021 2221166, 0777667974

NALIN information Technologies Pvt Ltd

## மரண அறிவித்தல்

### சின்னவர் வேலாயுதம்

(முன்னாள் உத்தியோகத்தர், தேயிலைத் தொழிற்சாலை, நுவரெலியா)



மூளாயைப் பிறப்பிடமாகவும் வேலணை, சரவணையை வதிவிடமாகவும் தற்போது கண்டியில் வசித்துவந்தவருமாகிய சின்னவர் வேலாயுதம் நேற்றுமுன்தினம் (17.12.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சின்னவர் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), நாகலிங்கம், காலஞ்சென்றவர்களான சின்னாச்சிப்பிள்ளை, வள்ளியாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கம்மாவின் பாசமிகு கணவனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் கீதாஞ்சலி, கலாநிதி சிவகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர், விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), சுதாஞ்சலி (ஆசிரியை, பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி), சுரேஸ்குமார் (இலங்கை வங்கி பயணச்சேவை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாகரன், நளினி ஆகியோரின் அன்பு மாமனும் ராகுலன், சயூரி ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பேராதனையில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 45, கங்கதெனிய,
அங்குனாவெல,
பேராதனை.
(சி/573227)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.
0776139005, 0813810585,
0772849535

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org